# தமிழரசு

16-8-1976 50 காசு



# அரசு – மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லேண்ட்
# சிமெண்ட்
# உங்களுக்குக்
# கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்
**ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்**

## அரசு – வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

# ஒன்றுபட்டு உழைப்போம்! ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவோம்!!

—ஆளுநர் உரை

நண்பர்களே,

இந்திய விடுதலை நாளான இன்று தமிழ் நாட்டு மக்களுக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டின் சுதந்திர உரிமையையும், ஒருமைப்பாட்டையும் போற்றிப் பாதுகாப்பதற்கு நம்மை நாமே மீண்டும் அர்ப்பணித்துக் கொள்ளத் தக்க சமயமாகும் இவ்விடுதலை நாள். வலிவும் வளமும் மிக்க இந்தியாவை உருவாக்கும் முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்வதற்கான நமது உறுதியைத் தெரிவித்துக் கொள்வதற்குரிய நாளாகவும் திகழ்கிறது இவ்விடுதலை நாள்.

வேற்றுமையில் ஒற்றுமை கண்டு, கூட்டுக் கலாச்சாரமும் பொதுநோக்கமும் உடைய மக்களைக் கொண்ட இந்தியா எனப்படுவது—''ஆஸேது ஹிமாச்சலம்''—"சேது முதல் இமாசலம் வரை''—என்ற தொடர்மூலம் விளக்கப்படுகிறது. இது மூவாயிரம் ஆண்டுக்காலப் பழமை பெற்றதாகும். நாட்டின் பல்வேறு பகுதிகளின் கலாச்சாரம், மொழி ஆகியவற்றின் மறுமலர்ச்சி இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தினால் முனைப்புடன் ஊக்குவிக்கப் பட்டது. அந்தப் போராட்டத்தில் வங்காளம், மராட்டியம், பஞ்சாப் ஆகியவற்றோடு தமிழ்






தமிழரசு

மலர்: 7 16—8—1976 இதழ்: 4



# இன்றையத் தேவை

‘உற்பத்தியை கூட்டி, விநியோக அமைப்பை சீர்செய்து, சோசலிஸ்ட் திட்டங்களை அமல் செய்வது மட்டுமல்ல; எல்லாவற்றையும் விட நாட்டின் ஒற்றுமையை கட்டிக்காப்பதே முக்கியமானது.’

—இந்திரா காந்தி

## தேச நிர்மாணப்

பணியைத் தொடர்வோமாக—

davp-76/38

நாடும் முன்னணியில் நின்றது. லோகமானிய திலகர், லாலா லஜபதிராய், பிப்பின் சந்திர பால், ராஷ் பிகாரி போஸ் இன்னும் மற்றவர்கள் ஆகியோருடன் தமிழ்நாட்டில் மகாகவி சுப்ரமணிய பாரதியார், வ.வே.சு. ஐயர், வ.உ. சிதம்பரம் பிள்ளை ஆகியோரும், மற்றவர்களும் விடுதலைக் கொடியேந்தி, சுதேசி இயக்கத்தை மேற்கொண்டு, மகாத்மா காந்திக்கு உறுதுணையாக ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்துவதற்கும், மக்கள் சக்தியைத் திரட்டுவதற்கும் நல்லதொரு அடிப்படையை உருவாக்கினர்.

''தரித்திர நாராயணர்'' களான ஏழைகளோடு தம்மை இணைத்துக் கொள்வதற்கென காந்திஜி ஆடம்பர ஆடைகளை உதறி எறிந்து விட்டு, அரையாடை அணிய முடிவு செய்தது தமிழ்நாட்டில்தான்! தொடர்ந்து நவ இந்தியாவின் சிற்பிகளாகவும், விடுதலைப் போராட்டத்தில் காந்திஜியினுடைய தளபதிகளாகவும் [illegible] இராஜாஜி, சத்தியமூர்த்தி, சீனிவாச ஐயங்கார், காமராஜ் ஆகியோரும் மற்றும் பெருந்தலைவர்களும் தமிழ்நாட்டிலிருந்து முன்வந்தனர்.

தேசிய ஒருமைப்பாடு என்ற தொடர் வழக்கில் வருமுன்பே, இக்கோட்பாடு சுப்ரமணிய பாரதியாரால் தெளிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

''வெள்ளிப் பனி மலையின் மீதுலாவுவோம்-அடி
மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்

''வங்கத்தில் ஓடி வரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்.

''முத்துக்குளிப்பதொரு தென்கடலிலே
மொய்த்து வணிகர் பலநாட்டினர் வந்தே
நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே

''காசிநகர்ப் புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்

''வானையளப்போம் கடல் மீனையளப்போம்''

இவ்வாறெல்லாம் பாரதியார் அன்று கனவு கண்டார் இந்தியாவைப் பற்றி. இத்தகைய தொலைநோக்கு—புரட்சிகரக் கோட்பாடுகள் ஆகியவைகளிலே மட்டுமின்றி, விஞ்ஞான தொழில் நுட்ப சாதனைகளிலும் தமிழ்நாடு இந்தியாவுக்கு வளமை சேர்த்துள்ளது.

சி. வி. இராமன், இராமானுஜம், கே. எஸ். கிருஷ்ணன், சந்திரசேகர் ஆகியோர் இந்தியாவின் விஞ்ஞான வளர்ச்சிக்கு முன்னோடிகளாக விளங்கியோர் ஆவர். அணு மற்றும் விண்வெளி ஆராய்ச்சி ஆகிய துறைகளில் இந்தியா எய்தியுள்ள சாதனைகளில் தமிழ்நாட்டின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றைய உலகில், பல்வேறு சமுதாயங்களினூடே மையத்தை நோக்கிச் செல்லக்கூடிய சக்திகளும், மையத்திலிருந்து புற நோக்கிச் செல்கிற சக்திகளும் இயங்கி வருதலைக் காண்கிறோம். ஆயினும், சோவியத் யூனியன், ஐக்கிய அமெரிக்க நாடுகள் போன்று பெரியனவாகவும், கூட்டாக இணைந்தும் விளங்குகின்ற நாடுகள் மிக்க வெற்றியும், வல்லமையும் கொண்ட சமுதாயங்களாகத் திகழ்கின்றன. மேற்கு ஐரோப்பா போன்ற முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் சார்ந்த இதரபகுதிகள்கூடப் பெருமளவில் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் கொள்வதில் முனைந்துள்ளன. உலக மக்கள் தொகையில் ஏழில் ஒரு பகுதியைக் கொண்ட இந்தியாவிலும், நாம் கூட்டாக இணைந்த ஒரு சமுதாயமாக ஒருமைப்பாடுமிக்க சமுதாயமாகத்தான் விளங்குகிறோம். உலக அரங்கில் ஐக்கிய அமெரிக்க நாடுகள், சோவியத் யூனியன், சீனா ஆகிய நாடுகளின் வரிசையில் இடம் பெற நமக்கும் அருகதையுண்டு. இத்தகைய ஒரு நிலை ஏற்படவேண்டுமானால், மாநிலங்களுக்கும் இந்திய யூனியனுக்குமிடையே ஒருங்கிணைந்து செயல்படும் நல்லுறவு நிலவ வேண்டும். இந்த உறவு இருதரப்பினரையும் வளம் பெறச் செய்வதாகும்.

**நல்ல தமிழனாகவோ, நல்ல வங்காளியாகவோ, நல்ல பிகாரியாகவோ இல்லாத ஒருவன் எப்படி நல்ல இந்தியனாக இருக்க முடியாதோ, அதுபோலவே முதற்கண் நல்ல இந்தியனாக இல்லாதவன் தன்னை நல்ல தமிழன் என்றோ, நல்ல ஆந்திரன் என்றோ கூறிக் கொள்ள முடியாது!**

நமது ஒற்றுமை உணர்வு என்பது—நாம் ஒன்றாக இருந்து பகிர்ந்துகொள்ளும் வரலாற்று உணர்வு, ஒன்றியிருந்து உணரும் மகிழ்ச்சியும் துயரும், ஒருமித்து நின்று எய்தும் சாதனைகள்—ஆகிய அனைத்தாலும் உருவாக்கப்படுவதாகும். ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டதுபோல, வரலாறு தெரிந்த கடந்த 3,000 ஆண்டுகளாக இத்தகைய ஒருமைப்பாட்டு உணர்வை நாம் பெற்றிருந்தோம். நமது சுதந்திரப் போராட்டத்தின் போது இது மேலும் வலுப்பெற்றது. சுதந்திரம் பெற்ற கடந்த 29 ஆண்டுகளில் கட்டுக்கோப்பான அமைப்பை ஏற்படுத்தியுள்ளோம்.

இவைபோன்ற ஒன்றுபட்ட அனுபவங்களினால் உரம்பெற்று மகாத்மா காந்தி, மகாகவி பாரதியார், ஜவஹர்லால் நேரு போன்ற ஒப்பற்ற தலைவர்களின் பொதுநோக்கால் புத்துணர்வு பெற்று விளங்கும் நம் முன்னுள்ள இப்போதைய பணி, 29 ஆண்டுகளுக்கு முன்னர் நாம் சுதந்திரம் பெற்றபோது நமக்கென வகுத்துக் கொண்ட இலட்சியங்களை நோக்கி வேகமாக முன்னேறுவதேயாகும். இம்மாபெரும் பணியில், நாம் அனைவரும், குறிப்பாக இளைஞர் சமுதாயத்தினரும் இன்றைய நாளில் ஈடுபடுத்திக் கொள்வோமாக!

வணக்கம், ஜெய்ஹிந்த்!

**(1976-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15-ஆம் நாள் விடுதலை நாள் விழாவினையொட்டி தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் வானொலியில் ஆற்றிய உரை.)**

*அட்டைப்படம் : தாயின் மணிக்கொடி, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில் பட்டொளி வீசிப் பறக்கும் காட்சி !*



# நாளைய குடிமக்கள் நல்லவர்களாய் அமைய...


**ஆர். வி. சுப்பிரமணியன், ஐ.ஏ.எஸ்.,**

ஆளுநர் ஆலோசகர்.


நமது குழந்தைகளின் எதிர்காலமே பள்ளிக் கல்வியின் அடிப்படையில்தான் அமைந்திருக்கிறது. ஆகவே, பள்ளிக் கல்வியைத் தக்க வகையில் அமைப்பது மிகவும் முக்கியமானதாகும். இம்முயற்சியில் மாணவர், ஆசிரியர், அரசு அனைவருமே பங்காற்ற வேண்டியுள்ளது.

நமது நாட்டில் நிகழும் பெருத்த சமூகப் பொருளாதார மாற்றங்களைப் பள்ளியிலுள்ள இளம் நண்பர்கள் அறிந்துள்ளார்கள்என்பதில் எனக்கு ஐயமில்லை. இத்தருணத்தில் நமது தேசிய வரலாற்றில் மாணவர்கள் தங்களுக்காகவும், நாட்டுக்காகவும் செய்ய வேண்டிய பொறுப்புக்கள் மிகவும் முக்கியமானவைகளாகும். உடலையும், உள்ளத்தையும் வளர்ப்பதற்காக மாணவர்கள் தமது முழு நேரத்தையும் செலவிடுவதே, அவர்களுக்கும், நாட்டுக்கும் நல்லதென நம்புகிறேன். நம் சிறுவர்களும், சிறுமிகளும் முழுமையாக வளர வேண்டும். நமது சுதந்திரக் குடியரசின் குடிமக்களாகப் பொறுப்பேற்கத் தக்க வகையில் அவர்களை ஆக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே நம் கல்விக் கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன.

**இருபது அம்சத் திட்டமும், இளைய தலைமுறையினரும்**

நமது சமுதாயப் பொருளாதார வளர்ச்சித் திட்டத்தில்-அதாவது நமது மதிப்பிற்குரிய பிரதமர் சமர்ப்பித்துள்ள 20 அம்சத் திட்டத்தில்-மாணவரின் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும் என்று சிறப்பாக வலியுறுத்தப்பட்டுள்ளது. 20 அம்சத் திட்டம் பற்பல நோக்கங்களுக்கிடையில், புத்தக வங்கிகளை அமைக்கவும், நிர்ணயிக்கப்பட்ட விலையில் புத்தகங்களும், எழுது பொருள்களும் வழங்கவும், விடுதிகளில் வாழும் மாணவர்கட்கு இன்றியமையாப் பொருட்களை நியாயவிலைக்குப் போதிய அளவில் கிடைக்கச் செய்யவும் வழி வகுத்துள்ளது. இம்முயற்சிகளில் எல்லாம் பெரும் வெற்றி கிடைத்துள்ளதென்பதில் மகிழ்கின்றேன்.

**இதுவரை பள்ளிகளில் 14,405 புத்தக வங்கிகளை நிறுவ முடிந்துள்ளது!**

**பள்ளிப் பாட புத்தகங்களின் விலையை 20 முதல் 30 சதம் வரை குறைக்க முடிந்துள்ளது!**

பயிற்சிப் புத்தகங்களும், எழுதுபொருள்களும் நியாயமான விலைக்கு எளிதில் கிடைக்கின்றன !

நம் மாணவர் விடுதிகளில் குறிப்பிடத் தக்க வாறு செலவு குறைந்துள்ளது !

### நமது மாணவர்களின் சிறப்பு

நமது மாணவர் அறிவுக் கூர்மையிலும், அதைப் பயன்படுத்துவதிலும் யாருக்கும் குறைந்தோரல்லர்! இவ்வாண்டு பள்ளியிறுதி தேர்வுகளில் நம் பள்ளிகள் நல்ல வெற்றி கண்டுள்ளதற்கு மிகவும் மகிழ்கின்றேன். குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பினரையும், பழங்குடிகளையும் சார்ந்த மாணவர்களின் அரிய சாதனை கண்டு மகிழ்கின்றேன். அவர்களில் 584 பேர்கள், மொத்த மதிப்பெண்களில் 70 சதத்துக்கும் அதிகமான மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர். இவர்களின் மேற்படிப்புக்குச் சிறப்புத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. கல்லூரியில் சேரும்போது ஆகின்ற செலவுக்காக சிறப்பு உதவித் தொகைகளை வழங்குகிறோம். தற்போது கல்விக்குத் தரப்படும் ஊக்குவிப்புக்கள், எதிர்காலம் பற்றிய ஆர்வம், நம்பிக்கை, கனவு ஆகியவை நிறைந்த புதிய மாணவர்களை உருவாக்க உதவுவதுடன், அவர்களுடைய தகுதிக்கும், திறமைக்கும் ஏற்ற வகையில் அவர்களை உருவாக்கவும் உதவ வேண்டுமென்று விரும்புகிறேன்.

### மாணவர் கடமை

மாணவர்கள் தங்களது தகுதிக்கும், ஆர்வத்திற்கும் ஏற்ப மாணவ வாழ்வில் போதிய அளவு முன்னதாகவே தமது எதிர்காலத்தைப் பற்றி திட்டமிட்டுக் கொள்ள நினைப்பது உண்மையிலே பயனுடையதாக இருக்கும். தொழிற் கல்வி, அரசின் தனிக் கவனிப்பைத் தொடர்ந்து பெறும். மாணவர்களுக்காக நாம் ஏற்படுத்தியுள்ள மற்றும் ஏற்படுத்தவிருக்கின்ற எல்லா வசதிகளையும் மாணவர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன்.

### புத்தகப்புழுக்களாக இருக்காதீர் !

வகுப்பு, நூலகம், விளையாட்டு மைதானம் என்ற அளவில் மாணவரின் ஆர்வம் இருந்து விடக் கூடாது. புத்தகப் புழுக்களாக இருப்பதைத் தவிர்க்க வேண்டும். படிக்கும்போதே கலாசாரத்திலும், ஆன்மீகத் துறைகளிலும் மாணவர்கள் நாட்டம் செலுத்த வேண்டும். அதேசமயம், பாடத் திட்டத்திற்கு அப்பாற்பட்ட இத்தகைய ஈடுபாடுகள், கல்வித் தேவைகளைப் பாதித்து மாறான விளைவுகளைத் தோற்றுவிப்பதாக இருக்கக் கூடாது.

### மாணவரின் எதிர்காலம் ஆசிரியர் கைகளிலே !

நம் மாணவ-மாணவியரின் எதிர்காலம் பெரும்பாலும் ஆசிரியர்களின் கைகளில்தான் உள்ளன. கற்றுக் கொள்ளும் வயதில் மாணவன் ஆசிரியரையே உதவிக்கும், துணைக்கும் எதிர்பார்க்கிறான். அவனது வாழ்க்கைப் போக்கே பெருமளவுக்கு ஆசிரியரால்தான் உருவாக்கப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு, கற்பதில் அளவற்ற ஆர்வத்தை மாணவர்களுக்கு ஏற்படுத்தும் வகையில், பயிற்றும் முறைகளை ஆசிரியர்கள் உருவாக்க வேண்டும்.

### ஆசிரியர்-மாணவர் உறவு

கற்பிப்பதில் இந்தியாவுக்கு ஒரு மகத்தான பாரம்பரியம் உண்டு. புராதனக் காலத்தில் கற்பிப்போருக்கும், கற்பிக்கப்படுவோருக்கும் இடையில் நல்லுறவு இருந்தது. அதனால் ஆசிரியரின் மதிநுட்பத்தையும், எழுச்சியையும், அறிவையும் மாணவர்கள் அடைய முடிந்தது. இந்நோக்கத்தை எப்பொழுதும் நினைவில் கொண்டு, நமது மாபெரும் நாட்டின் நல்லகுடிமக்களாக மாணவர்கள் வளர்வதற்கு தேவைப்படும் இன்றியமையாத ஆசிரியர்-மாணவர் உறவுக்குத் தீங்கு விளைவிக்கும் எதனையும் விலக்க வேண்டும் என்று ஆசிரியர்களை வேண்டுகின்றேன்.

### ஆசிரியர் கடமை

ஆசிரியர் தம் பாதுகாப்பிலுள்ளவர்களை அன்புடன் நோக்கி, அவர்களிடமுள்ள ஆர்வங்களையும், திறமையையும், தகுதியையும் காண வேண்டும். ஆசிரியர் ஒவ்வொரு மாணவரின் ஆர்வத்தையும், திறமையையும் ஊக்கி, வளர்க்க உதவ வேண்டும். அதே சமயத்தில் ஆசிரியரின் நோக்கமும், ஆதிக்கமும் இளைஞர்களின்மேல் திணிக்கப்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். கற்பிப்பது நளினமான ஒரு கலை. அதைக் கவனமாகவும், மிகுந்த பொறுப்புணர்வுடனும் செய்ய வேண்டும்.

### ஒருமைப்பாடு தேவை

இன்றைய வாழ்வில், நமது தனிப்பட்ட வாழ்விலும், தேசிய வாழ்விலும் ஒருமைப்பாடு தேவைப்படுகிறது. பிரிவினைப்போக்குகளையும் எண்ணங்களையும் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். ஆசிரியரும், மாணவரும் நாட்டுத் தேவைகளை முழுமையாக உணர்ந்துள்ளார்கள் என்று நம்புகின்றேன். ஆசிரியர்கள், மாணவர்களுக்குத் தகுந்த வழிகாட்டியாகவும், தலைமை தாங்கிச் செல்வோராகவும் இருக்க இயலுமென நம்புகின்றேன்.

### பெற்றோர் கடமை

சிறுவரின் உள்ளமும், தனித்துவமும் முழுமையாக வளர்வதற்கான சூழ்நிலையை வீட்டில் உருவாக்க வேண்டுமெனப் பெற்றோர்களை இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். இன்றைய மாணவரும், ஆசிரியரும், பெற்றோரும் தம் தம் பங்கைச் செய்தால், இன்றைய சிறுவர்கள் நாளைய நல்ல குடிமக்களாவார் என்பது உறுதி. பள்ளி ஒலிபரப்புத் திட்டம் வெற்றி பெற வாழ்த்துகின்றேன். நமது ஆசிரியர்களும், மாணவர்களும் நலம் பெற வாழ்த்துகின்றேன்!

**(தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் 19-7-76-அன்று சென்னை வானொலியில்கல்வி ஒலிபரப்பைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை. தமிழாக்கம் : மணசை ப. கீரன்)**



# பாரத நாட்டில் சாதனைகள் நிறைந்த ஓராண்டு!

சங்கர் கோஷ்,
மத்திய திட்ட இராஜாங்க அமைச்சர்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

### 6. குறைந்தபட்ச விவசாய ஊதியம் பற்றிய சட்டங்கள்

விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம் திருத்தியமைக்கப் பட்டுள்ளது; அநேக மாநிலங்களில் ஊதிய விகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது. குறைந்த பட்ச ஊதிய விகிதத்தை செயல்படுத்துவதற் கான நிர்வாக ஏற்பாடுகளை பலப்படுத்து வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 7. மேலும் அதிக நிலத்திற்கு பாசன வசதி அளித்தல் மற்றும்

### 8. மின்சார உற்பத்தித் திட்டம்

நீர்ப்பாசன வசதிக்கும், மின்சார உற் பத்தித் திட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நிதி கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தற் போது இயங்கிவரும் நீர்ப்பாசன மின்சக்தித் திட்டங்களின் வேலைகளைத் துரிதப்படுத்து வதற்கு 1975-76-ல் மாநிலங்களுக்கு சுமார் 85 கோடி ரூபாய் கூடுதல் மத்திய உதவி அளிக்கப்பட்டது. பெரிய, நடுத்தர, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலம் 1975-76-இல் கூடுதலாக 19 இலட்சத்து 40 ஆயிரம் ஹெக்டர் நிலத்துக்குப் பாசன வசதி அளிக்கப் படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

1976-77-க்கான ஆண்டுத் திட்டத்தில் இந்நோக்கத்துக்காக 20 கோடி ரூபாய் ஒதுக் கப்பட்டுள்ளது. நிலத்தடி நீர்வளத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. நாட்டில் முறை யான நிலநீர் ஆய்வுகள் நடத்தப்பட்டு வரு கின்றன.

### 9. கைத்தறித்துறை அபிவிருத்தி

கைத்தறித்துறை அபிவிருத்திக்குச் சிறப்பு கவனம் அளிக்கப்பட்டுள்ளது. இத்தொழில் துறைக்குப் புத்துணர்ச்சி அளித்து, அபிவிருத்தி செய்வதற்கான சிறப்புத் திட்டமொன்று மேற் கொள்ளப்பட்டுள்ளது. 13 தீவிர அபிவிருத் தித் திட்டங்களையும், 20 ஏற்றுமதி வளர்ச்சி நிலையங்களையும் நிறுவுவதற்கான மத்திய திட்டமொன்று எடுத்துக் கொள்ளப்பட்டிருக்





கிறது. அலுவல் மூலதனத் தேவைகளுக்கான நிதி வரம்புகள் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும் ஐந்து பொருட்கள் கைத்தறித் துறைக்கு தனியாக ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த அபிவிருத்தித் திட்டத்தின் நிறைவேற்றத்தைக் கவனிப்பதற்காக அபிவிருத்தி ஆணையாளர் ஒருவர் நியமிக்கபபட்டுள்ளார்.

## 10. மக்களுக்குத் தரமான துணிகள் ஒழுங்காகக் கிடைக்க வகை செய்தல்

மேம்பட்ட, தரம் கொண்ட மலிவுவிலை துணி இப்பொழுது அதிக அளவில் கிடைக்கிறது. சில்லறைக்கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சில்லறை விற்பனைக் கடைகளில் 80 சதவிகிதம் கிராமப் பகுதிகளில் செயல்படுகின்றன. கூட்டுறவு நிறுவனங்களின் மூலமாகவும் மலிவுவிலைத் துணிகளை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தொலைதூரப்பகுதிகள், மலைப்பிரதேசங்கள் உட்பட எல்லா இடங்களிலும் மலிவு விலைத் துணி கிடைப்பதை உறுதி செய்வதற்குச் சரக்குப் போக்குவரத்து சமஈட்டுநிதி ஒன்று செயல்படுகிறது.



## 11. நகர்ப்புற நில உச்சவரம்பு

1976-ஆம் வருடத்திய நகர்ப்புற நிலச் (உச்சவரம்பு, ஒழுங்குமுறை) சட்டம் இந்த ஆண்டு பிப்ரவரி 17-ஆம் தேதியிலிருந்து அமலுக்கு வந்துள்ளது. ஆந்திரப் பிரதேஷ், குஜராத், ஹரியானா, ஹிமாசலப் பிரதேஷ், கர்னாடகா, மஹாராஷ்டிரா, ஒரிஸ்ஸா, பஞ்சாப், திரிபுரா, உத்தரப் பிரதேஷ், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தும். அரசியலமைப்புச் சட்டத்தின் 252-ஆம் பிரிவின் முதல் ஷரத்தின் நிபந்தனைகளின்படி இதனை ஏற்கும் மற்ற மாநிலம் எதற்கும், இச்சட்டம் பொருந்தும்.

ஒருவருக்குச் சொந்தமான காலிநில விஷயத்தில் உச்சவரம்பை இந்தச் சட்டம் நிர்ணயிருக்கிறது. உபரி நிலத்தை, சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்கும் அது வகை செய்கிறது. தகுந்த அதிகாரம் கொண்ட அதிகாரியின் முன் அனுமதியின்றி காலிநிலத்தையோ, நகர்ப்புறச் சொத்தையோ வேறொருவர் பெயருக்கு மாற்றுவதையும் அது தடுக்கிறது. எதிர்காலத்தில் கட்டப்படும் குடியிருப்பு வீடுகளின் உயர்ந்தபட்ச பரப்பளவை இச்சட்டம் வரையறுக்கிறது. மத்திய, மாநில மட்டங்கள் இரண்டிலும் இச்சட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## 12. ஆடம்பர கட்டிடங்களை மதிப்பீடு செய்வதற்கான சிறப்புக் குழுக்களை நியமித்தல். வரி ஏய்ப்பைத் தடுத்தல்.

பம்பாய், கல்கத்தா, சென்னை, டில்லி, புனா, கான்பூர், பெங்களூர், ஜெய்ப்பூர், நாக்பூர் ஆகிய நகரங்களில் ஆடம்பர வீடுகள் கட்டுவதில் முதலீடு செய்யப்பட்டுள்ள—கணக்கில் காட்டப்படாத—தொகைகளை, கண்டுபிடிப்பதற்காக சிறப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே 17 கோடி ரூபாய் மதிப்புக்கு மேற்பட்ட இத்தகைய முதலீடுகளும், அல்லது சொத்துக்களைக் குறைத்து மதிப்பிட்டு அறிவித்துள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## 13. கடத்தல்காரர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்குச் சிறப்புச் சட்டம்.

கடத்தல்காரர்கள், வெளிச்செலாவணி மோசடிக்காரர்கள் (சொத்துப் பறிமுதல்) அவசரச் சட்டத்துக்குப் பதிலாக, நாடாளுமன்றத்தில் சட்டம் ஒன்று இயற்றப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சில சட்டங்களின் கீழ் பிடிக்கப்பட்டு, குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்ட சில நபர்களும், அவர்களின் உறவினர்களும், நண்பர்களும் இப்புதிய சட்டத்துக்குட்படுவார்கள். அத்தகைய நபர்களும், அவர்களின் உறவினர்கள், நண்பர்கள் முதலானோரும் சட்டத்துக்குப் புறம்பாகச் சொத்து எதையும் வாங்குவதை இச்சட்டம் சட்டவிரோதமாகச் செய்துள்ளது.

## 14. நடுத்தர மக்களுக்கு வருமான வரி விலக்கு அளவு ரூபாய் 8,000/-க்கு உயர்த்தப்பட்டது.

குறைவான வருமானம் கொண்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக 1975-ஆம்



வருடத்திய நிதித்துறை திருத்தச் சட்டத்தின் படி, வருமான வரி கட்ட வேண்டிய வருமான அளவு 6,000 ரூபாயிலிருந்து 8,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், வருமான வரி கட்டும் சுமார் 7 இலட்சத்து 30 ஆயிரம் பேர் பயனடைந்துள்ளார்கள். அவர்களுக்கு முழு நிவாரணம் கிடைத்துள்ளது. 1976-77-க்கான மத்திய வரவு செலவுத் திட்டத்தில், 15 ஆயிரம் ரூபாய் வரையில் வருமானம் கொண்டிருப்பவர்களுக்கான வருமானவரி விகிதங்கள் மேலும் குறைக்கப்பட்டுள்ளன.

## 15. முதலீடு செய்வதற்கான விதி முறைகளை தளர்த்துதல்.

சிறிய தொழில்முனைவோர்கள் முதலீடு செய்வதை ஊக்குவிப்பதற்கும், முன்னுரிமைத் துறைகளில் வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கும், நிறுவப்பட்ட திறனளவை முழுவதும் பயன்படுத்திக் கொள்வதற்கும் தொழில்துறை 'லைசென்ஸ்' கொள்கை தளர்த்தப்பட்டுள்ளது. தொழில்களின் முதலீட்டு அளவை உயர்த்துவதற்கு மற்ற பல்வேறு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. 1974-ஆம் வருடத்திய கம்பெனிகள் (டிவிடெண்டுகள் மீதான தாற்காலிகக் கட்டுப்பாடு) சட்டத்தின் திருத்தம், போனஸ் பங்குகளை வழங்குவதற்கான 'விரைவுச் சோதனை'களின் தளர்ச்சி, வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் முதலீடு செய்வதை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் ஆகியவை அவற்றில் அடங்கும். இறக்குமதி ஏற்றுமதிக் கொள்கைகள் தளர்த்தப்பட்டுள்ளன. இறக்குமதி ஏற்றுமதி வசதிகள் சம்பந்தப்பட்ட பொருளாதாரக் குற்றங்களுக்கு அதிகக் கடுமையான தண்டனைகளை விதிப்பதற்கான இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.



## 16. தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் பங்கு கொள்ளும் புதிய திட்டம்.

தொழிற்சாலைகளில், விற்பனை கொள்முதல் மட்டத்திலும், நிர்வாக அளவிலும் தொழிலாளர்கள் பங்கேற்பதற்கான புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதன் பலனாக நாட்டின் தொழில்துறை நிலவரத்திலும், தொழில்துறை உறவுகளிலும் குறிப்பிடத்தக்க மேம்பாடு எய்தப்பட்டுள்ளது. பொருளாதாரத்தின் பல்வேறு முக்கியத்துறைகளின் உற்பத்தி இதன் காரணமாக அதிகரித்துள்ளது. இது, தொழில்துறை-பொருளாதார வளர்ச்சிக்கு நேரடிப் பலன் தந்துள்ளது.

## 17. சாலைப் போக்குவரத்துக்குத் தேசிய அனுமதித் திட்டம்.

1931-ஆம் வருடத்திய, மோட்டார் வாகனங்கள் சட்டத்தைத் திருத்தியமைத்ததன் மூலம் சரக்கு வாகனங்களுக்கான தேசிய அனுமதித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நாடு முழுவதிலுமோ அல்லது ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட தொடர்ந்த மாநிலங்களிலோ இப்பொழுது சரக்கு வண்டிகள் சரக்குகளை ஏற்றிச் செல்ல முடியும். முன்னாள் ராணுவ வீரர்கள், வேலையில்லாத காரோட்டிகள் ஆகியோர் உட்பட புதிய தொழில்முனைவோர்களுக்கு தேசிய அனுமதிகளில் 25 சதவிகித அளவை ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 18. விடுதிகளில் மாணவர்களுக்கு கட்டுப்படுத்தப்பட்ட விலைகளில் இன்றியமையாப் பண்டங்களைக் கொடுத்தல்; மற்றும்



## 19. புத்தகங்களும், எழுதும்பொருட்களும் நியாய விலைக்குக் கிடைக்கச் செய்தல்.

இளைஞர்கள், குறிப்பாக மாணவர்கள் 20-அம்சத்திட்டத்தின்கீழ் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுள்ளார்கள். மாணவர் விடுதிகள் அல்லது பல்கலைக்கழகங்கள் அல்லது கல்லூரிகள் மூலமாக மாணவர்களுக்கு இன்றியமையாப் பண்டங்களைக் கட்டுப்படுத்தப்பட்ட விலைகளில் அதிகமாக விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாடப் புத்தகங்களும், பயிற்சிப் புத்தகங்களும் முன்னைவிட இப்பொழுது மிகச் சுலபமாகக் கிடைக்கின்றன. சலுகை விலைகளில் வெள்ளை அச்சுக்காகிதங்கள் விநியோகம் செய்யப்படுவதன் காரணமாக பாடப்புத்தகங்களின் விலைகளைக் குறைக்க முடிந்துள்ளது. ஏழை மாணவர்களுக்கு, குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடிப் பிரிவினர், சமுதாயத்தில்

(தொடர்ச்சி 41 -ம் பக்கம் பார்க்கவும்)



# நலிவுற்றோர் நலம் காக்க தமிழ்நாடு அரசு இட்டுள்ள கட்டளைகள்!

குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்ட பிறகு, தமிழ்நாட்டில் இருபது அம்சத் திட்டம் தீவிரமாக நிறைவேற்றப்படுவதால், சமுதாயத்தில் நலிவடைந்தவர்களின் நலன்கள் நியாயமான முறையில் கவனிக்கப்பட்டு வருகின்றன. கொத்தடிமை ஒழிப்பு முறை, அரிசனங்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்குதல், விவசாயிகளின் குறைந்த பட்ச ஊதியம் உயர்த்தப்பட்டது முதலிய திட்டங்கள் அனைத்தும் நலிவடைந்தோருக்கு உதவுவதற்காகவே தீட்டப்பட்டதாகும். இத்திட்டங்களை நிறைவேற்றும் பொழுது கிராமப்புறங்களில்உள்ள சில சுயநலக்காரர்களின் எதிர்ப்புச் சக்திகளால் இடையூறுகள் ஏற்படவாய்ப்புகள் உள்ளன. இத்தகைய எதிர்ப்புகள் அரிசனங்களையும் மற்றும் நலிவடைந்தோர்களையும் அச்சுறுத்தும் பாங்கில் அமையலாம். கிராமப்புறங்களில் உள்ள அரிசனங்கள் மற்றும் நலிவடைந்தவர்களுக்கு ஏற்படும் இடையூறுகளைக் கண்காணித்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், காவல் துறை அலுவலர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், காவல் துறையினருக்கும் இந்த நிலைமையைச் சமாளிப்பதற்குத் தேவையான எல்லா அதிகாரங்களும் உள்ளன. தீண்டாமையை ஒழிப்பதில் மிகுந்த கவனம் செலுத்துமாறு காவல் துறையினருக்கு முன்பே அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும், தொன்றுதொட்டுக் கிராமங்களில் நிலவி வந்துள்ள பழக்க வழக்கங்களை அறவே நீக்குவது என்பது எளிதல்ல! அரிசனங்கள் அச்சுறுத்தப்பட்ட சில நிகழ்ச்சிகள், அண்மையில் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. இத்தகைய நிகழ்ச்சிகள் முன்பு இருந்ததை விட தற்பொழுது குறைவாக இருந்தாலும், குடியரசுத் தலைவர் ஆட்சியும், இருபது அம்சத் திட்டமும், அரிசனங்கள் மற்றும் நலிந்தோர்களின் நலனைப் பேணுவதில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், காவல் துறையினருக்கும் சிறப்பான பொறுப்பினை ஏற்படுத்தியுள்ளன. எனவே, அரிசனங்களிடமிருந்து வரும் புகார்கள் உடனுக்குடன் ஆய்வு செய்யப்பட வேண்டும். எங்காவது அரிசனங்களோ மற்ற நலிவடைந்த சமுதாயத்தினரோ அச்சுறுத்தப்படுவது விசாரணையின் வாயிலாக வெளிப்பட்டால், அதற்குக் காரணமாக இருந்தவர்கள் மீது உடனுக்குடன் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன் அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களிடையே, '**அரிசனங்களுக்கும், நலிவடைந்தோருக்கும் அநீதி விளைவித்தால், கடுமையான தண்டனைக்கு உள்ளாவோம்**' என்ற எண்ணம் ஏற்படும் வகையில் மேல்நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.

தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் உள்ள சங்கடங்களில் ஒன்று, சார்நிலைப் பணியாளர்கள் சம்பிரதாயக் கௌரவம் மற்றும் முறைகளினூடே ஒன்றியிருப்பதாகும்! எனவே, அரிசனங்களுக்கும் சமுதாயத்தில் நலிவடைந்தவர்களாக உள்ளவர்களுக்கும் போதிய பாதுகாப்பு அளிக்கும் உணர்வுக்கு, தவறான எண்ணம் மற்றும் சார்நிலைப் பணியாளர்களுக்கும் உள்ளூர் சுயநலக்காரர்களுக்கும் இடையே உள்ள பிணைப்புஆகியவை குறுக்கே நிற்காமலிருக்க, குறிப்பாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். கொத்தடிமைகளை விடுவிக்கும் பொழுது சில எதிர்ப்புகளும், பின் விளைவுகளும் வருவதை எதிர்நோக்க வேண்டியுள்ளது. ஆகவே, கொத்தடிமை முறையானது பின்வாசல் வழியாக வந்து, மீண்டும் தலைதூக்கி விடாமலிருக்க சிறப்புக் கவனம் செலுத்துதல் மிக மிக அவசியமாகும்.

அரசியல் காரணங்களுக்காகநலிவடைந்த சமுதாயத்தினரைப் பயன்படுத்தும் சில சுயநலச் சக்திகளும் இருந்துதான் வருகின்றன! இம்மாதிரியான நிலையில், நலிவடைந்தோர்களின் நலன் பாதிக்கப்படாமலும், அதே சமயத்தில் அவர்கள் சுரண்டப்பட்டுவிடாமலும் நிலைமையை உறுதியாகவும், தந்திரமாகவும் சமாளிக்க வேண்டும். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர்களும், கோட்டாட்சியர்களும், வட்டாட்சியர்களும் மற்றும் காவல் துறை அலுவலர்களும் அமைதியை நிலைநாட்டுவதுடன் மட்டும் நின்றுவிடாமல், அதற்கு மேலும் தீவிரமாகப் பணியாற்றி நலிவடைந்த மக்களிடையே '**நம்பிக்கை மற்றும் தங்களுக்கு பாதுகாப்பு உள்ளது என்ற உணர்வு**' ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்வதே நலிவடைந்த மக்கள், சுயநலக்காரர்களின் சூழ்ச்சிக்குப் பலியாகாமல் இருக்கவும், சச்சரவுகளை ஏற்படுத்தும் கருவியாக அவர்கள் பயன்படாமல் இருக்கவும் வழிவகுக்கும்.

# குழந்தைக்குத் தேவை சத்தான உணவு
# பயிருக்குத் தேவை விஜய்

குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும் சத்துணவைப்போலவே பயிர்களும் நன்கு வளர்ந்து முழுப் பலனையும் தர தழை, மணி, சாம்பல் சத்துக்கள் அவசியம்.

ஆனால் நெற்பயிருக்கு தழைச்சத்தைத்தரும் யூரியாவை மட்டும் இட்டால போதுமானது எனக் கருதக்கூடும். அவ்வாறு யூரியாமட்டும் இட்டால் பயிர்கள் பூச்சிகளால தாக்கப்படும். வறட்சியைத் தாங்காது. மேலும் நாளடைவில் மண்ணின் தன்மைகெட்டு விளைச்சலும் குறையும்.

தழைச்சத்துடன் மணி, சாம்பல் சத்துக்களை இடுவதுதான் லாபகரமானது என ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன:—

நெல் (ஏக்கருக்கு)

| உரம் | சாகுபடி செலவு ரூ. | விளைச்சல் (மூட்டை 75 கிலோ) | வருவாய் (1 மூட்டை 60 ரூ. விகிதம்) |
|---|---|---|---|
| 40 கிலோ தழைச்சத்து மட்டும் | 1040 | 18 | 1080 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து | 1180 | 23 | 1380 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து 20 கிலோ சாம்பல்சத்து | 1215 | 30 | 1800 |

இவ்வாறு மூன்று சத்துக்களையும் இடும் போது கூடுதல் செலவு ரூ. 175க்கு அதிக வருவாய் ரூ. 720 கிடைக்கிறது.

அதிக வருவாய் தரும் தழை, மணி, சாம்பல் சத்துக்களை சமச்சீர் அளவில் கொண்டது விஜய் 17-17-17. இத்துடன் விஜய் யூரியாவையும்.உங்கள் நெற்பயிருக்கு உபயோகித்து அதிகப்பயன் பெறுங்கள்.



VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:
ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், திருச்சி 620 017




MFL-1162



# ஊட்டச் சத்துணவு பெற வீட்டுத் தோட்டம் அமைத்திடுங்கள்!

(சென்ற இதழ் தொடர்ச்சி)

— ஆர். மாணிக்கம்.

*வீட்டுத் தோட்டம் அமைக்கப் போதிய இடம் இல்லை என்றால் என்ன செய்வது?*

5 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டுத் தோட்டம் அமைக்க 5 சென்ட் நிலம் தேவை என்ற விகிதப்படி காலி இடம் இல்லை என்றாலும், பெரும்பாலான வீடுகளின் பின்புறத்தில் மிகக் குறைந்தது 100 சதுர அடி பரப்பு இடமாவது காலியாக (வெறுமனே) கிடக்கிறது. அந்தக் காலி இடங்களில் கீழே படத்தில் கண்டபடி வீட்டுத் தோட்டம் அமைக்கவும்.

**100 சதுர அடி மாதிரி வீட்டுத் தோட்டம் அமைக்கும் முறை:**

படத்தில் குறிப்பிட்டுள்ளது போல், நிலத்தைச் சுற்றிலும் மூங்கிலால் செய்யப்பட்ட வேலி ஒன்றை அமையுங்கள். இவ்வேலியில் பசலை, பாகல், பீர்க்கு, தொண்டங்காய் முதலிய கொடி வகைக் காய்கறிச் செடிகளைப் படர விடுங்கள்.

4 அடி நீளமும், 4 அடி அகலமும் கொண்ட 4 பாத்திகளை அமையுங்கள், அப்பாத்திகளை முன்பே குறிப்பிட்டுள்ளதுபோல் தயார் செய்யுங்கள்.

நிலத்தின் நடுவில் 2 அடி அகலத்திற்கு நடைபாதை அமையுங்கள். நடைபாதையின் இரு புறத்திலும் ஓரங்களில் கொத்தமல்லி, வெந்தயம், புதினா முதலியவைகளைப் பயிரிடுங்கள்.

நிலத்தின் குறுக்காகச் செல்லும் அடுத்த நடைபாதையின் இருபுறத்திலும் முள்ளங்கியினை பயிரிடுங்கள். முள்ளங்கி விதைகளை 1 அடி இடைவெளிக்கு ஒன்றாக நடுங்கள்.

அல்லது படத்தில் கண்டுள்ளது போல் தக்காளிக் கன்றுகளை நடவு செய்து, கம்புகள் அல்லது குச்சிகளுடன் இணைத்துக் கட்டுங்கள்.

100 சதுர அடி பரப்புள்ள வீட்டுத் தோட்டத்திலிருந்து ஆண்டு முழுவதும் தொடர்ந்து காய்களைப் பெற, 4 பாத்திகளிலும் அட்டவணை-3-இல் கண்டபடி பயிரிடுங்கள்.

ஏறத்தாழ எல்லா வீடுகளிலும் வீட்டுத் தோட்டம் போடக் குறைந்தது 100 சதுர அடி இடம் கிடைக்குமாதலின், 100 சதுர அடியில் பயிரிடுவதற்கு ஏற்ற முக்கிய காய்கறிகள், அவைகளை விதைக்கும் காலம், அறுவடை செய்யும் காலம், மகசூல் ஆகியவைகளை அட்டவணை-4-இல் விரிவாகவும், விளக்கமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.




அட்டவணை—3.

| பாத்தி எண் | பருவம் | காய்கறிகளின் பெயர் |
|---|---|---|
| பாத்தி 1 | ஜூன்—ஜூலை | கீரை வகைகள் |
| | ஆகஸ்டு—நவம்பர் | வெண்டை |
| | டிசம்பர்—பிப்ரவரி | வெங்காயம் |
| | மார்ச்—ஜூன் | கத்தரி |
| பாத்தி 2 | ஜூன்—செப்டம்பர் | வெண்டை |
| | அக்டோபர்—மார்ச் | கத்தரி |
| | பிப்ரவரி—மார்ச் | கீரை வகைகள் |
| | ஏப்ரல்—மே | முள்ளங்கி |
| பாத்தி 3 | ஜூன்—செப்டம்பர் | தக்காளி |
| | அக்டோபர்—டிசம்பர் | முள்ளங்கி |
| | ஜனவரி—பிப்ரவரி | கீரை வகைகள் |
| | மார்ச்—ஜூன் | வெண்டை |
| பாத்தி 4 | ஜூன்—செப்டம்பர் | கத்தரி |
| | அக்டோபர்—நவம்பர் | கீரை வகைகள் |
| | டிசம்பர்—நவம்பர் | வெண்டை |
| | ஏப்ரல்—ஜூன் | காராமணி |



அட்டவணை—4

# 100 சதுர அடி பரப்பில், காய்கறி பயிரிடுவதற்கான குறிப்புகள்

| வரிசை எண் | காய்கறிகளின் பெயர் | நடும் முறை | 100 சதுர அடிக்கு விதை அளவு (சுமாராக) | செடிக்குச் செடி விட வேண்டிய இடைவெளி | வரிசைக்கு வரிசை விட வேண்டிய இடைவெளி | விதைப்பதற்கும், நடுவதற்கும் ஏற்ற பட்டம் |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | கத்தரி | மேடான பாத்திகளில் மணலோடு விதைகளைக் கலந்து விதைக்கவும். ஒரு மாத வயதான நாற்றுகளை நடவும். | 0.3முதல் 0.4 கிராம் தேவை. ஆனல் ஒரு கிராம் விதைப்பது சிறந்தது. | 60 செ.மீ. (2 அடி) | 75 செ.மீ. (2½ அடி) | ஆண்டு முழுவதும் பயிரிடலாம். 1. ஜூன்-ஜூலை, 2. பிப்ரவரி-மார்ச்சு விதைப்பு அதிக மகசூல் கொடுக்கும். |
| 2 | தக்காளி | ,, | ,, | 60 செ.மீ. (2 அடி) | 75 செ.மீ. (2½ அடி) | 1. பிப்ரவரி-மார்ச்சு, 2. ஜூலை-ஆகஸ்ட், 3. அக்டோபர்-நவம்பர் |
| 3 | மிளகாய் | ,, | ,, | 45 செ.மீ. (1.5 அடி) | 60 செ.மீ. (2 அடி) | 1. மே-ஜூன், 2. ஆகஸ்ட்-செப்டம்பர், 3. டிசம்பர்-ஜனவரி |






| அறுவடை காலம் | வயது | 100 சதுர அடிக்கு இட வேண்டிய எரு, உரங்கள் | 100 சதுர அடியில் விளையக்கூடிய காய் களின் எடை | பயிரிடுவதற்கு ஏற்ற சிறந்த ரகங்கள் |
|---|---|---|---|---|
| (8) | (9) | (10) | (11) | (12) |
| நட்ட 50 நாட்களில் முதல் காய்ப்பு அறுவடைக்கு வரும். | 3 முதல் 7 மாதங்கள் | நடுவதற்குமுன்னர் 25 கிலோ தொழு எரு, 230 கிராம் அமோனியம்சல்பேட், 275 கிராம் சூப்பர் பாஸ்பேட், 50 கிராம் மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இடவும். நடவு செய்த 3 வாரம் கழித்து 115 கிராம், 6 வாரம் கழித்து 115 கிராம் அமோனியம் சல்பேட்டை மேலுரமாக வைத்து மண் அணைத்துத் தண்ணீர் விட வேண்டும். | 20 முதல் 36 கிலோ | பூசா நீண்ட ஊதா, பூசா உருண்டை, கொத்து வெள்ளை (எஸ். எம். 62), கறுப்பு அழகு, ஊதா நீளம் (எஸ். எம். 60), வரிக் கத்தரிக்காய் (எஸ். எம். 68). |
| நட்ட 60 நாட்களில் முதல் காய்ப்பு அறுவடைக்கு வரும். | 3.5 முதல் 5 மாதங்கள் | அடியுரமாக 25 கிலோ தொழு எரு, 230 கிராம் அமோனியம் சல்பேட், 460 கிராம் சூப்பர் பாஸ்பேட், 70 கிராம் மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் ஆகியவைகளை இடவும். 4 வாரம் கழித்து 230 கிராம் அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இட்டு மண் அணைத்துத் தண்ணீர் விடவும். | 24 முதல் 30 கிலோ | கோ. 1 தக்காளி, கோ. 2 தக்காளி, பூசா ரூபி, பாண்டு ரோசா, மார் குளோப், ஆர்.டி.இ.சி-1, மார்ட்டன், பெஸ்ட் ஆஃப் ஆல், மீருட்டி, ஆக்ஸ்ஹார்ட். |
| நட்ட 2 மாதத்திற்குப் பின்னர் முதல் மகசூல் கிடைக்கும். | 7 முதல் 8 மாதங்கள் | அடி உரமாக 25 கிலோ தொழு உரு, 250 கிராம் சூப்பர் பாஸ்பேட், 60 கிராம் மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் இடவும். மேல் உரமாக நட்ட 30-வது, 50-வது, 75-வது நாட்களில் 115 கிராம் அமோனியம் சல்பேட் இடவும். | 10 முதல் 12 கிலோ | கோவில்பட்டி -1 (கே. 1) கோவில்பட்டி-2 (கே. 2), பி. 24, ஏ. 2, என். பி. 46-ஏ, ஜி. 1, ஜி. 2. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | வெண்டை | பார்களில் விதையை ஊன்றவும். | 6 கிராம் | 30 செ.மீ. (1 அடி) | 60 செ.மீ. (2 அடி) | எல்லாக் காலங்களிலும் பயிரிடலாம்— 1. ஜூன்-ஜூலை, 2. பிப்ரவரி-மார்சு, விதைப்பு அதிக மகசூல் கொடுக்கும். |



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | காராமணி (தட்டைப் பயறு) | பாத்திகளில் விதைகளை வரிசையாக விதைக்கவும். | 32 கிராம் | 75 செ.மீ. (2.5 அடி) | 90 செ.மீ. (3 அடி) | 1. ஏப்ரல்-மே, 2. ஜூலை-ஆகஸ்ட், 3. நவம்பர்-டிசம்பர். |
| 6 | அவரை | குழியில் விதைகளை ஊன்ற வேண்டும். பந்தல் தேவை. | 5 விதைகள் | ... | 10 அடி | ஜூலை—ஆகஸ்ட். |
| 7 | ஒட்டு வீரிய அவரை | வரிசை வரிசையாக விதைகளை ஊன்றவும். பந்தல் தேவை இல்லை. | 100 விதைகள் (20 கிராம்) | 6 அங்குலம் | 2 அடி | ஆண்டு முழுவதும் விதைக்கலாம். ஆனால் ஜூலை—ஆகஸ்ட் மார்ச்-ஏப்ரல் பருவங்கள் சிறந்தவை. |
| 8 | கொத்தவரை | விதைகளை வரிசைகளில் ஊன்றவும் | 10 கிராம் | 15 செ.மீ. (6அங்குலம்) | 45 செ.மீ. (1.5 அடி) | (1) ஜூலை—ஆகஸ்ட் (2) ஜனவரி-பிப்ரவரி |
| 9 | புடல் | குழியில் விதைகளை ஊன்ற வேண்டும். பந்தல் தேவை. | 5 விதைகள் | ... | 8 அடி | (1) ஜூலை-ஆகஸ்ட் (ஆடிப்பட்டம்) (2) ஜனவரி-பிப்ரவரி (தைப்பட்டம்) |
| 10 | பாகல் | ,, | ,, | ... | 8 அடி | ,, |
| 11 | பீர்க்கு | ,, | ,, | ... | 8 அடி | ,, |

| | | | | |
|---|---|---|---|---|
| விதை ஊன்றிய 40 நாட்களுக்குப் பின்னர் காய் பறிக்கலாம். | 3 முதல் 4 மாதங்கள் | அடியுரமாக 25 கிலோ தொழு எரு, 100 கிராம் கிராம் சூப்பர் பாஸ்பேட், 50 கிராம் மியூரிபேட் ஆஃப் பொட்டாஷ் இடவும். 4 வாரம் கழித்து 100 கிராம் அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இடவும். | 6 முதல் 12 கிலோ | பூசா சவானி, சிவப்பு வெண்டை, இந்தியன் வெண்டை, வெள்ளை வெல்வெட். |
| 4 முதல் 6 வாரங்கள் | 4 மாதங்கள் | கத்தரிக்குச் செய்வது போல் அடி உரம் இடவும். | 3 முதல் 4 கிலோ | கோ. 1; கோ. 2, இ.சி. 455, இ.சி.419 பூசா பால்குனி. |
| நட்ட 60 நாட்களுக்குப் பின்னர் மகசூல் கிடைக்கும். | 6 முதல் 8 மாதங்கள். | விதை ஊன்றுவதற்கு முன்பு அடி உரமாக குழிக்கு 25 கிலோ தொழு எரு அல்லது கம்போஸ்ட், 115 கிராம் அமோனியம் சல்பேட், 290 கிராம் சூப்பர் பாஸ்பேட் இடவேண்டும். பூப் பூக்கும் பொழுது 10 கிலோ தொழு எரு இடவேண்டும். | 8 முதல் 10 கிலோ. | கோ.2, கோ. 3, கோ. 4, கோ. 5. |
| விதைத்த 45-ஆம் நாள் முதல், காய்கள் கிடைக்கும். | 4 மாதங்கள். | விதைக்கும் முன்பு 25 கிலோ தொழு எரு, 115 கிராம் அம்மோனியம் சல்பேட், 290 கிராம் சூப்பர் பாஸ்பேட்டையும் அடியுரமாக இடவும். | 3 முதல் 6 கிலோ. | கோ.1, கோ. 6, கோ. 7, கோ. 8. |
| ,, | 4 மாதங்கள். | கத்தரிக்கு இடுவது போல் அடி உரம் இடவும். | 5 முதல் 6 கிலோ. | பூசா மௌஸ்மி, பூசா நௌபஹார். |
| விதைத்த 50 நாளில் அறுவடைக்கு வரும். | 5 மாதங்கள் | குழிக்கு 25 கிலோ தொழு எருவையும், 100 கிராம் 6:12:12 கலப்பு உரத்தையும் அடி உரமாக இடவும். விதை ஊன்றிய 30-ஆம் நாள் குழிக்கு 0.5 கிலோ அமோனியம் சல்பேட் இடவும். பூப் பூக்கும் பொழுது 10 கிலோ தொழு எரு இடவும். | 10 முதல் 16 கிலோ. | ஆடுதுறை நீளம், நீண்ட பச்சை, நீண்ட வெள்ளை, கோடுகளுடன் கூடிய நீண்ட பச்சை, கே. எம். 1, குட்டைப் புடல் (பன்றிப் புடல்) கோடைப் பருவத்திற்கு ஏற்றது. |
| ,, | 5 மாதங்கள். | ,, | 5 முதல் 10 கிலோ. | ஆடுதுறை நீண்ட பச்சை, நீண்ட வெள்ளை. |
| ,, | 5 மாதங்கள். | ,, | 6 முதல் 12 கிலோ. | அதி நீள உயர் ரகம் |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 12 | பறங்கி | குழியில் விதைகளை ஊன்ற வேண்டும். பந்தல் தேவை இல்லை. | 5 விதைகள் | ... | 10 அடி | (1) ஜூலை-ஆகஸ்ட் (2) ஜனவரி-பிப்ரவரி |
| 13 | பூசணி | ,, | ,, | ... | ,, | ,, |
| 14 | சுரைக்காய் | ,, | ,, | ... | 8 அடி | (1) ஜூன்-ஜூலை (2) டிசம்பர்-ஜனவரி |
| 15 | முட்டைக் கோஸ் | கத்தரி போலவே நாற்று விட்டு நட வேண்டும் | 1 கிராம்  | 60 செ.மீ. (2 அடி) | 75 செமீ. (2.5 அடி) | சமவெளிகளில் அக்டோபர் மாதங்களிலும், மலைப் பிரதேசங்களில் மார்ச் மாதங்களிலும் விதைக்கலாம். |
| 16 | காலிஃப்ளவர் | ,, | ,, | ,, | ,, | ,, |
| 17 | பீட் ரூட் | விதைகளை வரிசைகளில் ஊன்றவும் | 5 கிராம் | 10 செமீ. (4 அங்.) | 45 செமீ. (1.5 அடி) | ,, |
| 18 | கேரட் | ,, | ,, | ,, | ,, | |
| 19 | முள்ளங்கி | .. | ,, | 15 செமீ. (0.5 அடி) | 30 செ.மீ. (1 அடி) | ஆண்டு முழுவதும் |
| 20 | டர்னிப் | விதைகளை வரிசையில் ஊன்றவும் | 5 கிராம் | 10 செ.மீ. (4 அங்) | 45 செ.மீ. (1.5 அடி) | (1) ஆகஸ்ட்-செப். (2) அக்-நவம்பர். (3) ஜன-பிப்ரவரி. |
| 21 | கீரைகள் | 6 அடிக்கு 6 அடி பாத்திகளில் விதைக்கவும் | 2 கிராம்  | 10 செ.மீ. (4 அங்) | 45 செ.மீ. (1.5 அடி) | ஆண்டு முழுவதும் விதைக்கலாம். |
| 22 | சமவெளிக்கு ஏற்ற உருளைக் | பார்களில் நடவும் | 1 கிலோ முளை விட்ட கிழங்கு | 20 செமீ. (8 அங்) | 60 செ.மீ. (2 அடி) | (1) ஏப்ரல்-மே, (2) செப்டம்பர், (3) பிப்ரவரி. |

| (8) | (9) | (10) | (11) | (12) |
|---|---|---|---|---|
| விதைத்த 120 நாட்களில் அறுவடைக்கு வரும். | 6 முதல் 8 மாதங்கள். | புடலைக்குச் செய்ததுபோல அடி உரம் இடவும். விதைத்த 45வது நாள் 0.5 கிலோ அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இடவும். | 4 முதல் 5 காய்கள். | கோ. 1 பறங்கி, கோ. 2 பறங்கி. |
| விதைத்த 90 நாட்களில் அறுவடைக்கு வரும். | 4 முதல் 6 மாதங்கள். | ,, | ,, | கோ. 1 புசணி. |
| விதைத்த 80 நாளில் அறுவடைக்கு வரும் | 6 மாதங்கள். | ,, | 12 முதல் 16 கிலோ வரை | துடியலூர் ரகம். |
| நட்ட 45 நாட்களில் முதல் அறுவடை. | 4 மாதங்கள் | 25 கிலோ தொழு எரு, 75 கிராம் அமோனியம் சல்பேட், 230 கிராம் சூப்பர் பாஸ்பேட், 185 கிராம் பொட்டாஷ் ஆகியவைகளை அடி உரமாக இடவும். நட்ட 30-வது, 60-வது நாட்களில் 75 கிராம் அமோனியம்சல்பேட்டை மேலுரமாக இடவும். | 20 முதல் 30 கிலோ. | ஏர்லிட்ரம் ஹெட், கோல்டன் ஏக்கர், ஓ. எஸ். கிராஸ், பூசா டிரம் கெட், பிரைட் ஆப் இந்தியா. |
| நட்ட 85 நாளில் முதல் அறுவடை செய்யலாம். | 4 முதல் 5 மாதங்கள். | ,, | 16 முதல் 24 கிலோ. | ஸ்னோபால், பூசா கட்கி, எர்லி பாட்ணு. |
| விதைத்த 90 நாட்களில் அறுவடை செய்யலாம். | 3.5 முதல் 4 மாதங்கள். | 25 கிலோ தொரு எழு, 60 கிராம் அமோனியம் சல்பேட், 150 கிராம் சூப்பர் பாஸ்பேட், 165 கிராம் பொட்டாஷ் ஆகியவைகளை அடி உரமாக இடவும். | 16 முதல் 20 கிலோ. | கிரிம்சன்குளோப், டெட்ராய்ட் கறுஞ் சிவப்பு. |
| விதைத்த 3 மாதத்திற்கு பின்னர். | 3.5 முதல் 4 மாதங்கள். | ,, | 16 முதல் 20 கிலோ. | லேட் நான்டிஸ், பூசா கேசன். |
| விதைத்த 40 நாட்களில் அறுவடை செய்யலாம். | 1.5 முதல் 2 மாதங்கள். | பீட்ரூட்டுக்குச் செய்வது போலவே உரமிடவும் | 20 முதல் 30 கிலோ | வெள்ளை முள்ளங்கி (எச். 113), சிவப்பு முள்ளங்கி, பூசா ராஷ்மி. |
| விதைத்த 90 நாளில் அறுவடை செய்ய | 3 முதல் 4 மாதங்கள் | பீட் ரூட்டுக்குச் செய்வது போலவே உரமிடவும். | 9 முதல் 12 கிலோ. | பர்பிள் டாப், ஒயிட் குளோப், பூசா காஞ்சன். |
| விதைத்த 40 நாளில் அறுவடைக்கு வரும். | 3 மாதங்கள் | விதைப்பதற்கு முன் 25 கிலோ தொழு எரு அல்லது கம்போஸ்ட், 275 கிராம் சூப்பர் பாஸ்பேட், 115 கிராம் அமோனியம் சல்பேட், 60 கிராம் மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் உரமிடவும். | வாரத்திற்கு 4 கிலோ. | கோ. 1 தண்டுக்கீரை, அரைக்கீரை, சிறுகீரை, பருப்புக்கீரை, முளைக்கீரை. |
| விதைத்த 110 நாட்களில் அறுவடை செய்யலாம். | 110 முதல் 120 நாட்கள் | 25 கிலோ தொழு எரு. 460 கிராம் அமோனியம் சல்பேட், 1,400 கிராம் சூப்பர் பாஸ்பேட், 140 கிராம் மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். | 10 முதல் 12 கிலோ. | கோ - சிம்லா. |





| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 23 | நூல்கோல் | நாற்று விட்டு 20 முதல் 25 நாட்கள் வயதுடைய நாற்று நடவும் | 2 கிராம் விதைகளை நாற்று விடவும் | 20 செமீ. (8 அங்) | 30 செ.மீ. (1 அடி) | (1) ஆகஸ்ட்-செப்டம்பர். (2) அக்டோபர்-நவம்பர். |
| 24 | பீன்ஸ் | பாத்திகளில் அல்லது பார்களின் சரிவில் (அ) வரப்பு ஓரங்களில் ஊன்றலாம் | 400 கிராம் | 20 செ.மீ. (8 அங்) | 60 செ.மீ. (2 அடி) | ஆண்டு முழுவதும் பயிரிடலாம். அக்டோபர்-நவம்பர் விதைப்பு அதிக மகசூல் தரும் |
| 25 | வெள்ளரி | குழியில் விதைகளை ஊன்றவும். (ஒரு குழிக்கு 5 விதைகள்) | 5 கிராம் | 6 அடி | 6 அடி | (1) ஜுலை-ஆகஸ்ட் (2) ஜனவரி-பிப்ரவரி |
| 26 | சௌ-சௌ | வேலிகளின் ஓரத்தில் நட்டுப் படர விடலாம் அல்லது பந்தலில் படர விடலாம். | குழிக்கு 2 முளை விட்ட காய்களை நட வேண்டும் | 10 அடி | 10 அடி | ஜுன்-ஜுலை. |
| 27 | பெல்லாரி வெங்காயம் | நாற்று விட்டுப் பார்களின் இருபுறமும் அல்லதுபாத்திகளில் நடவும். | 4 கிராம் | 10 செ.மீ. (4 அங்) | 10 செ.மீ. (4 அங்) | 1. ஜுன்-ஜுலை. 2. டிசம்பர்-ஜனவரி. |
| 28 | நாட்டு வெங்காயம் | ஒரு அடி இடை வெளியில் பார்களை அமைத்து இருபுறமும் நட வேண்டும் அல்லது பாத்திகளில் நடவும். | 1 கிலோ வெங்காயம் | 10 செ.மீ. (4 அங்) | 10 செ.மீ. (4 அங்) | ஆண்டு முழுவதும் பயிரிடலாம். 1. ஏப்ரல்-மே, 2. அக்டோபர்-நவம்பர். விதைப்பு அதிக மகசூல் தரும். |
| 29 | மரவள்ளி | 75 செ.மீ. (2.5 அடி) இடைவெளியில் பார்கள் அமைக்கவும் | 16 கரணைகள் | 75 செ.மீ. (2.5 அடி) | 75 செ.மீ. (2.5 அடி) | ஆண்டு முழுவதும் பயிரிடலாம். ஆனால் ஜுன்-ஜுலை, டிசம்பர்-ஜனவரி பருவங்களில் நட்டால் அதிக மகசூல் கிடைக்கும். |
| 30 | முருங்கை | வீட்டின் பின்புறத்தில், வேலியோரத் நடலாம். | கிளையின் துண்டுகளை நடவேண்டும் | ... | ... | ஜுலை-ஆகஸ்ட் |

| (8) | (9) | (10) | (11) | (12) |
|---|---|---|---|---|
| 90 நாட்களில் அறுவடைக்கு வரும். | 90 முதல் 100 நாட்கள். | 25 கிலோ தொழு எரு. 60 கிராம் அமோனியம் சல்பேட், 150 கிராம் சூப்பர் பாஸ்பேட், 165 கிராம் ஆஃப் பெட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இடவும். | 18 முதல் 24 கிலோ. | வெள்ளை வியன்னு, ஊதா வியன்னு. |
| நட்ட 100 நாட்களில் அறுவடை செய்ய (சில குறுகிய கால ரகங்கள் நடவுசெய்த 40 நாட்களிலேயே மகசூல் தருகின்றன.) | 4 மாதங்கள். | 25 கிலோ தொழு எரு. 1 கிலோ 6:12:12 கலப்பு உரத்தை [illegible] அடியுரமாக இட வேண்டும். | 8 முதல் 10 கிலோ. | கண்டெண்டர், கென்டக்கிவொண்டர். |
| நட்ட 75 நாட்களில் அறுவடைக்கு வரும் | 4 மாதங்கள். | குழிக்கு 25 கிலோ தொழு எரு, 100 கிராம் 6:12:12 கலப்பு உரத்தை நடுவதற்கு ஒரு வாரம் முன்பு இடவும். | 15 முதல் 20 காய்கள். | ... |
| நட்ட 9 முதல் 10 மாதங்களில் அறுவடைக்கு வரும். | 2 முதல் 3 ஆண்டுகள் | குழிக்கு 25 கிலோ தொழு எரு, 100 கிராம் 6:12:12 கலப்பு உரத்தை நடுவதற்கு ஒரு வாரம் முன்பு இடவும். பிறகு 6 மாதங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு குழிக்கும் 50 கிராம் அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இடவும். | ஒரு கொடியில் 20 கிலோ (அ) 200 காய்கள் கிடைக்கும். | ... |
| 1. அக்டோபர்-நவம்பர் 2. மே-ஜூன். | 5 முதல் 6 மாதங்கள். | நடுவதற்கு முன் 24 கிலோ தொழு எரு இடவும். 140 கிராம் அமோனியம் சல்பேட், 175 கிராம் சூப்பர் பாஸ்பேட், 50 கிராம் பொட்டாஷ்ஆகியவற்றை அடியுரமாக இடவும். நட்ட ஒரு மாதத்திற்குப் பின், 140 கிராம் அமோயம் சல்பேட் மேலுரமாக இடவும். | 9 முதல் 12 கிலோ. |  |
| 80 முதல் 90 நாட்கள் | 60 முதல் 90 நாட்கள். | 12 கிலோ தொழு எரு, 140 கிராம் அமோனியம் சல்பேட், 175 கிராம் சூப்பர் பாஸ்பேட், 50 கிராம் மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இடவும். 30-வது நாள் 140 கிராம் அமோனியம்சல்பேட்டை மேலுரமாக இடவும். | 9 முதல் 12 கிலோ. | கோ. 1 வெங்காயம், கோ. 2 வெங்காயம். |
| 8 முதல் 12 மாதங்கள். | 9 முதல் 12 மாதங்கள். | அடியுரமாக 25 கிலோதொழு எரு, 1.25 கிலோ 6:6:12 கலப்பு உரம் இடவும். நட்ட 2 மாதங்களுக்குப் பிறகு 1.25 கிலோ கலப்பு உரத்தை மேலுரமாக இடவும். | 24 முதல் 32 கிலோ. | மலவெள்ளா, ஆனைக்கொம்பன், எச். 226, எச். 165, எஸ். 2, எஸ். 5, எம். 4. |
| நட்ட6 முதல் 7 மாதத்தில் காய்கள் பறிக்கலாம். | பல்லாண்டுகளுக்குப் பயன்தரும். | முதலாண்டில்70 காய்களும், 2 ஆண்டுகளுக்குப் பிறகு 500 காய்களும் கிடைக்கும். | ... | ஜாப்னு முருங்கை. |

புத்துணர்வு பெற்ற
புதுமை மிகு நாடு—1975-76

# இளைய பாரதத்தினாய் வா! வா!

- அவசியப் பண்டங்கள் கன்ட்ரோல் விலையில் 10,490 மாணவ விடுதிகளுக்குக் கொடுக்கப்படு கின்றன. இதனால் 9,56,000 மாணவ மாணவியர் பயன் பெறுகின்றனர்.

- குறைந்த விலையில் பாடப் புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும் கிடைக்க, சலுகை அடிப்படையில் வெள்ளை அச்சுக் காகிதம் கொடுக்கப்படுகிறது. கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் 88,600 புத்தக வங்கிகள் செயல்படுகின்றன.

- தொழிற் பயிற்சித் திட்டத்தின் கீழ் புதிதாக 103 வர்த்தகப் பிரிவுகளும், 216 தொழில்களும் சேர்க் கப்பட்டுள்ளன.

- இந்தத் தொழிற் பயிற்சித் திட்டத்தின் மூலம் 18,800 இடங்களைப் புதிதாக சேர்த்துள்ளதால் மொத்த இடம் 1,33,000-மாக உயர்ந்துள்ளது. இவற்றில் 1,28,000 இடங்களுக்குப் பயிற்சியாளர் கள் ஏற்கெனவே அமர்த்தப்பட்டு விட்டனர். அதில் 28,000 (20 சதவிகிதம்) இடங்கள் ஷெட்யூல்டு ஜாதியினர், ஷெட்யூல்டு பழங்குடியினர் மற்றும் பிற் பட்ட சமுகத்தினருக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

davp 76/91





# வரலாற்றுச் சின்னங்களைக் காப்பதில் தமிழக மாணவர்களின் சீரிய பணி

—டாக்டர் இரா. நாகசாமி,
இயக்குநர்
தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறை

**நா**ட்டின் பல பாகங்களிலும் உள்ள வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்கவும், தூய்மைப்படுத்தவும் மாணவ இளைஞர் சமுதாயத்தை ஊக்குவிக்க வேண்டும் என்று பாரதப் பிரதமர், நமது அன்பிற்குகந்த திருமதி இந்திரா காந்தி அவர்கள் அளித்துள்ள திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பள்ளி அல்லது கல்லூரி தங்கள் நிறுவனத்துக்கு அருகில் உள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கோயில், கோட்டை, மசூதி, கல்வெட்டுக்கள், சிற்பங்கள் முதலியவற்றைத் தங்களதாகப் பாவித்துக் கொள்ள வேண்டும். 15 நாட்கள் அல்லது மாதம் ஒரு முறை அங்கு சென்று, அவ்வரலாற்றுச் சின்னங்களையும் அவற்றைச் சுற்றியுள்ள இடங்களையும் தூய்மைப்படுத்த வேண்டும். அந்த வரலாற்றுச் சின்னங்களின் சிறப்பையும், கலை, கல்வெட்டு முதலியவற்றின் பெருமையையும் அறிந்துகொள்ள வேண்டும். அந்தப் பகுதிக்கு வரும் வெளியார்களுக்கு அவற்றின் சிறப்பை, தேவையானல் எடுத்துக் கூறுதல் வேண்டும்.

வரலாற்றுச் சின்னங்களின் மீது கிறுக்கவோ, எழுதவோ, அவற்றுக்கு ஊறுவிளைவிக்கவோ கூடாது என்ற எண்ணத்தை மாணவர்கள் சமுதாயத்தில் நிலவச் செய்தல் வேண்டும். இவை நமது நாட்டின் பண்டைய கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் எடுத்துரைக்கும் செல்வங்கள். இவற்றைக் காத்தல் நமது கடன் என்ற உணர்வு ஒவ்வொருவரிடமும் தோன்றும் வகையில் இதைச் செய்தல்வேண்டும் என்ற கருத்துக்களின் அடிப்படையில் இந்தத் திட்டமானது மேற்கொள்ளப்பட்டு, தமிழ்நாட்டில் இப்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்படி கல்லூரிகள் மற்றும் பள்ளிகளின் மொழி, வரலாறு, பொருளாதாரம் முதலிய துறைகளைச் சார்ந்த ஆசிரியர்களும், பேராசிரியர்களும் மாணவர்களை இச் செயலில் ஊக்குவிக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிருர்கள். இது தவிர தமிழ்நாட்டில் ஏராளமான பண்டைய கோயில்களும் அவற்றில் நம் வரலாற்றை எடுத்துரைக்கும் பல்லாயிரக் கணக்கான கல்வெட்டுக்களும் இருக்கின்றன. இவற்றின் மீது சுண்ணும்பு, வர்ணங்கள் முதலியவை பூசப்பட்டுள்ளதால் மறைந்து கிடக்கின்றன. சில இடங்களில் இவை உடைந்து, இப்பொழுது அகற்றப்பட்டுவிட்டன. பல இடங்களில் தரைகளில் பாவு கற்கள் ஆகக் கல்வெட்டுக்கள் கிடக்கின்றன. இதுகாறும் படி எடுத்துள்ள கல்வெட்டுக்கள் சுமார் முப்பதாயிரம் இருக்கும். இன்னும் படி எடுக்கப்பட வேண்டியவை முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் இருக்கும். இவற்றையும் அந்தந்தப் பகுதி மாணவர்கள் உதவி கொண்டு படி எடுக்க ஒரு திட்டத்தைத் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை வகுத்துள்ளது. இதன்படி மாணவர்கள் கல்வெட்டுக்களைப் படி எடுக்கப் பயிற்சி அளிக்கப்படுகின்றனர்.

கல்வெட்டுக்களின் மீது சுண்ணும்பு, வர்ணம் பூசுவது சமுதாயக் குற்றம் ஆகும் என்றும்,



திருவொற்றியூர் கோயிலில் சோழர் கல்வெட்டுக்கள் மீது படிந்திருந்த சுண்ணாம்புக் காரையை வடசென்னை மகளிர் கல்லூரி மாணவிகள் இரசாயனக் கலவையால் தூய்மையாக்கினர்.

அவற்றை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இந்து சமய அறநிலைய ஆணையர் அவர்கள் அனைத்துக் கோயில்களுக்கும் ஆணை பிறப்பித்துள்ளார்கள். இந்தக் கல்வெட்டுக்களைப் படி எடுக்க ஆகும் செலவுகளை அந்தந்தக் கோயில்களே மேற்கொள்ளலாம் என்றும் அறநிலைய ஆணையர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கோயில்களுக்கும் உத்தரவு இட்டுள்ளார்கள். இதன்படி இப்பொழுது தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் இந்தப் பணியில் நூற்றுக்கணக்கில் ஈடுபட்டிருக்கிறார்கள். 'இதற்கு இதைச் செய்தல் வேண்டும்', 'இதைச் செய்தல் கூடாது', 'இப்படிச் செய்ய வேண்டும்' என எடுத்துரைக்கத் தொல்பொருள் ஆய்வுத்துறை தனது செயலகத்தில் இருந்த கல்வெட்டு ஆய்வாளர்களையும் அகழ்வாய்வாளர்களையும் இப்பணியில் ஈடுபடுத்தி இவற்றைத் தீவிரமாக அமல் செய்து வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி வட்டத்தில் உள்ள கோயில்களில் இருந்த கல்வெட்டுக்கள் அந்தந்தப் பகுதிகளிலேயிருந்த மாணவர்களால் தூய்மைப் படுத்தப்பட்டுப் படி எடுக்கப்பட்டன. வட்டம் முழுவதும் 15 நாட்களுக்குள் படி எடுத்து முடித்தனர்.

கும்பகோணத்தில் உலகப் புகழ் வாய்ந்த கீழ்க் கோட்டம் என்னும் நாகேசுவர சுவாமி கோயில் இருக்கிறது. இது கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட அழகு மிகுந்த சோழர் காலக் கோயிலாகும். இதில் மிக மிக எழில் வாய்ந்த சிற்பங்கள் இருக்கின்றன. பராந்தக சோழன், இராஜராஜன் முதலிய சோழ மன்னர்களுடைய கல்வெட்டுக்கள் ஏராளமாக இங்கு இருக்கின்றன. இந்தக் கோயிலில் உள்ள அழகிய சிற்பங்களும், கல்வெட்டுக்களும் சுண்ணாம்பாலும், புதர்களாலும் மறைந்து கிடந்தன. இவற்றை, குடந்தை 'என். எஸ். எஸ்' மாணவர்கள் சுமார் 80 மாணவர்களும் 60 மாணவியர்களும் சேர்ந்து தூய்மைப்படுத்தினர். இவற்றில் உள்ள கல்வெட்டுக்களைப் படியெடுத்தனர். சுண்ணாம்பால் மறைந்து கிடந்த அழகிய சிற்பங்களும் அவர்களால் தூய்மைப் படுத்தப்பட்டு எழில் ஓவியங்களாக வெளிப்பட்டன.

இதே மாணவ அணியினர். கும்பகோணத்திற்கு அருகில் பட்டீஸ்வரம் என்னும் இடத்தில் இருந்த ஒரு கோயிலையும் தூய்மைப்படுத்தினர். இக்கோயில் தஞ்சை மாமன்னன் முதலாம் இராஜராஜ சோழனின் தேவியருள் ஒருவரான பஞ்சவான் மாதேவிக்கு எடுக்கப்பட்ட பள்ளிப்படைக் கோயிலாகும். அக்கோயிலில் இராஜேந்திர சோழனுடைய கல்வெட்டு இருக்கிறது. அழகிய சிற்பங்கள் இருக்கின்றன. ஆனால் அக்கோயில் முழுவதும் புதர் மண்டி, புல் மண்டி, அங்கு செல்வதற்கே வழி இல்லாமல் வழிபாடின்றிக் கிடந்தது. அதைக் குடந்தை 'என். எஸ். எஸ்.' மாணவர்களும், மாணவிகளும் தீவிரமாக இருந்து மிக அழகாகத் தூய்மைப் படுத்தினர். கோபுரத்தின் உச்சியில் வளர்ந்து இருந்த செடி கொடிகளை எல்லாம் அகற்றினர். புதரிலே இருந்து வெளிப்போந்த ஒரு பாம்பை ஒரு மாணவச் சிங்கம் கையால் பிடித்துச் சுற்றி அடித்ததும், அங்கு எவ்விதச் சலசலப்பும் இன்றிப் பணி தொடர்ந்ததும் காண்போர் வியக்கும் வகையில் இருந்தது. அக்கோயிலில் தூர்ந்து பாழாய்க் கிடந்த கிணற்றை மாணவர்கள் தூர் வாரிச் சீர் ஆக்கினர்.

சென்னைக்கு அருகில் இருக்கும் திருவொற்றியூர் ஆதிபுரீசுவரர் கோயிலை வட சென்னை மகளிர் கல்லூரியைச் சார்ந்த 80 மாணவியர் தூய்மைப் படுத்துவதில் ஈடு

திருவொற்றியூர் கோயிலில் மாணவிகள் கல்வெட்டுக்களைப் படியெடுக்கும் காட்சி !



பட்டனர். அவர்கள் இக்கோயிலின் வரலாற்றையும் பல்லவர், சோழர் காலக் கலை, வரலாற்றையும் அக்கோயிலிலேயே வகுப்புக்களாக நடத்தி அறிந்து கொண்டனர். அன்று மாணவிகள் செய்த பணி அனைவருடைய போற்றுதலையும் பாராட்டுதலையும் பெற்றது.



பட்டீஸ்வரத்தில் பஞ்சவன் மாதேவீச்சுரம் என்னும் சோழர் கோயிலில் பாழடைந்த கிணற்றை மாணவர் படை தூர் எடுத்தக் காட்சி!

இந்தப் பணியிலே ஏராளமான கல்லூரிகளும், பள்ளிகளும் பங்கு பெற, நாள்தோறும் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறைக்குக் கடிதம் எழுதிய வண்ணம் இருக்கின்றனர். இந்தப் பணியில் மாணவர்கள் பங்கு பெற, அவர்களுக்கு ஊக்கம் ஊட்ட பல தனியார் நிறுவனங்களும் முன்வந்து அவர்களுக்குப் போக்குவரத்து, தேனீர் முதலிய வற்றைக் கொடுத்து உதவுகின்றனர். கும்பகோணத்தில் ராமன் அண்டு ராமன் கம்பெனியார் மாணவர்களைத் தங்களது வாகனத்தில் பட்டீஸ்வரத்திற்கு அழைத்துச் சென்று மீண்டும் கும்பகோணத்திற்குக் கொண்டு வந்து விட்டதோடு அன்றி அவர்களுக்குச் சிற்றுண்டிகளும் வழங்கி ஊக்குவித்தனர்.

இதை மேலும் பரவலாக நடத்துவதற்கு வேண்டிய பயிற்சி பெற்றவர்கள் உடனடியாகத் தேவைப்படுகிறார்கள். ஆதலின் வரும் செப்டம்பர் மாதம் என். எஸ். எஸ். பிரிவு மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பயிற்சி அளிக்கத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை திட்டம் இட்டுள்ளது. இது தவிர ஒவ்வொரு மாவட்டங்களிலும் வரலாற்றுச் சின்னங்களின் பெருமையை உணர்த்தும் வகையில் சிறப்புக் கண்காட்சியும் நடத்தத் திட்டமிட்டுள்ளது. அதே சமயம் அந்தந்தப் பகுதி, கலைக்கும், வரலாற்றுக்கும் செய்துள்ள தொண்டுகளை அறிந்து கொள்ளும் வகையில் கருத்தரங்குகளை மாவட்டம் தோறும் நடத்தத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை திட்டமிட்டுள்ளது. ஆகஸ்ட் மாதம் தஞ்சை மாவட்டக் கருத்தரங்கு, குடந்தையில் நடைபெற இருக்கிறது. இதில் ஏராளமான ஆசிரியப் பெருமக்களும், பிறரும் பங்கு கொள்ள இருக்கின்றனர். பல வரலாற்றுப் பிரிவின் கிளைகள் இந்தக் கருத்தரங்கைச் சிறப்பிக்க அவர்களது ஒத்துழைப்பைக் கொடுக்க முன்வந்துள்ளன.

ஊர்தோறும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கோயில்களும், கலைச் செல்வங்களும், கல்வெட்டுகளும் நிறைந்து நிற்கும் தமிழகத்தில் இவை அனைத்தையும் அறிந்து கொள்ள, போற்றிப் பாதுகாக்க, ஒரு புத்துணர்ச்சியே தோன்றியுள்ளது எனில் அது மிகையாகாது. இதற்கு வழி காட்டிய பாரதப் பிரதமர் அவர்களுக்கு மக்கள் இதயம் கனிந்த நன்றியை என்றென்றும் தெரிவிப்பர்.

அழகிய சிற்பங்கள் மீதுள்ள சுண்ணும்பை நீக்கியதுடன், கோபுரத்தின் மீதுள்ள செடிகளையும் மாணவர்கள் வெட்டி அகற்றினர்.





# படமும் செய்தியும்




↑

தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் தலைமையில், சிறு தொழில் நிறுவன அரங்கில், 28—7—'76 அன்று, தமிழ்நாடு மற்றும் புதுவை மாநிலத்தைச் சேர்ந்த தோல் மற்றும் தோல்பொருள் தொழிற்சாலைகளை நவீன மயமாக்குதல் பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது. மத்திய அரசின் தொழில் மற்றும் நுகர்பொருள்துறை இராஜாங்க அமைச்சர் திரு. ஏ. பி. சர்மா அவர்கள் அக்கருத்தரங்கு பற்றிய மலரை வெளியிட்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்களிடம் வழங்கினர்.



தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் 28—7—'76 அன்று சென்னையில் "தொழிலாளர் நலச் சட்டமும், சமுதாய மாற்றமும்" என்ற கருத்தரங்கைத் துவக்கி வைத்து உரையாற்றினர்.

தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு பி. கே. தவே, ஐ. ஏ. எஸ்., அவர்கள் 27—7—'76 அன்று சாத்தனூர் அணைக்கு வருகை தந்தார். அவ்வமயம் அங்குள்ள மீன் பண்ணையில் வளர்க்கப்படும் மீன்களைப் பார்வையிட்டார்.





தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகத்தால், கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள வேளாண் இல்லத்தில் (Agro-House) நிறுவப்பட்டுள்ள மீன்வலை உற்பத்தி நிலையத்தை 29—7—'76 அன்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்துஸ்தான் வாணிபக் கழகத்தின் 13-வது ஆண்டுப் பொதுக் கூட்டம் 30—7—'76-ல் நடைபெற்றது. அவ்விழாவில் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் ஐ.ஏ.எஸ்., அவர்கள் உரையாற்றினர்.

சென்னை, மீனம்பாக்கத்தில் உள்ள ஜெயின் கல்லூரி நூலகக் கட்டடத்தை 30-7-'76-ல் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் துவக்கி வைத்தார்.







மொரிஷியஸ் தீவின் நிதி அமைச்சர் திரு. வீராசாமி ரிங்காடு அவர்கள் 30-7-'76 அன்று தமிழ்நாட்டுக்கு வருகை தந்தார். அவரை, மீனம்பாக்கம் விமான நிலையத்தில் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் ஐ.ஏ.எஸ்., அவர்கள் வரவேற்றார்.



மத்திய அரசின் உள்துறை அமைச்சர் திரு கே. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் 31—7—'76 அன்று சிதம்பரத்தில் நடைபெற்ற 20 அம்சப் பொருளாதாரத் திட்ட விளக்க விழாவில், கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

மத்திய அரசின் உள்துறை அமைச்சர் திரு கே. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் சிதம்பரத்தில் கட்டப்பட்டுள்ள மருத்துவ மனையை 31—7—'76 அன்று. திறந்து வைத்தார்.







மத்திய அரசின் தொழிலாளர் நல அமைச்சர் திரு. கே. வி. ரகுநாத ரெட்டி அவர்கள், தொழிலாளர் நலம் மற்றும் வேலைவாய்ப்புத் துறையில் 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தின்கீழ் நடைபெற்றுள்ள பணிகளைப் பற்றித் தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு அரசின் அலுவலர்களுடன் 30—7—'76 அன்று ஆய்வு செய்தார்.



தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் துணைவியார் திருமதி மோஹன்லால் சுகாதியா அவர்கள், மார்ச்சு 1976-ல் நடைபெற்ற பள்ளி இறுதித் தேர்வில் 70 சதம் மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்பெண்களைப் பெற்ற தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு 31—7—'76-ல் தகுதிப்பரிசு (Merit award) அளித்தார்.

மத்திய அரசின் இரயில்துறை அமைச்சர் திரு கமலபதி திரிபாதி அவர்கள், 7—8—'76 அன்று சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில், சென்னையில் இருந்து புதுடில்லி செல்லும் "தமிழ்நாடு எக்ஸ்பிரஸ்" இரயிலின் வெள்ளோட்டத்தைத் துவக்கி வைத்தார்.









# ஸ்டேட் பாங்க்
# ரிக்கரிங் டெபாஸிட் திட்டம்
## மாதந்தோறும் சேமிக்கும் பழக்கம்—நாளை நலன் தரும்.

ஒவ்வொரு மாதமும் எத்தனை சேமிக்க வேண்டும், மற்றும் எத்தனை காலம் சேமிக்க முடியும் என்று தீர்மானித்துக் கொள்ளுங்கள். ஆரம்பித்தவுடன், உங்கள் சேமிப்பு வட்டியுடன் வளரும் வேகத்தைக் கண்டு மலைத்துப் போவீர்கள்.

இன்னும் எளிதாக்க வேண்டுமானால், ஸ்டேட் பாங்கில் ஒரு சேமிப்புக் கணக்கு ஆரம்பியுங்கள். மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை உங்கள் ரிக்கரிங் டெபாஸிட் கணக்கில் மாற்றும்படி உங்கள் ஸ்டேட் பாங்க் கிளைக்குக் கூறி விடவும்.

வசதியான காலவரையறைக்கு, ரூ. 5/-ன் மடங்கில் நீங்கள் சேமிக்கலாம். வட்டி விகிதம் ஆண்டொன்றுக்கு வருமாறு: 12 மற்றும் 24 மாதங்களுக்கு 8%, 36, 48, மற்றும் 60 மாதங்களுக்கு 9%, 61, 72, 84, 96, 108 மற்றும் 120 மாதங்களுக்கு 10%.

இன்னும் என்ன? நீங்கள் போகுமிடமெல்லாம் உங்கள் பணமும் கூடவே வரும். காரணம், இந்தியாவில் 3800க்கும் மேற்பட்ட வெவ்வேறு இடங்களில் உங்களுக்கு சேவை புரிகிறது ஸ்டேட் பாங்க்.

**ஸ்டேட் பாங்க்**

SBI-9-203 TAM




# தமிழ்நாடு கிராமப்புறக் கடன் நிவாரணச் சட்டம்

இருபது அம்சப பொருளாதாரத் திட்டத்தின் மிக முக்கியக் கூறுகளில் ஒன்று கிராம மக்களின் கடன் தொல்லைகளை நீக்கும் திட்டம். இத்திட்டத்தின் முதல் கட்டம்—அதாவது சமுதாயத்தில் ஏழை எளியவர்கள் வாங்கியுள்ள அனைத்துக் கடன்களையும் திருப்பித் தருவதற்கு கால நீட்டிப்பளித்தல். கால நீட்டிப்புச் சட்டங்களை நிறைவேற்றியதன் மூலம் தமிழ் நாட்டில் இது முன்னரே முழுமையாக நிறைவேற்றப்பட்டுவிட்டது.

இப்பொழுது இரண்டாவது கட்டமாக தமிழ் நாட்டில் புதிதாக நிறைவேற்றப்பட்டுள்ள 1976-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் சமுதாயத்தில் உள்ள எளிய மக்களின் அனைத்துக் கடன்களையும் ரத்து செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டம் தமிழ்நாடு முழுவதிலும் உடனடியாக அமலுக்கு வருகிறது.

**பயனடைவோர் எவர்?**

இச்சட்டத்தின் கீழ், ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,400-க்கு மேற்படாத குடும்ப வருமானம் (அதாவது குடும்பத்தில் உள்ள அனைவருடைய அனைத்து வழியாக வரும் மொத்த வருமானம்) உள்ள நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், கிராமப் புறக் கைவினைஞர்கள் மற்றும் சிறு விவசாயிகள் கடன் சுமையிலிருந்து முற்றிலும் நிவாரணம் பெறுவார்கள். குடும்பம் என்பது கணவன், மனைவி, திருமணமாகாத மைனர் குழந்தைகள் முதலானோர் அடங்கியதாகும்.

சிறு விவசாயி என்பவர் மலை ஜாதியினராக இருப்பின—2 யூனிட் விவசாய நிலமும், மற்றெல்லாருக்கும் 1 யூனிட் நிலமும் சொந்தமாகவோ, குத்தகையாகவோ, அல்லது சுவாதீன அடமானமாகவோ பெற்றிருந்து அதன் மூலம் தனது வாழ்க்கைக்குத் தேவையானவற்றைப் பெறுபவர்.

யூனிட் நிலம் என்பதற்குக் கீழ்க் கண்ட விளக்கங்கள் தரப்பட்டுள்ளன :

1. பாசன வசதியற்ற இரண்டு ஹெக்டேர் நிலம்.
2. ஒரு பயிர் செய்யப் பாசன வசதி பெற்ற அரை ஹெக்டேர் நிலம்.
3. தோட்டப் பயிர்கள் அல்லது திராட்சை, அல்லது தென்னை அல்லது பாக்கு அல்லது முசுக்கட்டை ஆகியவற்றைப் பயிரிடப் பயன்படும் அரைஹெக்டேர் நிலம்.
4. எப்போதும் பாசன வசதிபெற்ற அல்லது ஓராண்டில் ஒரு போகத்துக்கு மேல் பயிர் செய்யப் பாசன வசதிபெற்ற கால் ஹெக்டேர் நிலம்.

நிலமற்ற விவசாயக் கூலி என்பவர் பயிர் செய்வதற்கான நிலமற்றவரும், பயிர் செய்யும் நிலத்தில் உடல் உழைப்பு மூலம் தனது பிழைப்பை நடத்தி வருபவருமாவார்.

கிராமக் கைவினைஞர்கள் என்பவர், பயிர் செய்யும் நிலம் எதுவுமின்றி கிராமத்தில் (அதாவது கிராமம் என்பது சென்னை, மதுரை நகரங்களிலோ அல்லது ஒரு நகராட்சியிலேயோ நகரியத்திலோ உட்படாதது) தனது உழைப்பாலும் அல்லது தனது குடும்பத்தினர் உழைப்பாலும் தொழில் செய்து தன் பிழைப்பை நடத்துபவர், அல்லது விவசாயத் தொழிற் கருவிகளைச் செய்வது அல்லது பழுது பார்ப்பதன் மூலம் தனது பிழைப்பை நடத்துபவர் ஆவார்.

**கடன் கொடுத்தோர் விவரம் தரவேண்டும்**

கடன் கொடுத்தோர் தங்களிடம் அடைமானம் வைக்கப்பட்டுள்ள ஜங்கம சொத்துக்கள் பற்றிய விவரங்களை தாசில்தாரிடம்

கொடுக்க வேண்டும். கடன் பெற்றவர்களும் கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் நிவாரணம் கோரி அதாவது தாங்கள் [illegible] சொத்துக் அடமானம் வைத்த ஜங்கம [illegible] கோரி களைத் திருப்பிக் கொடுக்குமாறு தாசில்தாருக்கு மனு கொடுக்கலாம். பிறகு தாசில்தார் விசாரணை செய்து கடன் பெற்றவர்களில் யார் நிவாரணம் பெற உரிமை பெற்றவர்கள் என்பதற்கான ஆணையைப் பிறப்பிப்பார்.

கடன் நிவாரணச் சட்டத்தின் மூலம் கடன் தீர்க்கப்பட்டவரது அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்களை அவருக்குத் திருப்பிக் கொடுப்பது கடன் கொடுத்தவர்களின் பொறுப்பு ஆகும்.

கடன் கொடுத்தவர் அடமான ஜங்கம சொத்துக்களை செக்ஷன் 13 (ஜி) -இல் குறிப்பிட்ட வங்கி வேறு மற்ற நிறுவனங்கள் உள்பட வேறுஎவரிடமோமீண்டும் அடமானம் வைத்திருந்தால், அவைகளை அந்தக் கடன் கொடுத்தவர்களே வங்கி நிறுவனம் உள்பட அந்த நபரிடமிருந்து திரும்பப் பெற்று அச்சொத்துக்களை தாசில்தாரிடம் ஒப்படைக்க வேண்டும். அப்படி அவர்கள் செய்யத் தவறினாலும் மேலும் கடன் கொடுத்தவரிடமிருந்து மீண்டும் அடமானம் வைக்கப்பட்ட இடம் ஒரு வங்கியோ, அல்லது வேறு நிறுவனமோ இல்லை எனில் அவ்வகையான கடன் கொடுத்தவர் வசிக்கும் கட்டிடத்தில் நுழைந்து சொத்துக்களைக் கைப்பற்றி அவற்றை அடமானம் வைத்தவரிடம் திருப்பித் தர உரிமையுண்டு.




வங்கியாகவோ வேறு நிறுவனமாகவோ இருந்தால் அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்களை அவரிடம் ஒப்படைக்குமாறு தாசில்தார் ஆணையிடலாம். அத்துடன் அந்தவங்கிக்கோ அல்லது நிறுவனத்திற்கோ சேரவேண்டிய நில வரி பாக்கியாகக் [illegible] கருதப்பட்டு கடன் கொடுத்த[illegible]வரிடமிருந்து வசூல் செய்யப்பட்டு, வங்கிக்கோ அல்லது நிறுவனத்திற்கோ வழங்கப்படும் என்பதற்குரிய சான்றிதழினை தாசில்தார் வழங்குவார். அதன் பிறகு, நிலவரி பாக்கியைப் போல் அத்தொகையை தாசில்தார் வசூலித்து வங்கிக்கோ அல்லது நிறுவனத்திற்கோ செலுத்துவார். அடமானம் வைக்கப்பட்ட சொத்துகள் கடன் பெற்றவர்களுக்கு திருப்பித் தரப்படும்.

அடமானம் வைத்தவர் கொடுக்கும் மனு மீது விசாரணை செய்து, அடமானம் வைத்துள்ள சொத்துக்களை விடுவித்து தாசில்தார் ஆணை பிறப்பிதது சொத்து விடுவிக்கப்பட்டது என்ற சான்றிதழை வழங்குவார். இச்சான்றிதழ் நீதி மன்றங்களில் இது குறித்து ஏற்படும் வழக்குகளில் காட்சியங்களாக ஏற்றுக் கொள்ளப்படும். அடமானம், வைத்தவர் அடமானம் வைத்துள்ள சொத்தினை திரும்ப அடையாமல் இருந்தால் அச்சொத்துக்களை அடமானம் வைத்தவரிடம் திருப்பிக் கொடுக்குமாறு தாசில்தார் ஆணையிடுவார். மேலும், தாசில்தார் கடன் கொடுத்தவரிடமுள்ள அடமானப் பத்திரத்தையோ மற்ற பத்திரத்தையோ தம்மிடம் ஒப்படைக்க ஆணையிட்டுக் குறிப்பிடப்பட்ட சொத்துகள் மீட்டு தரப்பட்டதாக அப்பத்திரத்தில் சான்றிதழ் இடுவார்.

**தாசில்தார் ஆணை மேல் அப்பீல் உண்டு**

இச்சட்டத்தின் கீழ் தாசில்தார் பிறப்பிக்கும் ஆணையை எதிர்த்து அதிகாரிக்கு அப்பீல் செய்து கொள்ள அனுமதி உண்டு. அந்த அப்பீலில் பிறப்பிக்கப்படும் உத்தரவு முடிவானது. அதை எந்த நீதிமன்றத்திலும் ஆட்சேபிக்க முடியாது.

இந்தச் சட்டம் தொடர்பான விவகாரங்களில் எந்த வழக்கிற்கும் ஆஜராக முடியாது.

குற்றங்கள் பிடியாணை வேண்டாக் குற்றங்களாகும். மேலும் சிறைத் தண்டனைக்குரியது.

**சிறைத்தண்டனை, அபாரதம் உண்டு !**

இந்தச் சட்டத்தில் கண்டுள்ள பிரிவுகளை அல்லது இச்சட்டத்தின் கீழ் போடப்பட்டுள்ள உத்தரவுகளை அமுல்படுத்தாத நபர்களுக்கும் அல்லது இச்சட்டத்தின் பிரிவுகளை மீறி நடப்பவர்களுக்கும் குறைந்த அளவு மூன்று மாதங்கள் முதல் அதிக அளவு ஓராண்டு வரை சிறை தண்டனையும் குறைந்த அளவு ரூபாய் ஆயிரம் முதல் அதிக அளவு ரூபாய் ஐயாயிரம் வரை அபராதமும் விதிக்கப்படும்.



இச்சட்டத்தின் கீழ் தண்டனை அளிக்கக் கூடிய குற்றங்கள் ஒவ்வொன்றும் பிடியாணை வேண்டாதவை. ஆகவே அவை உடன் விசாரிக்கப்பட வேண்டியவை. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 262 முதல் 265 வரை உள்ள பிரிவுகள் இது போன்ற விசாரணைகளுக்குப் பொருந்தும்.

கம்பெனிகளைப் பொறுத்த வரையில் இச்சட்டத்தின் கீழ் ஒரு கம்பெனியால் செய்யப்பட்ட குற்றத்திற்கு அதன் நிர்வாக நடவடிக்கைகளை நடத்துகிறவரும் அச் குற்றம் செய்யப்பட்ட காலத்தில் அக் கம்பெனியின் பொறுப்பாளராக இருக்கிறவரும் அந்தக் கம்பெனியும் அக்குற்றத்தைச் செய்ததாகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் மேல் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

இது தொடர்பான எந்த வழக்கு அல்லது நடவடிக்கையிலும் இச்சட்டத்தின் கீழ் கடன் பட்டவருக்குப் பாதுகாப்பு அளிக்கப்படக் கூடாது என்பதைக் கடன் கொடுத்தவரே நிரூபிக்க வேண்டும்.

**எந்தெந்த கடன்களுக்குப் பொருந்தாது ?**

(அ) ஒரு குறிப்பிட்ட கடனாளிக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ள விவசாய நிலம் மற்றும் ஏனைய சொத்துக்களின் வாடகை பாக்கி.

(ஆ) நில வரி பாக்கியைப் போல் வசூலிக்கப்படத் தக்க தொகைகள்.

(இ) நம்பிக்கை மோசடி காரணமாக ஏற்படும் எந்தக் கடன்களும்.

(ஈ) பணி செய்ததற்காகக் கிடைக்கும் ஊதியம் சம்பளம் கூலி ஆகியவற்றின் பாக்கிகள் தொடர்பான கடன்கள்.

(உ) நீதி மன்ற டிக்ரியின்படி அல்லது மற்றப்படி, உண்டான ஜீவனாம்சக் கடன்கள்.

(ஊ) (1) மத்திய மாநில அரசுக்குக் கொடுக்கப்பட வேண்டிய கடன்கள்.

(2) ஓர் உள்ளாட்சி மன்றத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய கடன்கள்.

(எ) (1) இச்சட்டத்தில் குறிப்பிடப் பட்டவைகளோடு கீழே சொல்லப்பட்டு உள்ள நிறுவனங்களுக்குச் சேர வேண்டிய கடன்கள்—

(அ) 1949-ம் ஆண்டு வங்கிகள் ஒழுங்கு முறைச் சட்டம் பொருந்துகின்ற ஒரு வங்கிக்கு

(ஆ) 1955-ம் ஆண்டு இந்திய ஸ்டேட் வங்கிச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இந்திய ஸ்டேட் வங்கிக்கு

(இ) இந்திய ஸ்டேட் வங்கிச் சட்டம் 2-வது பிரிவு (கே) பகுதியில் துணை வங்கிகள் சட்டம், 1959 வரையறுக்கப்பட்டுள்ள துணை வங்கிக்கு

(ஈ) 1970-ம் ஆண்டு பாங்கிக் கம்பெனிகள் (தொழில் நிறுவனங்களைக் கைப்பற்றுதல், மாற்றுதல்) சட்டத்தின் இரண்டாம் செக்ஷன் டீ பகுதியில் வரையறுக்கப்பட்டவைகளுக்கு

பொருத்தமான ஒரு புதிய வங்கிக்கு

(2) 1963-ஆம் ஆண்டு விவசாய மறு நிதி உதவி வளர்ச்சிக் கழகச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட விவசாய மறுநிதி உதவி வளர்ச்சிக் கழகத்திற்கு.

(ஊ) தமிழ்நாடு அரசிதழில் மாநில அரசால் அறிவிக்கப்பட்டுள்ள வேறு எந்தக் கடன் வழங்கும் நிறுவனத்திற்கு

(2) 1956-ம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தில் பொருள் கூறப்பட்ட அரசாங்கக் கம்பெனிக்கு

(3) மத்திய மாநில அரசுகளுக்குச் சொந்தமான அல்லது அவற்றினால் நிர்வகிக்கப்படுகிற நிறுவனங்களுக்கு

(4) இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு

(5) 1961-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்ததாகக் கருதப்படுகிற நிலவள வங்கி உள்ளிட்ட எந்த ஒரு கூட்டுறவுச் சங்கங்கள்.

(ஏ) ஒரு கடனாளியால் கிரயத்திற்கு வாங்கப்பட்ட அசையும்—அசையாச் சொத்து சம்பந்தமான கடனுக்கு அல்லது தவணை ஒப்பந்தத்தின் கீழ் நிலுவையாகியுள்ள கடனுக்கு இச்சட்டத்தை அமுல் நடத்துவதற்காக, இதன் கீழ் இயற்றப் பட்டுள்ள விதிகளையும் அரசு அறிக்கையிட்டுள்ளது.

இச்சட்டம் சமுதாயத்தில் கிராமப் பகுதிகளில் வாழும் ஏழை எளிய மக்களின் கடன் சுமையைத் தீர்ப்பதற்குப் பெரிதும் பயன்படுவதோடு, உதவி புரிந்து அவர்கள் கடன் தொல்லையின்றிப் புது வாழ்வு தொடங்க அவர்களுக்குப் பேருதவியாகவும் அமையும்




# ஒவ்வொரு மாட்டிலிருந்தும் வருடத்திற்கு ரூ.500/-க்கு மேல் அதிகப்படி சம்பாதியுங்கள்..

## பூன்-ஓ-மில்க்® கிற்கு நாளொன்றுக்கு 20 பைசா செலவிடுங்கள்

**கொழுப்பு மிக்க மிகுதியான பாலுக்கும், கூடுதலான லாபத்திற்கும் பூன்-ஓ-மில்க்**

- **பூன்-ஓ-மில்க்கில்.** ஃபேட்டி மாறுபாட்டு விகிதத்தை அதிகமாக்கி, ஹார்மோனற்ற கெலெக்டோகோக்காகச் செயலாற்றி இதன் பயனாக பால் கறவையை 10% அதிகமாக்கும் அயோடினேடெட் கேஸ்லீன் அடங்கியுள்ளது.
- **பூன்-ஓ-மில்க்கில்.** விரைவில் ஆவியாகும் ஆஸிட்ஸ்களும்—அஸிடேட்டுகளும், பூட்ரிக் ஆஸிடும் அடங்கியுள்ளன; இவை வெண்ணெய்ச்சத்தை 15% அதிகமாக்குகின்றன என்பது ரேடியோ ஐஸோடோபிக் சோதனைகள் மூலம் நிரூபணமாகியுள்ளது.
- **பூன்-ஓ-மில்க்கில்.** மாடுகளை ஆரோக்கியமாக வைத்திருந்து, பால் ஜுரத்தைக் கட்டுப்படுத்தும் கால்ஷியம், ஃபாஸ்ஃபரஸ் மற்றும் வைட்டமின் 'டி'யின் பூஸ்டர் டோஸும் அடங்கியுள்ளன.
- **பூன்-ஓ-மில்க்கில்.** சிறு அளவுகளில் தேவைப் படும், இன்றியமையாத தாதுப் பொருள்கள் எல்லாம் சிறந்த விகிதங்களில் அடங்கியுள்ளன. இவை மாடுகளின் சினைத் திறனை மேம்படுத்துகின்றன.

**பூன்-ஓ-மில்க் மூலம் உங்களுக்கு ஒவ்வொரு மாட்டிலிருந்தும் வருடத்திற்கு ரூ. 500/-க்கு மேல் அதிகப்படி லாபம் கிடைக்கிறது.**

- தினமும் ஒருவேளை தீவனத்துடன் 15 கிராம் **பூன்-ஓ-மில்க்** கலந்து கொடுங்கள்
- ஒவ்வொரு மாட்டிற்கும் தினமும் 1 கிலோ கிராம் அதிகப்படி தீவனம் கொடுங்கள்



**பூன்-ஓ-மில்க் கெடுதலற்றது பயன்மிக்கது**

கறவைமாடுகளுக்கு **பூன்-ஓ-மில்க்** ஒரு விதமான கெடுதலுமற்றது என்பதைப் பிரபலமான மிருக வைத்தியர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

1 கிலோ மற்றும் 450 கிராம் பாக்கட்டுகளில் கிடைக்கிறது.

**பூன்-ஓ-மில்க் உங்கள் மாடுகளுக்கு ஒரு வரப் பிரசாதம் உங்கள் லாபத்திற்கு ஒரு ஊன்றுகோல்**

**பூன்-ஓ-மில்க்—கால் நடைத் தீவனத் துணை உணவு.**
ஆராய்ச்சியின் அடிப்படையில் தயாரிப்பவர்கள்:
ஏரீஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் ப்ரை. லிட்., த.பெ. எண். 9417, பம்பாய் 400 093

*விநியோகஸ்தர்கள்* இண்டோமாக் கார்ப்பரேஷன், 3, கொல்லன் பட்டறைத் தெரு, கீழவெளிவீதி, மதுரை-1 நடராஜ் ஏஜென்சிஸ், 34, கடைவீதி, கோபிச்செட்டிபாளையம், கோயம்புத்தூர் மாவட்டம். தண்ணீர்மலை ஏஜென்சி, 41-எ, கிரி ரோடு, தி. நகர், சென்னை-17' செந்தூரான் ஏஜென்சிஸ், இந்திரா நகர், 3-வது தெரு, காரைக்குடி-623001



# கால்நடை மேம்பாட்டிற்கு உதவும் மத்திய அரசுத் திட்டங்கள்!


பா. சின்னதுரை
கூடுதல் இயக்குநர்,
கால்நடை வளர்ப்புத்துறை,
தமிழ்நாடு.


உலகிலேயே அதிகக் கால்நடைகளின் எண்ணிக்கைகளை நமது பாரதம் பெற்றிருந்த போதிலும், வெளிநாட்டுப் பசுக்களுடன் ஒப்பிடும்போது பால் கொடுக்கும் திறனும் பசுக்களின் தரமும் மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளன.

ஆகவே நமது உள்ளூர் பசுக்களின் தரத்தையும், திறமைகளையும் உயர்த்தும் பொருட்டு நமது கால்நடைப் பராமரிப்புத் துறை, அரிய பல திட்டங்களை நமது அரசின் நிதி உதவி கொண்டு இயங்குவதுடன், மத்திய அரசு நிதி உதவியுடன் (Centrally Sponsored Scheme) பல அரிய திட்டங்கள் நமது மாநிலத்தில் இயங்கி வருகின்றன.

அவைகளில்,

1. வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்,

2. வம்சா வழி ஆய்வுத் திட்டம்,

3. தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஈச்சங்கோட்டையில்வெளிநாட்டு உயரின கால்நடை வளர்ப்புப் பண்ணை நிறுவுதல்,

4. இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து தயாரிக்கும் நிலையத்தை முன்னேற்றுவதற்கான திட்டங்கள் ஆகியவை மிக முக்கியமானவைகளாகும். அவைகளின் விவரம் வருமாறு:

**வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்**

வெக்கை நோய், மிக வேகமாக கால்நடைகளுக்குப் பரவும் ஒரு கொடிய 'வைரஸ்' நோயாகும். இந்த நோயின் விளைவால் உண்டாகும் இறப்பினாலும், கால்நடைகளின் பலக் குறைவினாலும் ஏற்படும் பொருளாதார நட்டம் மிகப் பெரிய அளவாகும். எனவே, வெக்கை நோயை முற்றிலும் ஒழிக்கும் பொருட்டு 1965-ஆம் ஆண்டில் மத்திய அரசு முழு நிதி உதவியுடன் தமிழகத்தில் வெக்கை நோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ் 20 வெக்கை நோய்த் தடுப்புச் சாவடிகளும், 4 எல்லையோர, தடுப்பூசிக் குழுக்களும் செயல்பட ஆரம்பித்தன.

1968ஆம் ஆண்டில் தமிழகத்தில் வெக்கை நோய் மிக வேகமாகப் பரவவே, இத்திட்டத்தின் கீழ் பணி புரிந்த ஊழியர்களை 14 குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் வெக்கை நோய்த் தடுப்பூசி போடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டது. மேலும் மாநில எல்லைகளைத் தாண்டிச்செல்லும், தடுப்பூசி போடாத கால்நடைகளுக்கு, தடுப்பூசி போட்டு, அவைகளை இக்கொடிய நோயிலிருந்து காக்கும் பொருட்டு மாநில எல்லையோரப் பகுதிகளில் 3 வெக்கை நோய்த் தடுப்புச்சாவடிகள் (Rinderpest check-post) நிறுவப்பட்டன.

1970-ஆம் ஆண்டில் மத்திய வெக்கை நோய்க் தடுப்புக் குழுவின் (Central Rinderpest Control Committee) சிபாரிசுக்கு இணங்க மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் 5 தடுப்புச் சாவடிகளும், 4 வெக்கைநோய்த் தடுப்பு விழிப்புக் குழுக்களும் (Vigilance Units) ஏற்படுத்த ஒப்புதல் அளித்தது.

மொத்தம் 8 தடுப்புச் சாவடிகள் தமிழகத்தில் இயங்கிவருகின்றன.

மாநில எல்லையோரப் பகுதிகளில் (Inter-State Borders) 15 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ள கால்நடைகளுக்கு வெக்கை நோய்த் தடுப்பூசிகள் போட்டு, மிக கவனத்துடன் காத்து அப்பகுதிகளை வெக்கை நோய்த் தடுப்பு இடைநிலைப் பகுதியாக (Immune Belt against, Rinderpest) உருவாக்கியுள்ளனர்.

5-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மேலும் ஆறு விழிப்புக் குழுக்களும் ஒரு தடுப்புச் சாவடியும் தமிழகத்திற்கு அவசியமென வலியுறுத்திய மாநில கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநரின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்று, 100 சதவிகிதம் நிதி உதவி அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, பொள்ளாச்சி, டெங்கனிக் கோட்டை, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், அரக்கோணம், பொன்னேரி ஆகிய 6 இடங்களில் விழிப்புக் குழுக்களும், குடியாத்தம் அருகில் தடுப்புச் சாவடியும் நிறுவப்பட்டுள்ளன. இவைகளுக்காக 1—1—1975 முதல் 31—3—1979 வரையான 4 ஆண்டுக் காலத்திற்கு ரூ. 21.61 இலட்சம் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டம் ஒரு வெக்கை நோய்த் தடுப்பு அலுவலரின் கீழ் 23 கால்நடை உதவி மருத்துவர்கள், 187 கால்நடை உதவியாளர்கள், 76 கால்நடைப் பணியாளர்கள் ஆகியோருடன் இயங்கி வருகின்றது.

இத்திட்டம் செயல்பட ஆரம்பித்த பின், வெக்கை நோய், தமிழகத்தில் ஓரளவு ஒழிக்கப்பட்டுள்ளதுடன், வெக்கை நோயினால் ஏற்பட விருந்த பெரும் நட்டமும் கால்நடைப் பராமரிப்புத்துறையின், சீரிய பணிகளால் தவிர்க்கப்பட்டுள்ளது.

**வம்சா வழி ஆய்வுத் திட்டம்**

தமிழகத்தின் கால்நடைகளில் நல்ல இனவிருத்தி ஏற்படுத்தும் பொருட்டு, கால்நடைப் பராமரிப்புத் துறை பல்வேறு திட்டங்களில் தீவிரமாகச் செயலாற்றி வருகிறது. இத்திட்டங்கள் அனைத்தும் எதிர் நோக்கும் பலனை அளிக்க வேண்டுமாயின், சிறந்த சந்ததிகளை உருவாக்க வல்ல, நல்ல தரமுள்ள காளைகள் இன்றியமையாததாகும். இவ்வித ஆற்றல் மிக்க பொலி காளைகளின் திறனை மதிப்பிடுவதற்காக, நிபுணர்கள் கையாளும் முறையே வம்சா வழி ஆய்வுத் திட்டம் ஆகும்.

வம்சா வழி ஆய்வுத் திட்டத்தின் மூலம் சீரான பராமரிப்பும், நல்ல தீவன முறையும், மேற்கொள்ளப்பட்டு இன விருத்தி செய்த தாய்ப் பசுவின் செயல் திறனுடன் அதே முறையில் வளர்க்கப்படும் அதற்குப் பிறந்த கன்றுகளின் செயல் திறனை ஒப்பிட்டு, அக்காளையின் 'குணங்களை வழங்கும் திறன்' ( transmitting ability ) நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டிலும் நல்ல சந்ததிகளைத் தேர்ந்தெடுக்க முடிகின்றது. மேலும், இத்திட்டத்தின் மூலம், பின்சந்ததிகளில் காணப்படும் தனித் தன்மைகளை ஆராய்ந்து, இத்தன்மைகளைக் கொண்டு வளர்ச்சியின் மதிப்பை நிர்ணயிக்க இயலும்.

பால் வளம் பெருக்குவதற்கான வளமான சந்ததியை உருவாக்குவதில் வேகமான முன்னேற்றம் காண்பதற்காக, ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் மத்திய அரசு நிதி உதவியுடன் சிவப்பு சிந்தியினக் காளைகளைப் பெருக்கும் நோக்கத்துடன் ஒரு திட்டம் துவக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு 1971—'72-ஆம் ஆண்டு முதல் 1974-ஆம் ஆண்டு வரையான மூன்று ஆண்டுக் காலத்திற்கு, ரூ. 13.37 இலட்சம் வரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1973-74-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டவை இளம் பசுக்களாதலால் அவை ஈனும் நிலையை அடைவதற்கு 3 ஆண்டுகளாகும். ஆகவே, இத்திட்டத்தின்படி பலனடைய சாத்தியமில்லாததால் குறிப்பிட்ட காலத்தை விட ஓராண்டுக் காலத்திற்குப் பின்னரே இத்திட்டம் செயல்பட ஆரம்பித்தது. எனவே, மீண்டும் 3 ஆண்டுக் காலத்திற்கு இத்திட்டத்தை நீடிப்பது அவசியமாகும்.

இத்திட்டம் தொடர்ந்து செயல்படுமாயின், தமிழகத்தில் மிகச் சிறந்த பொலி காளைகளைத் தேர்ந்தெடுத்து, அதன் மூலம் திறமை வாய்ந்த சந்ததிகளைப் பன் மடங்காகப் பெருக்கி, பாரதத்தின் கால்நடை வளர்ச்சியில் தனிப் பெரும் இடத்தைத் தமிழகம் வகிக்கும் என்பதில் ஐயமில்லை.



ஜெர்சி பசு

தஞ்சை மாவட்டத்திலுள்ள ஈச்சங்கோட்டையில் உயரின வெளிநாட்டுக் கால்நடை வளர்ப்புப் பண்ணை நிறுவுதல்

வெளிநாட்டு உயரின 'ஜெர்சி' 'பிரிசியன்', 'ரெட்டேன், 'ப்ரவுன் ஸ்விஸ்' போன்ற பசுக்களின் பால் கொடுக்கும் திறனை விட, நம் உள்ளூர் பசுக்களின் பால் தரும் திறன் மிகக் குறைவு.

மேலும், நமது உள்ளூர் பசுக்கள் பெரும்பாலும் (Non-descript type) வகைப்படுத்தப் படாத இனங்களாக உள்ளன. வெளிநாட்டு (Exotic bulls) காளைகளைக் கொண்டு கலப்பு இன விருத்தி செய்வதின் மூலம் இப்பசுக்களின் தரத்தையும், பால் கொடுக்கும் திறனையும் விரைவில் முன்னேற்றமடையச் செய்யலாம்.

தமிழகத்தில் 28 இலட்சம் பசுக்கள் இருக்கின்றன. ஆனால் சுமார் 150 உயரின வெளிநாட்டுக் காளைகள் மட்டுமே உள்ளன. இதுவரை 52 காளைகள் பல்வேறு நாடுகளிலிருந்து அன்பளிப்பாக கிடைக்கப் பெற்றவை. இக்காளைகளுடன் வெளிநாட்டு உயரினப் பசுக்களையும் மைய இருப்பாக (necleus female stock) பராமரித்தால், தங்குதடையின்றி வெளிநாட்டு உயரினக் காளைகளைத் தொடர்ந்து கிடைக்குமாறு செய்யலாம். மேலும், ஒவ்வொரு முறையும் பொலி காளைகளுக்காக வெளி நாடுகளை எதிர் நோக்கி இருக்கவேண்டிய அவசியமில்லை.

எனவே, சுய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உயரினக் காளைகளையும் பசுக்களையும் நாமே நமது சீதோஷ்ண நிலைக்குத் தக்கவாறு உற்பத்தி செய்து கொள்ளுவது அவசியம் என உணர்ந்து நமது அரசும், மத்திய அரசும் தஞ்சை மாவட்டத்திலுள்ள ஈச்சங்கோட்டையை, டென்மார்க் அரசின் சிறப்பு ஆய்வாளர்களைக் கொண்டு பார்வையிட்டு, அங்கு மத்திய அரசு நிதி உதவியுடன் வெளிநாட்டு உயரினக் கால்நடைப் பண்ணையை நிறுவ இசைந்துள்ளன.

இப்பண்ணையை நிறுவுவதற்காக 1975—'76-ஆம் ஆண்டு முதல் 1976—'79ஆம் ஆண்டு வரையிலான நான்கு ஆண்டு காலத்திற்கு ரூ. 93.33 இலட்சம் நிதி உதவி அளிப்பதற்கு மத்திய அரசு இசைந்துள்ளது. இத்தொகையில் 75 சதம் மத்திய அரசின் உதவியாகவும், 25 சதம் மாநில அரசிற்கு அளிக்கும் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு வழங்கும் இப் பெருந் தொகையைப் பயன் படுத்தி தமிழகத்தின் எதிர்கால வளத்திற்கு வழி கோலும் வெளி நாட்டு உயரினக் கால்நடைகளை வளர்ப்பதற்கான உடனடி ஏற் பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

**கால்நடை நோய் தடுப்பு மருந்து தயாரிக்கும் நிலையம், இராணிப் பேட்டை.**

கால்நடைத் தொத்து நோய் களினால் ஏற்படும் பெருத்த பொருளாதார நட்டத்தினைத் தவிர்ப்பதற்காக, நோய்த்தடுப்பு முறையில் தனிக்கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

கால்நடை உற்பத்தியின் வெற்றி, நோய்த் தடுப்புத் திட் டங்களைச் சார்ந்திருப்பதால் பல வகையான நோய்த் தடுப்பு மருந்துகளை உற்பத்தி செய்ய வேண்டியது மிக அவசியமாகும். இதனை அடிப்படையாகக்கொண்டு வெக்கை நோய்த்தடுப்புமருந்தை (Anti-serum against Rinderpest) உற்பத்தி செய்வதற்காக 1932 -ஆம் ஆண்டு, முதன் முதலாக சென்னையில் நோய்த் தடுப்பு, மருந்து தயாரிக்கும் நிலையம் ஒன்று நிறுவப்பட்டது. பின் இந் நிலையம், 2-வது மகா யுத்தத்தின் போது, இராணிப்பேட்டைக்கு மாற்றப்பட்டது. கால்நடைகளை யும், கோழிகளையும் தொற்று நோயிலிருந்து பாதுகாக்கும் பல் வேறு வகையான தடுப்பு மருந்து களைத் தயாரிப்பது மட்டுமின்றி, மருந்துகளின் தரத்தை உயர்த்து வது, புதிய மருந்துகளையும், நோயின் மூல காரணங்களைக் கண் டறிதல் போன்ற பல்வேறு வகை யான ஆராய்ச்சிகளிலும் இந்த நிலையம் ஈடுபட்டுள்ளது.

தற்சமயம் இந்நிலையத்தில் சப்பை நோய், தொண்டை அடைப்பான், வெக்கை நோய் போன்ற கொடிய நோய்களி லிருந்து கால்நடைகளைக் காப்ப தற்காக 23 வகையான பல்வேறு தடுப்பு மருந்துகள் தயார் செய் யப்படுகின்றன. இவைகளில் உற்பத்தியை மேலும் அதிகப் படுத்துவதுடன்,.பல புதிய வகை யான தடுப்பு மருந்துகள் தயாரிப் பதற்கும் ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.


பிரிஷியன் காளை

இந்நிலையம், மாநிலத் தடுப்பு மருந்துகள் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், மற்ற மாநிலங்க ளுக்கும் கொடுத்து வருகிறது. பெரிய அளவில் கலப்பின விருத் தித் திட்டங்கள் செயல்படுத்தும் இந்த நேரத்தில், கால்நடைகளின் நலங் காப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதால், நோய்த் தடுப்பு மருந்துகளின் தேவை, நாளுக்கு நாள் அதிகரித்து வரு கின்றது. வரும் காலங்களில் இத்தேவை 100 சதவிகிதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது. ஆகவே, ஐந்தாண் டுத் திட்டப் பிரேரணையில் இந்த நிலையத்தை விரிவுபடுத்துவதற் காக ரூ. 54.03 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றிற்கெல்லாம் சிகரமாக சிறு விவசாயிகள், நடுத்தர விவ சாயிகள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் தங்கள் வருமா னத்தையும், வாழ்க்கைத் தரத்தை யும் உயர்த்திட புரட்சிகரமான கால்நடை அபிவிருத்தித் திட்டங் களைச் சுமார் 5 கோடி ரூபாய்ச் செலவில் 1976—'77லிருந்து 78—79 வரை, மூன்றாண்டுக் காலங் களில் செயல்படுத்த ஏற்பாடாகி யுள்ளது. இத்திட்டத்தின்படி தமிழகத்தில் 8 மாவட்டங்களில் உயர் ரக கன்று வளர்ப்பு, ஆடு, கோழி, மேலைநாட்டுப் பன்றி வளர்ப்பு ஆகிய தொழில்களில் சுமார் 50,500 பேர் ஈடுபட்டுப் பயன் பெறுவார்கள்.

இதுபோல, கால்நடைகளின் வளத்தையும், நாட்டு வளத்தை யும் பெருக்கும் பொருட்டு மத் திய அரசு முழு நிதி உதவியுட னும், மாநில அரசு நிதியுடனும் பல திட்டங்களைத் தீட்டிச் செயல் பட்டு வரும் இந்நாளில், கால் நடைப் பராமரிப்புத் துறையின் அரிய பணிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு உழவர் பெருமக் கள் கேட்டுக் கொள்ளப்படு கிறார்கள்.


சிந்திப் பசு

# அஞ்சலக வங்கியின்
# மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

ரூ. 20½ இலட்சத்திற்கு
11,116 பரிசுகள்

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/–க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறுதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.

# நில், கவனி, புறப்படு!






மின்சார ரயில் வந்து நிற்கிறது. மக்கள் அவசர அவசரமாக ரயிலில் ஏறிக்கொள்கின்றனர். ஒரு சில நிமிடங்களில் ரயில் புறப்படுகிறது.

அப்போது—

ரயில் புறப்படும் வரை ஏறாமல் இருந்த அந்த இளைஞன், ரயில் கிளம்பியதும் ஓடிப்போய் ஒரு பெட்டியில் தொற்றிக் கொள்கிறான். மின்சார ரயில் வேகத்துக்கு இவன் ஓட்டம் எம்மாத்திரம்?

கைப்பிடி நழுவுகிறது. அலறியபடி கீழே விழுகிறான். விபத்துக்குள்ளாகிறான்.

## அவசரம் கூடாது!

சென்னை பேசின்பிரிட்ஜ் ரயில் நிலையத்தில் அண்மையில் நடந்த ஒரு சம்பவம்.

ஓடும் ரயிலிலிருந்து இறங்கிய ஒரு பெண்மணி, ரயிலில் சிக்கி இரண்டு கால்களும் துண்டிக்கப்பட்டு, பிறகு இறந்துவிட்ட செய்தி நம் நெஞ்சத்தை நெகிழவைக்கிறது.

இந்த நிலைமை ஏன்?

இந்த நிலைமையை நாமே அல்லவா உண்டாக்கிக் கொள்கிறோம்?

படித்துப் பட்டம் பெற்று நாளைய நாயகனாக விளங்கவேண்டிய ஒருவன்; நடுவிலேயே உயிரை மாய்த்துக் கொள்ளலாமா?

இளமையின் வேகத்தில்-மற்றவர்கள் தன்னைப் பெருமையாக நினைத்துக் கொள்ள வேண்டும் என்ற அற்ப ஆசையில் - ஓடும் ரயிலில், பஸ்ஸில் ஏறுவதும் இறங்குவதும் எத்தனை மடமைத்தனம்?

கார்-லாரி மோதல்!

பஸ் உருண்டு பலர் பலி!

சைக்கிளில் போன வாலிபர் சாவு!

மாட்டு வண்டி-பஸ் மோதி இருவர் மரணம்!

இப்படி, சாலை விபத்துக்கள் பல உண்டு. இந்த விபத்துக்களுக்கெல்லாம் காரணம் என்ன?

அஜாக்கிரதைதான்!

சாலை விதிகளைக் கடைப்பிடிக்காததுதான்!

இன்னும் சொல்லப்போனால், அவசரம்தான்!

## சட்டத்தை மதிக்க வேண்டும்!

சாலையில் போவோர் வருவோர், அவர் பாதசாரியாக இருக்கட்டும் அல்லது வாகன மோட்டுபவராக இருக்கட்டும் எல்லோருமே சாலை விதிகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும்; சட்டத்தை மதிக்க வேண்டும். சட்டத்தையோ; விதியையோ மீறினால் அது விபத்து வடிவில் நம்மையே மிதித்துவிடும்!

சைக்கிளில் அதிக பாரத்தை ஏற்றிக் கொண்டு போவது; ஸ்கூட்டரில் குடும்பத்தையே ஏற்றிக் கொண்டு செல்வது; பஸ் படிகளில் நின்றுகொண்டோ அல்லது தொற்றிக் கொண்டோ செல்வது-இவையெல்லாம் விபத்துக்கு வழி வகுக்கும் செயல்களாகும்!

நெரிசல் மிகுந்த நேரங்களில் பயணத்தைத் தவிர்ப்பது நல்லது. அல்லது குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாகவே வந்து பயணத்தை மேற்கொள்வது நல்லது. பஸ் படிகளில் நின்று கொண்டோ தொற்றிக் கொண்டோ செல்வோமானால், 'நிச்சயம் நம் உயிர் நம்மிடமில்லை!' என்று தீர்மானித்துக் கொள்ளலாம்.

அவசரமும், பொறுப்பு இல்லாத தன்மையுமே எல்லாக் காரியங்களுக்கும் தடையாக இருப்பவை.

பொதுவாக, நின்று, நிதானத்துடன் செயல்பட்டால், நாம் நினைத்ததை நிறைவேற்றலாம்.

## படித்தால் மட்டும் போதுமா!

சாலையில் நடந்து செல்வதற்கு, குறுக்கே போவதற்கு, வாகனங்கள் போய் வருவதற்கு என தனி இடங்கள் உள்ளன. கண்ட இடத்தில் குறுக்கே போவதும் நடந்து செல்வதும் உயிருக்கே ஆபத்து என்பதை பத்திரிகைகள் நமக்கு எச்சரிக்கின்றன அல்லவா?

சாலை விதிமுறைகளைக் கடைப்பிடித்து நடக்க வேண்டும் என்பதற்காகவே; போக்குவரத்துத் துறைக் காவலர்கள் 'வேன்'களில் சுற்றிய வண்ணம் சாலை விதிமுறைகளைத் தெரிவிக்கின்றனர். சில முக்கிய இடங்களில் ஒலி பெருக்கி மூலமும் எச்சரிக்கை செய்கின்றனர். நடமாடும் நீதிமன்றமும் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று சாலை விதிகளைமீறுவோரைத் தண்டிக்கின்றது.

பள்ளி மாணவர்கள் சாலை விதிமுறைகளைப் பாடத்தில் படித்து



அண்ணாசாலையில் பள்ளி மாணவர்கள் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துகின்றனர்.

விட்டால் மட்டும் போதாது, அதனைக் கடைப்பிடிக்கவும் செய்ய வேண்டும்.

சென்னை அண்ணாசாலையிலுள்ள கிறித்தவ சர்ச் உயர்நிலைப்பள்ளியில் (Christ Church High School) சாலைவிதி முறைகள் கற்பிக்கப்படுவதுடன், அம்மாணவர்கள் போக்குவரத்து ஒழுங்கைக் கண்காணிக்கவும் ஈடுபடுத்தப்படுகின்றனர். அண்ணாசாலையில் அம்மாணவ, மாணவியர் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதையும் நாம் பார்க்கலாம்.

### குறுக்குவழி கூடாது!

வீட்டை விட்டு வெளியே வருவோர்க்கு, சாலைவிதிகளே கவனத்துக்கு வர வேண்டும். படித்தவர், படிக்காதவர், குழந்தைகள்-பெரியோர்கள் வரை யாவருக்கும் இது பொருந்தும்.

சென்னை நகரின் நெரிசல் மிகுந்த இடங்களில் சுரங்கப்பாதைகள் பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பயன்படுத்திக் கொள்ள என்ன தயக்கமோ, சோம்பலோ தெரியவில்லை. 'குறுக்கு வழி' தான் அவர்களுக்கு உடனே நினைவுக்கு வருகிறது!

நம்முடைய அலட்சியப் போக்கினால் நாம் அடைவது சாக்காட்டையே என்பதை நாம் உணர வேண்டும்.

### சாலை விபத்துக்களின் பட்டியல்!

இந்தியாவில் ஆண்டுதோறும் சாலை விபத்துக்களுக்குப் பலியாகிறவர்கள் எத்தனைப்பேர் தெரியுமா? 11 ஆயிரம் பேர்! இவர்களில் 50 சதவிகிதம் பேர் பாதசாரிகள். 25 சதவிகிதம் பேர் சைக்கிள் ஓட்டுபவர்கள். இந்தத் தகவலை இந்தியப் போக்குவரத்து ஆய்வுக் கழக அதிகாரி டாக்டர் என். எஸ். சீனிவாசன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதோ இன்னும் சில புள்ளி விவரங்கள்!

1973-74-ஆம் ஆண்டில் சென்னை நகரில் நடந்த சாலை விபத்துக்களாவன:

அவ்வாண்டில் நடந்த மொத்த விபத்துக்கள்—7,521

இதில் இறந்தவர்களின் தொகை—248

காயமடைந்தவர்களின் எண்ணிக்கை—4,418

அவ்வாண்டில் நடந்த மொத்த வாகன விபத்துக்கள்—11,752.

### குடிபோதையில் கார் ஓட்டாதீர்!

விபத்துக்களுக்கு இன்னொரு காரணம், குடிபோதையில் கார் ஓட்டுவதும் ஆகும்.

இது சம்பந்தமாகச் சென்னை நகரக் காவல்துறை ஆணையாளர் திரு கே. செந்தாமரை பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் கூறுவதாவது:

''மது பெர்மிட் வைத்திருப்பவர்கள் மது அருந்தியவுடன் தங்களது மோட்டார் கார்களை ஓட்டிச் செல்ல வேண்டாம்.

''அண்மையில் அவ்வாறு குடித்துவிட்டு காரோட்டிய ஒருவரது கார் விபத்துக்குள்ளானது. அவருக்கு நீதிமன்றத்தில் ரூ. 1,000 அபராதம் விதிக்கப்பட்டது; அத்துடன் அவரது டிரைவிங் லைசென்சும் ரத்து செய்யப்பட்டது.

''குடிபோதையில் அல்லது போதை தரும் மருந்தை அருந்தியவுடன் மோட்டார் வாகனங்களை ஓட்டிச் செல்வதென்பது மோட்டார் வாகனச் சட்டத்திற்கு முரணானது மட்டுமல்ல, மிகப் பெரிய விபத்துக்கள் ஏற்படுவதற்கும் அல்லது மரணம் சம்பவிக்கக்கூடிய நிலை ஏற்படுவதற்கும் காரணமாகும்''.

### நிதானம் தேவை!

பள்ளிக் குழந்தைகள் அநியாயமாகச் சாலை விபத்துக்கு ஆளாகும் அவல நிலைமையையும் நாம் அவ்வப்போது பார்க்கிறோம். சாலை விதிகள் ஓரளவு தெரிந்த பெரியோர்களே விபத்துக்கு



ஆளாகிறபோது, பிஞ்சு உள்ளங்களுக்கு என்ன தெரியும்? பெற்றோர்களாகிய நாம்தான் அவர்களுக்குச் சாலை விதி முறைகளைக் கற்றுத் தர வேண்டும்.

பள்ளிகளிலிருந்து வெளியே வரும் குழந்தைகள் நாலா பக்கமும் சிதறி ஓடி வருவதை நாம் பார்க்கின்றோம். அந்தச் சமயத்தில், எங்கிருந்தோ வரும் ஒரு வண்டி மோதிவிட்டு மின்னல் வேகத்தில் மறைந்துவிடும்!

வாகனமோட்டிகள் பள்ளிகள் இருக்கின்ற இடத்தில் சற்று வேகத்தைக் குறைத்து நிதானமாகச் சென்றால் என்ன?

சாலையில் வாகனமோட்டுவோர், பாதசாரிகள் ஆகியோர் முக்கிய இடங்களில் பொருத்தப்பட்டுள்ள போக்குவரத்து விளக்கு சமிக்ஞைகளைக் (Traffic Light Signals) கண்டிப்பாய் கவனிக்க வேண்டும்.

போக்குவரத்தைக் கண்காணிக்கும் காவலரின் சைகைகளுக்கும் எல்லாரும் பணிய வேண்டும்.

**கிராமப் பகுதியில் கவனிக்க வேண்டியவை**

நகரை விட்டு கிராமப் பகுதிகளுக்குச் செல்கின்ற வாகன மோட்டிகள், சாலைப் போக்குவரத்து அடையாளக் குறிப்புகளை (Road Traffic Signs.) கவனிக்க வேண்டும். கண்ணை மூடிக்கொண்டு மின்னல் வேகத்தில் சென்றால் நம் உயிரும் மின்னல் வேகத்தில் பறிக்கப்பட்டுவிடும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இரயில் பாதை, வளைவுப்பாதை, செங்குத்துப்பாதை, மலைப் பாதை, சாலைச்சந்திப்பு, திருப்பங்கள் முதலானவற்றைக் குறிக்கும் அடையாளக் குறிப்புகளைக் கவனித்து நடக்க வேண்டும். அதேபோல் வேகக் கட்டுப்பாட்டு இடத்திலும், 'ஹாரன் அடிக்கக் கூடாது' என்ற இடத்திலும் நாம் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

கிராமப் பகுதியில் வாகன மோட்டுவோர், எச்சரிக்கையுடன் செல்வது நல்லது. ஆடுமாடுகள் அல்லது மாட்டு வண்டிகளைத் தாண்டிச் செல்லும்போது அவர்கள் மெதுவாகத்தான் போகவேண்டும். விலங்குகளை மிரள வைக்கும் செயல் எதையும் செய்யக்கூடாது.

விலங்குகள் பயந்த சுபாவமுள்ளதால். ஹாரன் அடித்தோ, வேகத்தைக் கூட்டியோ சென்றால் அவை நாலாபக்கமும் சிதறி ஓடும். அதனால் விபத்துக்கு நாம் ஆளாக நேரிடும்.




போக்குவரத்து நிறைந்தசாலைகளுக்கு அருகில் உள்ள கிராமங்களில் வாழும் மக்கள் தங்கள் சிறு குழந்தைகளைச் சாலையில் விளையாட அனுமதிக்கக் கூடாது. அதேபோல் தங்கள் கால்நடைகளைச் சாலையின் வழியாக ஓட்டிச் செல்லும்போது, சாலையின் ஓரமாகவே ஓட்டிச் செல்ல வேண்டும்






பல கிராமங்களில் தார்ச் சாலைகளின் மேல் நெல், கடலை முதலியவைகளைக் காய வைக்கின்றார்கள். இதனால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிறது. இவ்வாறு செய்வதைத் தவிர்ப்பது பொதுமக்களின் கடமையாகும்.

**நில், கவனி, புறப்படு!**

சென்னைப் போக்குவரத்துத் துணை ஆணையாளர் அலுவலகத்தில் நாள்தோறும் சாலை விபத்துக்களைப் பற்றிய புள்ளி விவரம், கிரிக்கெட் பந்தய 'ஸ்கோர்' மாதிரி குறிக்கப்படுவது நமக்கெல்லாம் ஒரு எச்சரிக்கையாய் இருக்கிறது. அதேசமயம் நம் நெஞ்சம் வேதனையால் விம்முகிறது!

அஜாக்கிரதை!

அலட்சியப்போக்கு!

அவசரம்!

இவை ஆபத்துக்கு வழிவகுக்கும் என்பதை உணர்ந்து விழிப்புணர்ச்சியுடன் நாம் செயல்படுவோமானால் விபத்தென்னும் கோரப் பிடியிலிருந்து விடுபடலாம்.

அதற்கு நாம் கடைப்பிடிக்க வேண்டிய மிக முக்கியமான சாலைப்பாதுகாப்பு: விதி 'நில், கவனி, புறப்படு!' என்பது அன்றோ?

—பி. வி. கிரி.




காதி கிராப்ட்
தமிழ்நாடு
பதநீர்
ஏராளமான சத்து
என்னிடம் உண்டு
தாராளமாய்
என்னைப் பயன்
படுத்துவீர் - "பனை"
இனிமைக்குப் பனஞ்சீனி,
பனை வெல்லம், பனங்கற்
கண்டு, சாக்லெட்கள்;
ஜாம், பழரசங்கள்.
குளிர்ச்சிக்குப் பதநீர்,
பாம்ஒ குளிர்பானங்கள்
எழிலுக்குப் பனை ஓலைப்
பொருட்கள்.
JAM
துப்புரவிற்குப் பனம்
தும்பு பிரஷ்கள். தரமான
மலிவான, இவை
வாங்கிடத் தமிழக
மெங்கும் 180 காதி
கிராப்ட்.
காதி கிராப்ட்
தமிழ்நாடு கதர்,
கிராமத் தொழில்வாரியம்,
'குறளகம்',
எஸ்ப்ளனேடு,
சென்னை - 600 001
KK/380 TAM

(41-ம் பக்கத் தொடர்ச்சி.)

மற்றப் பின்தங்கியப் பிரிவினர்கள் ஆகியோருக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு புத்தகப் பாங்குகள் திறக்கப்பட்டுள்ளன.

### 20. புதிய தொழிற்பயிற்சித் திட்டம்

குறிப்பாக நலிந்த பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு பயிற்சி வசதிகளை விரிவாக்கும் நோக்கத்துடனும், அதன் மூலம் வேலைவாய்ப்பு அளிக்கும் கருத்துடனும் வேலையில்லாத இளைஞர்களுக்குப் பயனளிப்பதற்காக தொழில் பயிற்சியாளர் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தொழில்பயிற்சி அளிப்பதற்கு மொத்தம் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் இடங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருந்தது. இத்துடன் மேலும் 25 ஆயிரம் இடங்கள் ஏற்படுத்தப்பட்டு, தற்போது சுமார் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் இடங்கள் தொழிற் பயிற்சியாளர்களுக்கு உள்ளன. 43 புதிய வர்த்தகங்களும், 13 தொழிற்சாலைகளும் தொழில் பயிற்சியாளர் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அவற்றைச் சேர்த்து மொத்தம் 103 வர்த்தக நிறுவனங்களிலும், 216 தொழிற்சாலைகளிலும் இந்த வசதி இப்பொழுது உள்ளது. 20 அம்சப் பொருளாதார திட்டம் அறிவிக்கப்படுவதற்கு முன்பு 40 ஆயிரம் தொழில் பயிற்சி இடங்களுக்கு மேல் பயன்படுத்தப்படாமலிருந்தன. தற்போது மேற்கொள்ளப்பட்ட சிறப்பு இயக்கத்தின் பலனாக, பெரும் முன்னேற்றம் அடையப்பட்டு, இப்பொழுது பயன்படுத்தப்படாத தொழில்பயிற்சி இடங்களே பெரும்பாலும் இல்லை என்னும் நிலை ஏற்பட்டுள்ளது. உதவிப் பண விகிதங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. தாழ்த்தப்பட்ட வகுப்பு, பழங்குடிப் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்தவர்களுக்கும் உடல் ஊனமுற்றவர்களுக்கும், சமுதாயத்தின் மற்ற நலிந்த பிரிவினர்களுக்கும் தொழில் பயிற்சியாளர் இடங்களில் ஒரு நியாயமான பங்கு அளிக்கப்பட்டுள்ளது.

### புத்துணர்வுகள் பிறந்தன!
### புதிய சாதனைகள் மலர்ந்தன!

பொதுவாக, நெருக்கடி நிலைப் பிரகடனத்தினால் ஒழுங்கு, கட்டுப்பாடு, அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்கான புதிய உணர்வு எழுந்துள்ளது. இந்திய வரலாற்றின் நெருக்கடியான நேரத்தில் பிரதம மந்திரி அறிவித்த 20-அம்சத் திட்டம், அந்தப் புத்துணர்வுகளுக்கு மேலும் ஊக்கமளித்தது. நெருக்கடிநிலை, 20-அம்சத்திட்டம் ஆகியவற்றின் பலன்களை இப்பொழுது அனைவரும் காண்கிறோம். நெருக்கடி நிலைப் பிரகடனத்திலிருந்து அடைந்துள்ள சாதனைகளைக் கண்டு நாடு பெருமிதம் கொள்கிறது. மக்களிடையே இப்பொழுது தன்னம்பிக்கை நிறைந்துள்ளது. வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் நல்ல செயல்பாடும், மேம்பட்ட ஒழுங்குக் கட்டுப்பாடும் நிலவுகிறது.

இருபது அம்சப் பொருளாதாரத்திட்டம் நீண்டகால மற்றும் குறுகியகால அம்சங்கள் இரண்டையும் கொண்டிருக்கிறது. எனவே, இதுவரையில் அடையப்பட்ட பலன்களை ஒன்று திரட்டி நிலைப்படுத்துவதற்கும், 20-அம்சப் பொருளாதாரத் திட்டத்துக்கு மேலும் முக்கியத்துவம் அளிப்பதற்கும் உறுதியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.


## தமிழ்நாடு மின்சார வாரியம்
## ஒரு வேண்டுகோள்

சாதாரணமாக ஜூன் மாத மத்தியில் தென்மேற்குப் பருவக் காற்றால் ஏற்படும் பருவ மழை தமிழ்நாட்டில் தீவிரமாகவில்லை. எனவே நீர்த் தேக்கங்களில் நீர் சேமிப்பு, குறைந்துவிட்டது. 1975 மற்றும் 1974-ல் முறையே 1075 MV மற்றும் 505 MVவாக இருந்த சேமிப்பு தற்போது 148 MV மட்டுமே உள்ளது. எனவே நீர் மின் உற்பத்தியைக் குறைக்கவும் நீர்த் தேக்கங்களில் கிடைக்கும் நீரைச் சேமிக்கவும் அவசிய மேற்பட்டுள்ளது. **எனவே தொழிலகங்களின் மின் உபயோகத்தில் 25 முதல் 30 சதவிகிதம்வரை வெட்டை அமுலாக்க வேண்டிய அவசியம் தமிழ்நாடு அரசுக்கு ஏற்பட்டுள்ளது.** அனல் மின்நிலையங்களில் உற்பத்தியை அதிக அளவுக்கு அதிகரிக்கவும் மேற்கண்ட மின்வெட்டுடன் நிலைமையை சமாளிக்கவும் எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு உற்பத்தித்திறன் இல்லாததால், நெய்வேலி மற்றும் எண்ணூர் அனல் மின் நிலையங்களில் டர்போ செட்டுகளின் பாதுகாப்பை உறுதி செய்ய, அனுமதிக்கப்பட்டுள்ள எல்லைக்குள் அலைவெண் இருக்க வகை செய்து, தேவையில் 20 முதல் 40 சதவிகிதம் வரையும் மின்வெட்டும் அமுலாக்கப்படுகிறது.

தங்களது அவசியமற்ற மின் உபயோகத்தை நிறுத்திக் கொண்டும் மின் உபயோகத்தை குறைத்துக் கொண்டும் தமிழ்நாடு மின்சார வாரியத்துடன் அன்புடன் ஒத்துழைக்கும்படி எல்லா தொழிலதிபர்களையும் மற்றும் மின்சாரம் உபயோகிப்போர் அனைவரையும் நான் வேண்டிக் கொள்ளுகிறேன். மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட ஜெனரேட்டிங் செட்டுகளை சொந்தமாக வைத்துள்ள தொழிலதிபர்கள் முடிந்த வரை அதிகபட்ச அளவுக்கு அவைகளை உபயோகித்து மின்சார சப்ளையிலிருந்து தங்களது உபயோகத்தைக் குறைத்துக் கொள்வதின் மூலம் தற்போது நிலவும் கஷ்டமான மின்சார தட்டுப்பாடு நிலைமையை சமாளிக்க உதவும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**மின்சார பற்றுக்குறைநிலை அடிக்கடி பரிசீலிக்கப்படுகிறது தற்போதைய கட்டுப்பாடு காரணமாக தொழிலதிபர்களுக்கும் மற்றும் மின்சாரத்தை உபயோகிக்கும் மற்றவர்களுக்கும் ஏற்படும் கஷ்டங்களை குறைக்க தகுந்த நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும்.**

**S. P. அம்ப்ரோஸ்,**
தலைவர்,
தமிழ்நாடு மின்சார வாரியம்.

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழு

கீழ்க்கண்ட உத்தியோகங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன:

1. **பதினைந்து உதவிப் பல்நோய் அறுவை மருத்துவர் (அசிஸ்டெண்ட் டெண்டல் சர்ஜன்கள்)** : (ஷெ. வ. மற்றும் ஷெ. ப. 3; பி. வ. 4 மற்றும் ப. போ.8)

**சம்பளம்** : மாதத்துக்கு ரூ. 525-25-600-30-690-35-900.

**வயது**: 30 வயதுக்குக் கீழ்.

குறைந்த பட்சப் பொதுக்கல்வித் தகுதிக்கு உயர்ந்ததான பொதுக்கல்வித் தகுதி பெற்றிராத ஷெ. வ. மற்றும் ஷெ. ப. யைச் சேர்ந்த மனுதாரர்களின் விஷயத்தில் 35 வயதுக்குக் கீழ்.

**கல்வித்தகுதி** (1) பல்நோய் அறுவை மருத்துவத்தில் ஒரு பட்டம் அல்லது (2) இந்திய பல்நோய் மருத்துவக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதொரு அமைப்பின் 'L.D.S.', அல்லது L.D.S.C.' தகுதி

2. **ஐந்து கொதிகலன் ஆய்வாளர் (இன்ஸ்பெக்டர் ஆப் பாய்லர்ஸ்)** : (ஷெ. வ. மற்றும் ஷெ. ப. 1; பி.வ.-1 மற்றும் ப. கோ-3

**சம்பளம்** : மாதத்துக்கு ரூ. 575-25-600-40 1,000.

**வயது** : 25 வயதுக்கு மேல் மற்றும் 35 வயதுக்குக் கீழ். குறிப்பு: குறைந்தபட்ச வயது வரம்பு 25 வயது என்பது ஷெ. வ., ஷெ. ப. மற்றும் பி.வ ஆகியோருக்கும் பொருந்தும். குறைந்த பட்ச பொதுக்கல்வித் தகுதி உயர்ந்ததான பொதுக்கல்வித் தகுதி பெற்றிராத ஷெ. வ. மற்றும் ஷெ. ப. யைச் சேர்ந்த மனுதாரர்கள் விஷயத்தில்: 40 வயதுக்குக் கீழ்.

**கல்வித்தகுதி** : (1) மெகானிகல் இஞ்ஜினீரிங்கில் ஒரு பட்டம் பெற்றிருத்தல் அல்லது இந்தியாவைச் சேர்ந்த 'இன்ஸ்டிடியூஷன் ஆஃப் மெகானிகல் இஞ்ஜினீயர்ஸின் அஸோஸியேட் மெம்பர்ஷிப் எக்ஸாமினேஷனில்' தேறியிருத்தல் அல்லது இஞ்சினியராக முதல் வகுப்பு 'போர்ட் ஆஃப் டிரேட் சர்டிபிகேட் ஆஃப்காம்பிடென்ஸி, பெற்றிருத்தல் மற்றும் (2) ஸ்டீம் இஞ்ஜின்கள் மற்றும் பாய்லர்களின் டிசைன் கன்ஸ்ட்ரக்ஷன், ரிப்பேர், பராமரிப்பு மற்றும் அவற்றை வேலைசெய்ய வைப்பதில் செய்முறை இஞ்ஜினியராக இருந்து ஒரு வருட காலத்துக்குக் குறையாமல் அனுபவம் பெற்றிருத்தல். அந்த அனுபவ காலத்தில் அவர் ஒரு ஸ்டீம் ஜெனரேஷன் பிளாண்ட் அல்லது 'பேட்டரி ஆப் பாய்லர்ஸ்' கொண்டதான பாய்லர் பிளாண்டை தமது பொறுப்பில் ஏற்றிருக்க வேண்டும். இரண்டில் எந்த ஒரு பிளாண்டின் மொத்த உற்பத்தி திறனும் மணி ஒன்றுக்கு 15,000 பவுண்டுக்குக் குறையாமல் நீராவி உற்பத்தி செய்யக் கூடியதாக இருக்க வேண்டும்.

3. **இருபது நல்வாழ்வு அலுவலர்கள் (ஹெல்த் ஆபீசர்கள்)** (ஷெ. வ. மற்றும் ஷெ. ப. 3; பி.வ.-6: மற்றும் ப. போ.-11)

**சம்பளம்** : மாதத்துக்கு ரூ. 700-40-1,100-இத்துடன் 'பிராக்டிஸ்' செய்யா திருப்பதற்கான மாதாந்தர அலவன்ஸ் ரூ.100

**வயது** : 35 வயதுக்குக் கீழ்.

குறைந்தபட்சப் பொதுக் கல்வி யோக்கியதாம்சத்துக்கு உயர்ந்ததான பொதுக் கல்வி யோக்கியதாம்சம் பெற்றிராத ஷெ.வ. மற்றும் ஷெ. ப. யைச் சேர்ந்த அபேட்சகர்களின் விஷயத்தில் 40 வயதுக்குக் கீழ்.

**கல்வித்தகுதி**: (1)B.Sc., பட்டம் அல்லது கல்கத்தா பல்கலைக் கழகத்தின் 'டிப்ளமா இன் பப்ளிக் ஹெல்த்' அல்லது (2) சென்னையிலுள்ள மருத்துவக் கல்லூரியில் ஒரு வருடத்துக்குக் குறையாத காலத்துக்கு 'சானிடரி சயன்ஸின்' விசேஷ பயிற்சி வகுப்புத் தொடர் ஒன்றில் பயின்றிருந்து, அந்த பயிற்சி வகுப்புத் தொடரின் இறுதியில் நடைபெற்றதான 'லைஸென்ஸியேட் இன் பப்ளிக் ஹெல்த்' பரிட்சை தேறியிருப்பதற்கான சர்ட்டிபிகேட் அல்லது (3) தேவைப்படும் எண்ணிக்கை வரையில் முழு தகுதி பெற்றுள்ள மனுதாரர்கள் கிடைக்காமல் போனல், 'M.B.B.S.' பட்டம் பெற்றுள்ளவர்கள் அல்லது 'டிப்ளமா இன் மெடிஸின் அண்ட் சர்ஜரி' பெற்றுள்ளவர்கள் அல்லது சென்னையிலுள்ள மருத்துவக் கல்லூரியில் 'போர்ட் ஆஃப் எக்ஸாமினர்ஸ்' வழங்கியுள்ள 'L. M. P.' டிப்ளமா பெற்றுள்ளவர்கள் ஆகியோரின் விண்ணப்பங்கள்-அபேட்சகர்களுக்கான தகவலில் அறிவிக்கப்பட்டுள்ள சில நிபந்தனைக்குட்பட்டு-தேர்வு செய்யப்படுவதற்காக பரிசீலிக்கப்படும்.

4. (1) **மூன்று இளநிலை விரிவுரையாளர்கள் (ஜூனியர் இன்ஸ்ட்ரக்டர்கள்) (மெகானிகல்)**-அரசினர் பல்துறைத் தொழிற் பயிற்சி கல்லூரிகளுக்காக . (ஷெ. வ. மற்றும் ஷெ. ப. 1; மற்றும் ப. போ. 2)

(2) **நான்கு முதுநிலை விரிவுரையாளர்கள் (சினியர் இன்ஸ்ட்ரக்டர்கள்) (எலக்ட்ரானிக்ஸ்,)** — அரசினர் பல்துறைத் தொழிற் பயிற்சிக் கல்லூரிகளுக்காக— மற்றும் ஒரு முதுநிலை விரிவுரையாளர் (காஸ்ட்யூம் டிஸைனிங் அண்ட் டிரெஸ் மேக்கிங்)-பெண்களுககான பல்துறை தொழிற் பயிற்சி கல்லூரியில் (பி.வ. 2 மற்றும் ப. போ. 3)

(3) **ஒரு இணை விரிவுரையாளர் (அசோசியேட் லெக்சரர்)**-காஸ்ட்யூம் டிஸைனிங் அண்ட் டிரெஸ் மேக்கிங்கில்-பெண்களுக்கான பல்துறைத் தொழிற் பயிற்சிக் கல்லூரிக்காக (ஷெ. வ. மற்றும் ஷெ. ப. 1.)

குறிப்பு: பெண்களுக்கான அரசாங்க பல்துறைத் தொழிற் பயிற்சிக் கல்லூரியில் உள்ள காலி ஸ்தானங்களுக்குப் பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கத்

தகுதியுள்ளவர்களாவர். மற்ற காலிஸ்தானங்களுக்கு ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இருபாலருமே விண்ணப்பிக்கத் தகுதியுள்ளவர்களாவர்.

**சம்பளம்** : இளநிலை விரிவுரையாளர்—மாதத்துக்கு ரூ. 325-15-550.
முதுநிலை விரிவுரையாளர்-மாதத்துக்கு ரூ. 400-15-475-20-575-25-650.
இணை விரிவுரையாளர்-மாதத்துக்கு ரூ. 475-25-650-30-800.

**வயது** : (1) இளநிலை விரிவுரையாளர் (மெக்கானிகல்)-27 வயதுக்குக் கீழ்.
(2) முதுநிலை விரிவுரையாளர் (எலக்ட்ரானிக்ஸ்)-30 வயதுக்குக் கீழ்.
(3) முதுநிலை விரிவுரையாளர் மற்றும் காஸ்ட்யூம் டிஸைனிங் அண்ட் டிரெஸ் மேக்கிங்கில் இணை விரிவுரையாளர்-பெண்களுக்கான பல்துறைத் தொழிற் பயிற்சிக் கல்லூரிகளில் 36 வயதுக்குக் கீழ்.

**கல்வித் தகுதி** : (1) இளநிலை விரிவுரையாளர் (மெகானிகல்)—மெகானிகல் இஞ்ஜினீரிங்கில் ஒரு பேச்சலர்ஸ் டிகிரி.

(2) முதுநிலை விரிவுரையாளர் (எலக்ட்ரானிக்ஸ்)—எலக்ட்ரானிக்ஸ் இஞ்ஜினீரிங்கில் ஒரு முதல் வகுப்பு பேச்சலர்ஸ் டிகிரி.

(3) முதுநிலை விரிவுரையாளர் (காஸ்ட்யூம் டிஸைனிங் அண்ட் டிரெஸ் மேக்கிங்)-

(1) டெக்ஸ்டைல் டெக்னாலஜியில் ஒரு முதல் வகுப்பு அல்லது இரண்டாவது வகுப்பு பேச்சலர்ஸ் டிகிரி அல்லது க்ளோத்திங் மற்றும் டெக்ஸ்டைல் துறையுடன் கூடிய ஹோம் சயன்ஸில் ஒரு மாஸ்டர்ஸ் டிகிரி. அல்லது (2) (i) ஆர்ட்ஸ், சயன்ஸ் அல்லது காமர்ஸில் ஒரு டிகிரி பெற்றிருந்து, சென்னையில் உள்ள அரசினர் தொழில் நுட்பத் தேர்வுகள் ஆணையாளரால் அல்லது லண்டனைச் சேர்ந்த 'டெய்லர் அண்ட் கட்டர் அகாடமியால்' அல்லது பூனாவிலுள்ள 'படாஸ்கர் இன்ஸ்டிடியூட்டால்' அல்லது பம்பாயிலுள்ள 'கமர்ஷியல் டெய்லரிங் காலேஜால்' வழங்கப்பட்டதான 'கட்டிங் அண்ட் டெய்லரிங்' (ஹையர் கிரேடு) சர்ட்டிபிகேட் ஒன்றோ அல்லது டிப்ளமாவோ பெற்றிருக்க வேண்டும். மற்றும்,

(ii) தையல் தொழில் நடத்தும் ஸ்தாபனம் ஒன்றில் அல்லது உடைகள் உருவாக்கல் (க்ளோத்திங்), தையல் தைத்தல் (டெய்லரிங்) மற்றும் பூத்தையல் தைத்தல் (எம்பிராய்டரி) ஆகிய பாடத்துறைகளைப் போதிப்பதில் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் செய்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும். அல்லது

(3) (i) 'க்ளோத்திங் மற்றும் டெக்ஸ்டைல்ஸ்' பாடத்துறைகளுடன் 'ஹோம் சயன்ஸில்' ஒரு முதல் வகுப்பு அல்லது இரண்டாவது வகுப்பு பேச்சலர்ஸ் டிகிரி பெற்றிருக்க வேண்டும். மற்றும்

(ii) பெண்களுக்கான பாலிடெக்னிக் ஒன்றில் இன்ஸ்ட்ரக்டர் அந்தஸ்துக்குக் குறையாத பதவியில் இருந்து அல்லது மற்ற ஸ்தாபனத்தில் அதற்கு சமமான கிரேடு பதவியில் இருந்து, போதனை மற்றும் அல்லது தயாரிப்பில் (teaching and/or Production) இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(4) **இணை விரிவுரையாளர்**—'காஸ்ட்யூம் டிஸைனிங் அண்ட் டிரெஸ் மேக்கிங்கில் (i) 'டெக்ஸ்டைல் டெக்னாலஜியில் ஒரு முதல் வகுப்பு அல்லது இரண்டாவது வகுப்பு 'பேச்சலர்ஸ் டிகிரி' அல்லது 'க்ளோத்திங் மற்றும் டெக்ஸ்டைல்ஸ்' பாடத்துறைகளுடன் 'ஹோம் சயன்ஸில்' ஒரு 'மாஸ்டர்ஸ் டிகிரி' பெற்றிருக்க வேண்டும். அல்லது

(2) (i) ஆர்ட்ஸ் சயன்ஸ் அல்லது காமர்ஸில் ஒரு டிகிரி பெற்றிருந்து சென்னையிலுள்ள அரசினர் தொழில் நுட்பத் தேர்வுகள் ஆணையாளரால் அல்லது லண்டனைச் சேர்ந்த 'டெய்லர் அண்ட் கட்டர் அகாடமியால்' அல்லது பூனாவிலுள்ள 'படாஸ்கர் இன்ஸ்டிடியூட்டால்' அல்லது பம்பாயிலுள்ள 'கமர்ஷியல் டெய்லரிங் காலேஜால்' வழங்கப்பட்டதான 'கட்டிங் அண்ட் டெய்லரிங்கில்' ஒரு ஹையர் கிரேடு சர்ட்டிபிகேட் அல்லது டிப்ளமோ பெற்றிருக்க வேண்டும். மற்றும்

(ii) டிசைன் செய்தல், தயாரித்தல் அல்லது போதனை செய்வதில் (design production or teaching) பிரபல ஸ்தாபனம் ஒன்றில் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**முடிவுத் தேதி : 1—9—76.**

<u>வயது வரம்பு:</u> 1-7-1976 அன்று உள்ளபடி.

சுருக்கச் சொற்கள்: ஷெ. வ. —ஷெட்யூல் வகுப்பு; ஷெ. ப.—ஷெட்யூல் பழங்குடி; பி.வ.—பின்தங்கிய வகுப்பு; ப. போ.—பகிரங்கப் போட்டி.

குறிப்பு: பகிரங்கப் போட்டிக்குரிய காலிஸ்தானங்களுக்கு ஷெ. வ., ஷெ. ப., மற்றும் பி.வ. க்களைச் சேர்ந்த அபேட்சகர்களுங்கூட, தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவதற்கு அருகதையுடையவர்களாவர்.

விவரங்களுக்கும் விண்ணப் பாரத்துக்கும் சுயவிலாசம் எழுதிய உறையின் தலைப்பில் உத்தியோகத்தின் பெயரைக் குறிப்பிட்டுப் போதிய அஞ்சல் தலை (70 பைசா அஞ்சல் தலை) ஒட்டிய உறை (23 செ.மீ. நீளமுள்ள) ஒன்றை இணைத்துச் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழு, அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை — 600002 அவர்களுக்கு எழுதிக் கேட்கவும்.

ஷெ. வ., ஷெ. ப. மற்றும் பி.வ. இராணுவத்திலிருந்து விடுவிக்கப்பட்ட சிப்பந்திகள் முதலியோருக்கு வயது மற்றும் அல்லது கல்வி யோக்கியதாம்சங்களின் விஷயத்தில் அனுமதிக்கப்படும் சலுகைகள், குறித்த விவரம் அபேட்சகர்களுக்கான குறிப்புரைகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

**செயலாளர்,**

**தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வு ஆணைக்குழு.**

DIPR/35596/76

# வறட்சிப் பகுதியில் வாடிடும் மக்களின் துயர் துடைப்பதற்காக....

தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் துயர் துடைப்புப் பணிகளுக்காக இதுவரையில் நாலரைக் கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேருக்கு இந்தத் துயர் துடைப்புப் பணிகளின் மூலம் வேலைவாய்ப்புக் கிட்டியுள்ளது.

மாநிலம் முழுவதும் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள இடங்களில் சுமார் நாலாயிரம் கிணறுகளை ஆழப்படுத்த ஒரு கோடி ரூபாய்க்கான திட்டமொன்றிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மிகவும் பாதிப்புக்கு உட்பட்டு உள்ள திருநெல்வேலி மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினையைக் கவனிக்க 600 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டத் திட்டமிடப்பட்டது. ஆனால், நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்கும் மேலாக 686 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. ஜூன் மாதத்திலிருந்து செப்டம்பருக்குள் மாநிலம் முழுவதும் 3,900 ஆழ்துளைக் கிணறுகள் தோண்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதில், நெல்லை மாவட்டத்தில் மட்டும் 900 கிணறுகள் தோண்டப்படும்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் நகரப் பகுதிகளில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்களுக்காகத் தமிழ்நாடு அரசு 39 நகராட்சிகளுக்கு 54 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கி உள்ளது. இதில் நெல்லை மாவட்டத்திற்கு மட்டும் ரூபாய் 20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்டப் பகுதிகளில் ஏப்ரல் மாதத்திலிருந்து செப்டம்பர் மாதம் வரை நிறைவேற்றப்படும் குடிநீர் வழங்கு திட்டங்களுக்காக ரூபாய் 8 கோடி செலவிடப்படும். கிராம, நகர குடிநீர் வழங்குத் திட்டங்கள், குடிநீர்க் கிணறுகள் ஆழப்படுத்துவது ஆகியவற்றுக்காக இது செலவிடப்படும். செப்டம்பருக்குப் பிறகு நிலைமை மேலும் பரிசீலிக்கப்படும். பிரச்சினையின் தன்மையை மத்திய அரசு நன்கு உணர்ந்துள்ளது.

வறட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும் பணிகள், நிரந்தரப் பலன் தரத்தக்கதாக இருக்க வேண்டும் என்பது அரசின் கருத்து.

சாலை அமைப்பு, பராமரிப்புக்கான 900 பணிகள் ரூபாய் ஒரு கோடியே 64 இலட்சம் செலவிலும், 1100 சிறுபாசன மேம்பாட்டு வேலைகள் ரூபாய் 3 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவிலும், மண்வளப் பாதுகாப்புப் பணிகள் 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் துயர் துடைக்க அரசு திட்டங்கள் முனைப்புடன் அமல் நடத்தப்படும்.

**(19-7-'76 அன்று ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களிடையே தெரிவித்த கருத்துக்கள்.**


## சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151.
## சேலம்-1.

**தபால் பை எண். 171** — **தொலைபேசி எண் : 2402**

**கிளைகள் :** நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணாபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாய்க்கன்பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

**சொந்த நிதி ரூ. 327 லட்சம்.** — **நடைமுறை மூலதனம் 1711 லட்சம்.**

### வட்டிவிகித அட்டவணை

| | | |
|---|---|---|
| **கால் டெபாசிட்டுகள் :** | ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்) | 3¼% |
| | ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) | 3½% |
| **சிசன் டெபாசிட்டுகள் :** | ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும் | |
| | 15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் | 3% |
| | 46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் | 3½% |

**பிக்செட் டெபாசிட்டுகள் :** ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு :

1. 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் 6%
2. 6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள் 6½%
3. 9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் 7½%
4. 12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் 8½%
5. 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் 9½%
6. 61 மாதத்திற்கும் அதற்குமேலும் 10½%

**சேமிப்புக் கணக்கு 6%**

ரூ. 5000/-க்கு மேற்சொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.

# தமிழ்நாடு நகர நிலஉச்சவரம்பு சட்டம்



இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் தமிழ்நாடு நகர நில உச்சவரம்பு மற்றும் ஒழுங்கு முறைச் சட்டம், 1976-ஐ, 3-8-1976 அன்று பிறப்பித்தார். இச் சட்டம் மத்திய நகர நில உச்ச வரம்புச் சட்டத்தின் மாதிரியிலேயே அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் உடனடியாக அமலுக்கு வந்துள்ளது.

தமிழ்நாட்டின் கீழ்க்கண்ட பகுதிகளில் இந்தச் சட்டம் அமலுக்கு வந்திருக்கிறது:

(1) சென்னை நகரப் பகுதி—8 கிலோ மீட்டர் (சுமார் ஐந்து மைல்) சுற்றுப்பகுதி உள்பட. (இது 'ஏ' வகையைச் சேர்ந்தது).

(2) மதுரை நகரப்பகுதி—5 கிலோ மீட்டர் (சுமார் 3-1/8 மைல்) சுற்றுப்பகுதி உள்பட (இது 'சி' வகையைச் சேர்ந்தது).

(3) கோயமுத்தூர் நகரப் பகுதி—5 கிலோ மீட்டர் (சுமார் 3-1/8 மைல்) சுற்றுப் பகுதி உள்பட (இது 'சி' வகையைச் சேர்ந்தது).

(4) சேலம் நகரப் பகுதி—5 கிலோ மீட்டர் (சுமார் 3-1/8 மைல்) சுற்றுப் பகுதி உள்பட (இது 'சி' வகையைச் சேர்ந்தது).

(5) திருச்சிராப்பள்ளி நகரப் பகுதி—5 கிலோ மீட்டர் (சுமார் 3-1/8 மைல்) சுற்றுப் பகுதி உள்பட. (இது 'சி' வகையைச் சேர்ந்தது).

(6) திருநெல்வேலி நகரப்பகுதி—ஒரு கிலோ மீட்டர் (சுமார் 5/8 மைல்) சுற்றுப் பகுதி உள்பட (இது 'டி' வகையைச் சேர்ந்தது).

நகரங்களில் உள்ள நிலம் ஒரு சிலரின் கையில் குவியாது தடுக்கவும், அதில் ஊேஷ்ய பேரங்களுக்கும், இலாப வியாபாரங்களுக்கும் இடமளிக்காமல் செய்யவும், பொது நலன்களுக்கு உகந்த முறையில் நேர்மையாக நிலம் விநியோகம் ஆகுமாறு செய்யவும் மேற்கண்ட 6 நகர்களிலும் உள்ள காலி இடங்களுக்கு இந்தச் சட்டம் உச்ச வரம்பு நிர்ணயம் செய்கிறது. உச்சவரம்புக்கு மேல் உள்ள நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வகை செய்கிறது. இப்படிப் பட்ட நிலத்தில் கட்டிடங்கள் கட்டுவதையும் ஒழுங்குபடுத்துகிறது.

நகர வகைகளை அனுசரித்து இந்தச் சட்டத்தில் வெவ்வேறு விதமான உச்சவரம்புகள் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நகரப் பகுதியிலும் ஒருவர் அதிகப்படியாக வைத்திருக்கக் கூடிய காலி நிலங்களுக்குரிய உச்சவரம்பு கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

''ஏ'' வகை— சென்னை-500 சதுர மீட்டர். (சுமார் 5,280 சதுர அடி)

''சி'' வகை— மதுரை, சேலம், கோயமுத்தூர், திருச்சி—1,500 சதுர மீட்டர். (சுமார் 15,840 ச. அடி.

''டி'' வகை— திருநெல்வேலி—2,000 சதுர மீட்டர். (சுமார் 21,120 ச. அடி.)

உச்ச வரம்புக்கு மேல் காலி நிலம் வைத்திருக்கும் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட படிவத்தில் ஓர் அறிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரி முன்னிலையில் சமர்ப்பிக்க வேண்டும்.

10 ஆண்டுகளாக நகரப் பகுதியில் இருந்து முக்கியமாக விவசாயத்துக்காகப் பயன்படுத்தும் நிலத்தைக் கூட, சம்பந்தப்பட்ட அதிகாரியின் முன் அனுமதியில்லாமல், விற்பனை செய்வதையும், அடமானம் வைப்பதையும், வெகுமதியாக அளிப்பதையும், அல்லது 10 ஆண்டுகளுக்கு மேல் குத்தகைக்கு விடுவதையும் இந்தச் சட்டம் தடை செய்கிறது.

குடியிருப்புக்காகக் கட்டப்படும் கட்டிடப் பகுதியின் பரப்பு சென்னையில் 300 சதுர மீட்டர் (சுமார் 3,170 சதுர அடி) அளவுக்கு மேல் போகக் கூடாது என்றும், மற்ற நகர்களில் அது 500 சதுர மீட்டர் (சுமார் 5,280 சதுர அடி) பரப்புக்கு மேல் போகக் கூடாது என்றும் இந்தச் சட்டம் தடை செய்கிறது.

மத்திய சட்டத்திலிருந்து தமிழ்நாடு நகர நில உச்சவரம்புச் சட்டம் இரண்டு அம்சங்களில் மாறுபடுகிறது. முதலாவதாக, ஒரு குறிப்பிட்ட நகரப் பகுதிக்குள் ஒரு கிராமத்தின் பகுதியோ அல்லது ஊராட்சி நகரத்தின் பகுதியோ வந்தால், அது முழுவதுமே முற்கூறப்பட்ட நகரப் பகுதிக்குள் வந்ததாகக் கருதப்படும்.

இரண்டாவதாக நகரப்பகுதிக்குள், சம்பந்தப்பட்ட அதிகாரியின் முன் அனுமதி இல்லாமல் விவசாய நிலமாற்றம் நடைபெறுவது தடை செய்யப்பட்டிருக்கிறது.



வளமான வாழ்விற்கு....
நாடு நலம் பெற
வீடு வளம் பெற
அரிய பெரிய திட்டங்கள்
அரசு நிதம் தீட்டுகிறது.
திட்டங்களின் இனிய பலன்
எட்டிடவே எல்லோர்க்கும்
அளவான குடும்பம்
அமைவதுதான் சிறப்பாகும்!
பிறந்ததைக் காப்போம்!
பிறப்பதைத் தவிர்ப்போம்!!
குடும்ப நலத்துறை
தமிழ்நாடு அரசு.

# தமிழ்நாடு அரசு நிதித்துறை, சென்னை.

# முக்கிய அறிவிப்பு

தமிழ்நாடு அரசின் நிதித்துறையின் அறிவிப்பு எண் 21 (எல்) டபிள்யு. எம். 1/64 நாள் 4-8-1964-ன் படி வெளியிடப்பட்ட '$4\frac{3}{4}$ சத சென்னை கடன் (Madras loan), 1976-ல் நிலுவையிலுள்ள மீதியை 24-8-1976 அன்று, சேர வேண்டிய எல்லா வட்டியுடன் 23-8-1576க்குள்ள வட்டியையும் சேர்த்து திருப்பிக் கொடுக்கப்படும். இக்கடனுக்கு 24-8-1976-க்குப் பிறகு வட்டி கிடையாது. ஆனல் கீழே பாரா 2-ல் கண்ட விதிவிலக்குக்கு வட்டி உண்டு.

2. இந்த ஆண்டில் வெளியிடப்பட விருக்கும் புதிய பகிரங்கக் கடன் பற்றிய விதிமுறைகளை தமிழ்நாடு அரசு, விரைவில் அறிவிக்கும். $4\frac{3}{4}$ சத சென்னை கடன், 1976-ஐ வழங்கியுள்ளவர்கள், அதைப் புதிய கடனுக்கு மாற்றிக் கொள்ள விருப்பம் தெரிவிக்கலாம். இவ்வாறு விருப்பம் தெரிவித்து மாற்றிக் கொள்பவர்கள், அவர்களுடைய உடைமைக்குப் புதிய கடன் வெளியிடப்படும் நாளுக்கு முந்திய நாள் வரைக்கும் வட்டி பெறலாம். அவ்வாறு வழங்கப்படும் வட்டி, முடிவடைந்த கடனுக்கு வழங்கப்பட்ட வட்டி விகிதத்திற்குக் குறையாமல் இருக்கும். எனவே இவ்வாறு மாற்றிக் கொள்ள விரும்பும் உடைமையாளர்கள், தாங்கள் வழங்கிய கடன் தொகையைத் திருப்பிப் பெறுவதற்காகத் தங்களிடம் உள்ள அரசுக் கடன் ஆவணங்களை இந்த நிலையில் கொடுக்கக் கூடாது.

3. $4\frac{3}{4}$ சத சென்னை கடன் 1976 உடைமையைக் கொடுத்து பணம் பெற விரும்புகின்றவர்கள், உரிய தேதியில் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கு வசதியாக, தங்களிடமுள்ள அரசுக் கடன் ஆவணங்களை, அரசுக் கடன் அலுவலகம், கருவூலம், துணைக்—கருவூலம், அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் கிளை அல்லது வட்டி பெறுவதற்காக ஒப்படைக்கப்பட்ட பதிவு செய்யப்பட்டுள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் துணை வங்கிகளில் 18-8-1976 அன்று அல்லது அதன் பிறகு ஒப்படைக்கலாம். பணத்தைத் திருப்பிப்பெற அரசுக்கடன் ஆவணங்களின் பின்னல் பின் கண்டவாறு எழுத வேண்டும்.

(அ) கடன் உறுதிச் சீட்டுகளைப் (பிராமிசரி நோட்டுகளை) பொறுத்தவரையில்,

''இந்த உறுதிச் சீட்டின் முதலைப் பெற்றுக்கொண்டேன்''

(ஆ) ஸ்டாக் சர்ட்டிபிகேட்டைப் பொறுத்த வரையில்,

''இந்த ஸ்டாக் சர்ட்டிபிகேட்டின் முதலைப் பெற்றுக் கொண்டேன்''

கருவூலப்பணிகள் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் ஒரு கிளையால் அல்லது அதனுடைய துணை வங்கியில் மேற்கொள்ளப்படும் இடங்களில், அரசுக்கடன் ஆவணங்கள் ஸ்டாக் சர்ட்டிபிகேட் வடிவில் இருப்பின், அவைகளை சம்பந்தப்பட்ட வங்கியின் கிளையிலேயே கொடுக்க வேண்டுமே அல்லாது கருவூலத்திலோ துணைக் கருவூலத்திலோ அல்ல என்பதைக் குறிப்பாக அறிந்து கொள்ள வேண்டும்.

பணத்தைத் திருப்பிப் பெறுவதற்காக அரசுக்கடன் ஆவணங்களை என்பேஸ் செய்துள்ள இடத்தில் அல்லாமல் வேறு இடத்தில் பணத்தைப் பெற விரும்பினல், ஆவணங்களை சம்பந்தப்பட்ட அரசுக் கடன் அலுவலகத்திற்கு முறையாக பதிவு செய்தும் இன்ஷ்யூர் அஞ்சலிலும் அனுப்ப வேண்டும்.

தமிழ்நாட்டிலுள்ள கருவூலம் / துணைக்கருவூலம் அல்லது கருவூலப் பணியாற்றிடும் ஸ்டேட் பாங் ஆப் இந்தியாவின் கிளை அல்லது ஸ்டேட் பாங் ஆப் இந்தியாவின் துணை வங்கிகளில் மாற்றிக் கொள்ளக் கூடிய பண வரைவாக (டிராப்ட்) அரசுக்கடன் அலுவலகம் கடனைத் திருப்பி வழங்கும்.

எஸ். குகன்,
அரசுச் செயலாளர்.

DIPR/34736/76

## வட ஆர்க்காடு, தருமபுரி மாவட்டங்களில் வறட்சி நிவாரணப் பணிகள்!

வட ஆர்க்காடு, தருமபுரி ஆகிய இரு மாவட்டங்களுக்கும் வறட்சி நிவாரணப் பணிகளுக்கெனத் தமிழ்நாடு அரசு ரூ. 8.90 இலட்சத்தினைச் செலவிட அனுமதித்துள்ளது. இதில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் குடியாத்தம் மற்றும் கே. வி. குப்பம் ஊராட்சி ஒன்றியங்களில் சாலை அமைப்புப் பணிகளுக்கென ரூ. 3.90 இலட்சமும், தருமபுரி மாவட்டத்தில் 20 குளங்கள் தோண்டும் பணிகளுக்கென ரூ. 5.00 இலட்சமும் செலவிடப்படும். மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வாழும் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்கும் வகையில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# கண் கவர் உயர் வட்டி காணீர்!

நான்கு
ஆண்டுகளும்
அதற்கு மேலும்

**13%**

| ஒரு ஆண்டிலிருந்து இரண்டு ஆண்டுக்குள் | இரண்டு ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுக்குள் | மூன்று ஆண்டிலிருந்து நான்கு ஆண்டுக்குள் |
|---|---|---|
| 11½% | 12% | 12½% |

எங்களிடம் போடப்படும் வைப்புத் தொகைக்கு (FIXED DEPOSITS) கவர்ச்சி மிக்க உயர் வட்டியும், பாதுகாப்பும் அளிக்கப்படுகிறது. காரணம், எங்களது நிறுவனம் தமிழக அரசுக்குச் சொந்தமானது.

## தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்,

(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
5 கிரீம்ஸ் ரோடு, ஆயிரம் விளக்கு,
சென்னை-600 006

சுகவனேஸ்வர், ஐ.ஏ.எஸ்.
நிர்வாக இயக்குநர்

சேமிப்பு பாதுகாப்பாக இருக்க எம்மிடம் சேமியுங்கள்!


## கோத்தடிமையிலிருந்து விடுதலை பெற்ற தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு !

கொத்தடிமைத் தொழிலினின்று விடுதலை பெற்ற தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளித்திடும் பணியில், தமிழ்நாடு அரசு அதிக அக்கறையும், ஆர்வமும் காட்டி வருகின்றது. விடுதலை அடைந்த கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு விவசாய நிலங்கள் வழங்கும் பணியினை அரசு மேற்கொண்டு வருகின்றது. தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலங்களில் உற்பத்திப் பணிகளை மேற்கொள்வதற்கென இவர்களுக்கு உதவித்தொகை, கடன் போன்ற பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் 1-8-1976-ஆம் நாள் வரையில் கொத்தடிமைத் தொழில் முறையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 2,400 ஆகும். இவர்களில் ஏற்கனவே 1,000 தொழிலாளர்களுக்கு நில ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டன. மற்றவர்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்வதில் அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு, நாட்டுடைமையாக்கப்பெற்ற வங்கிகளுடன் கூட்டாகச் சேர்ந்து நிதி உதவி வழங்கும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. மறுவாழ்வுப் பணிகளுக்கென ரூ. 10 இலட்சத்திற்கான திட்டம் ஒன்றினைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 7,250 வழங்கப்படும். இதில் மூன்றில் ஒரு பங்கினை அரசு உதவித்தொகையாகவும், மீதமுள்ளதை நாட்டுடைமையாக்கப்பெற்ற வங்கிகள் கடனாகவும் வழங்கும்.

இந்தப் பணிகள் அனைத்தும் மாவட்ட ஆட்சியாளர் பொறுப்பில் நடைபெறும். இதற்கென வட்டாட்சியர் தகுதியிலுள்ள தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கொத்தடிமைத் தொழில் முறையினின்று விடுதலை பெற்ற தொழிலாளர்கள் இந்த உதவிகளைப் பெறுவதற்கும், அவர்கள் உழவு மாடுகள் மற்றும் வேளாண்மைச் சாதனங்களைப் பெறுவதற்கும் இந்தத் தனி அலுவலர்கள் துணை புரிவார்கள்.

# கோ-ஆப்டெக்ஸ் மக்கள் விரும்பும் வகைகள்! நியாயமான விலைகள்!



கோ-ஆப்டெக்ஸ் சேலைகள்,

**அழகு மிளிரும் ஆரணங்குகள்!**

ஆரணி, கும்பகோணம், காஞ்சிபுரம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம், மதுரை பருத்தி கைத்தறிச் சேலைகள், அச்சிட்ட சுங்கடி சேலைகள் மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்.



கோ-ஆப்டெக்ஸ்

**படுக்கை விரிப்புகள், மலர்ப் படுக்கைகள்!**

நேர்த்தியான நெசவு கைத்தறிப் படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணை உறைகள், உங்களுக்கு சொகுசு அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

**லுங்கிகள், வசதியானவை நீடித்துழைப்பவை!**

உங்கள் விருப்பத்துக்குகந்த சாதா, கோடிட்ட அல்லது கட்டமிட்ட பல வகைகளில்.

கோ-ஆப்டெக்ஸ்

**துவாலைகள், தூய்மையான துவாலைகள்!**

சாதா, டர்கிஷ் வகைகள், மென்மையான மற்றும் ஈரத்தை உறிஞ்சும் வகைகள். உங்களது சுகாதாரத்துக்கு இன்றியமையாதவை!



மற்றும் கைத்தறிப் பருத்தி வகைகள், வேட்டிகள், உடுப்புகளுக்கான துணிகள், அலங்காரத் துணிவகைகள்—குடும்பத்தினர் அனைவருக்குமே உகந்த முழுதும் புதிய வகைகள்.

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறியே வண்ணத்துப் பூச்சி

பதிவு எண். M. 8676




ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

# குடியரசுத்தலைவர் ஆட்சியில் ஆறு மாதச்சாதனைகள்




தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர்

திரு. **பி.கே.தவே**, ஐ. ஏ. எஸ்.

குடியரசுத் தலைவர் ஆட்சியில்

# ஆறுமாதச் சாதனைகள்!

தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர்

**திரு. பி. கே. தவே, ஐ. ஏ. எஸ்.**

வெளியீடு:

இயக்குநர்
செய்தி-மக்கள் தொடர்புத் துறை
தமிழ்நாடு அரசு

# பதிப்புரை

கடந்த பிப்ரவரித் திங்கள் தொடங்கி ஜூலைத் திங்கள் முடிய ஆறுமாதங்களில் தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியில் ஏற்பட்டுள்ள சாதனைகளை விளக்கி, சென்னை வானொலியில் 1976 ஆகஸ்ட் முதல் நாள் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. பி. கே. தவே, ஐ.ஏ.எஸ்., அவர்கள் ஆற்றிய உரையை '**குடியரசுத் தலைவர் ஆட்சியில் ஆறுமாதச் சாதனைகள்**' என்னும் தலைப்பில் வெளியிடுகின்றோம். இந்நூல் தமிழரசு 16-8-1976 இதழுடன் இலவச இணைப்பாக வழங்கப் பெறுகிறது.

**இயக்குநர்**
**செய்தி-மக்கள் தொடர்புத் துறை**
**தமிழ்நாடு அரசு**

சென்னை—600 009
16—8—1976

கடந்த ஆறு மாத காலமாகத் தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடந்து வருகின்றது. இந்த ஆட்சியின் சாதனைகளை ஆறுமாத கால அளவில் முழுமையாகக் கணக்கிட முடியாது; எனினும் நம் சாதனைகள் எவை? நாம் எந்தெந்த வகைகளில் முன்னேறி வருகிறோம்? எந்த நோக்கங்களுக்காகப் பணியாற்றிக்கொண் டிருக்கிறோம் என்பதையெல்லாம் நாம் ஓரளவுக்கு ஆராய்ந்து பார்க்கலாம்.

நிர்வாகத் தரத்தில் தக்க மாறுதலைக் காண்பதே நமது முதன்மைப் பணியாகவும் தலையாய பணியாகவும் இருந்தது. இக்குறுகிய கால அளவில் இதனை முழுவதும் சாதிக்க இயலாதென்றாலும், இப் பணி தொடங்கிவிட்டது; இதற்கான பலன்கள் நம் பார்வைக்குப் புலப்படத் தொடங்கிவிட்டன. விரும்பத் தகாமல் இருந்த தொடர்புகளைத் திறம் பட விலக்கவும், நிர்வாகத்தின் செயல் திறனை முன்னைய நிலைமைக்குக் கொண்டுவரவும் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியிருந்தது. அலுவலர்களை ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கும், தலைமைச் செயலகத்திலிருந்து திட்டப்பணிகள் நடக்கும் இடங்களுக்குமாக மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. எடுத்துக்காட்டாகக் காவல் துறையில் மட்டுமே, 4,000 காவலர்கள், 600 தலைமைக் காவலர்கள், 390 சப் இன்ஸ்பெக்டர்கள், 90 இன்ஸ்பெக்டர்கள், 90 டெபுடி சூப்பிரண்டுகள் 40 சூப்பிரண்டுகள் ஆகியோர் மாற்றப்பட்டனர். வருவாய்த் துறை, மது விலக்கு ஆயத்துறை, வணிக வரிகள் துறை போன்ற நிர்வாகம்-மற்றும் சீரமைப்பு அலுவல்களைச் செயற்படுத்தும் எல்லாத் துறைகளிலுமே இதுபோன்ற மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன.

தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலாக்கப்பட்டதுமே சர்க்காரியா விசாரணைக் குழுவின் நியமனம் அறிவிக்கப்பட்டது. இலஞ்ச ஊழல்,

அதிகாரத்தைத் தவருகப் பயன்படுத்தல், நடைமுறைப் பணிகளில் தாமதம் முதலியவை குறித்து ஏராளமான புகார்கள் குவியத் தொடங்கின. எனவே, சர்க்காரியா விசாரணைக் குழுவிற்கு அளிக்கப்பட வேண்டிய சாட்சியங்களைத் தொகுப்பதோடு அதன் தொடர்பாக ஒழுக்கக் கண்காணிப்பு-இலஞ்ச ஊழல் ஒழிப்பு அமைப்பையும் வலிவூட்டி உயிரோட்டமுள்ளதாக உருவாக்க வேண்டியதாயிற்று. சென்ற ஆண்டு முழுவதும் 27 பிடி வழக்குகளே ( Trap Cases ) பதிவு செய்யப்பட்டிருந்தன. ஆனால் கடந்த ஆறு மாத காலத்துக்குள் 51 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். 73 விரிவான விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன; 61 முறையான வழக்குகள் புலனாய்வில் உள்ளன. அரசிதழ் பதிவு பெற்ற 86 அலுவலர்கள் தொடர்பான வழக்குகள் இவற்றில் உள்ளன; அரசிதழ் பதிவுபெற்ற 61 அலுவலர்களும் அரசிதழ் பதிவு பெருத 161 அதிகாரிகளும் கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டுள்ளனர். உயர்நிலை அரசு அதிகாரிகள் தங்கள் அதிகாரத்தைத் தவருகப் பயன்படுத்தியதாகவும், இலஞ்சம் வாங்கியதாகவும் அமைந்த பல வழக்குகள் மாநில, மைய அரசைச் சேர்ந்த பல்வேறு அதிகார நிறுவனங்களினுல் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன.

## சட்டங்களைச் செயல்படுத்துவதில் முனைப்பு

சட்டங்களைக் கண்டிப்பாகச் செயல்படுத்தியதும், ஒழுக்கத்தைச் செம்மையான அளவில் நிலவச் செய்ததும், கடந்த ஆறு திங்களில் நாம் அடைந்த வெற்றிகளுக்குள் பெரும் வெற்றியாகும். காலந் தவருமலும், திறமையுடனும், விழிப்போடும் பணியாற்றி வருகின்ற அரசு ஊழியர்கள் மட்டும் அல்லாமல், பேருந்துகள், வாடகைமோட்டார் வண்டிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களும், மின்சக்தி உற்பத்தி நிலையங்கள், நீர் வழங்கு-கழிவு நீர் அகற்றுப் பணி நிலையங்கள், துப்புரவு—மின்விளக்கு வசதி, போலி ரேஷன் கார்டுகளைக் (பங்கீட்டு அட்டைகள்) கண்டுபிடித்தல் ஆகிய

பொதுநலத் துறைகளில் பணியாற்றுபவர்களிடத்தி லும் இத்தகைய மேம்பாடு காணப்படுகிறது. குற் றங்கள் கணிசமான அளவுக்குக் குறைந்துள்ளன. குடியரசுத் தலைவரின் ஆட்சி தொடங்கிய 15 நாட்களுக்குள் வணிக நிறுவனங்களிலும் தொழிற் சாலைகளிலும் வேலை நிறுத்தங்களும் கதவடைப்பு களும் அறவே நீங்கின. பல ஆண்டுகளாகக் கண்டி ராத வண்ணம், உழைப்பு நேர விரயம் என்பது இப்போது வெகுவாகக் குறைந்துவிட்டது.

குறிப்பாக, மதுவிலக்குப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். தொழிற்சாலைகளில் பயன்படுத்தப் படும் எரிசாராயம் பெருமளவில் தவறாகப் பயன் படுத்தப்பட்டு வந்தது; கள்ளச் சாராயம் காய்ச்சு வது பயங்கரமாகப் பெருகியிருந்தது. மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தச் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஸ்பிரிட் வைத்திருப்பதற்கான 66 உரிமங்கள் ரத்து செய்யப் பட்டன. ஏராளமான இடங்களில் திடீர்ச் சோத னைகள் நடந்தன. கள்ளச் சாராயம் கைப்பற்றப் பட்டு அழிக்கப்பட்டது. எனினும், ஜூலை மாதத் தில் சென்னை மாநகரில் அயனாவரத்தில் ஏற்பட்ட



கோரச் சாவுகள் இந்தக் கள்ளச் சாராய வெறி எவ்வளவு ஆழமாக வேரூன்றியுள்ளது என்பதையே காட்டுகின்றது. இக்கொடுமைக்கு உடனடிக் காரணகர்த்தாக்களான குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது; கடமையில் அசட்டை காட்டிய பணியாளர் தக்க நடவடிக்கைக்குள்ளானார்கள்; எனினும், மதுவிலக்குச் சட்டத்தின் அமல் நிலையை, எல்லா அம்சங்களிலும் ஆராய்ந்து தீர்வு காண உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரின் கீழ் ஆய்வுக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு மூன்று மாதங்களில், இக்குழு தனது இடைக்காலப் பரிந்துரைகளை அளிக்கும் என நாம் எதிர்பார்க்கிறோம். ஏழை எளியமக்களின் நல்வாழ்வுக்கு வகைசெய்யும் இச்சட்டத்தினை நல்ல முறையில் செயல்படுத்தி, மதுவிலக்கை நடைமுறைப் படுத்துவதில் கண்டிப்பும் கட்டுப்பாடும் மேற்கொள்ளப் பல்வேறு நடவடிக்கைகள் இதற்கிடையில் எடுக்கப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக கண்காணிப்பின் மூலமும், அந்தந்த இடங்களில் அவ்வப்போது செய்யப்படும் மேற்பார்வை நடவடிக்கையாலும், விற்பனைவரி, கேளிக்கை வரி வசூலில் நாம் மகத்தான வெற்றி பெற்றுள்ளோம். விற்பனை வரி ஏய்ப்புகள், கேளிக்கைவரி ஏய்ப்புகள் ஆயிரக்கணக்கில் கண்டுபிடிக்கப்பட்டு, இவ் வரிகள் அபராதத் தொகைகளுடனும், இணக்கக் கட்டணங்களுடனும் சேர்த்து வசூலிக்கப்பட்டன. இவ்வகையில் இந்த ஆண்டில் மட்டும் ஏறத்தாழ 50 கோடி ரூபாய் கிட்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். காவல்துறை, வருவாய்த்துறை, உள்ளாட்சித்துறை வனத்துறை, முதலிய அனைத்துத் துறைகளிலும் அந்தந்த இடங்களுக்குச் சென்று நடத்தப்பெறும் 'நேரடி மேற்பார்வைக்குச்' சிறப்பிடம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, தீவிரமாகச் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு அந்தந்த இடங்களில் மக்கள் தெரிவிக்கின்ற குறைகளை அங்கேயே கவனிக்குமாறு, முதுநிலை அதிகாரிகளுக்கு ஆணையிடப்பட்டுள்ளது. காவல் துறையினருக்கும்



பொதுமக்களுக்கும் உள்ள உறவுகளை மேம்படுத்துவதற்காகவும், பொதுமக்கள் தங்கள் உரிமைகளை அறிந்துகொள்ளச் செய்யவும், 22 அம்ச விதிமுறைத் தொகுப்பு ஒன்று வகுக்கப்பெற்றுப் பரவலாக ஆங்காங்கே விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. எல்லாக் காவல் நிலையங்களிலும் அனைவருக்கும் தெளிவாகத் தெரியக்கூடிய இடங்களில் அவ் விதிமுறைகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. வருவாய்த் துறைபோன்ற, பொது மக்கள் தொடர்புள்ள பிற துறைகளிலும் இப்படிப்பட்ட தகவல்களைப் பார்வைக்கு வைக்கும் முறை விரைவில் கொண்டு வரப்படும்.

அறக்கட்டளைகள், கூட்டுறவுச் சங்கங்கள், நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் நிர்வாகத்தில் காணப்பட்ட முறைகேடுகள் பற்றிப் புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது. கோவில்களின் அறங்காவலர் குழுக்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. 500-க்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், 93 நகராட்சிகள் ஆகியவற்றின் நிர்வாகிகள் நீக்கப்பட்டு, அவர்களுக்குப் பதிலாகத் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிறந்த ஒழுங்கு முறையும், கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டமையால், மின்சார வாரியத்தின் அனல் மின்சார நிலையங்களிலும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திலும் மின் உற்பத்தி கணிசமான அளவிற்குப் பெருகி உள்ளது. மாநிலம் முழுவதற்குமாகச் சென்ற ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பயன்படுத்தப்பட்ட மின்சக்தி அளவு 459 மில்லியன் யூனிட்டுகளாக இருக்க, 1976 ஏப்ரல் திங்களில் பயன்படுத்தப்பட்ட மின்சக்தி அளவு 743 மில்லியன் யூனிட்டுகளாகும். கோடைக் காலத்தின் பெரும்பகுதியில் மின்வெட்டு ஏதுமின்றி, இடையறுது மின்சக்தி வழங்கும் நிலைமையை நாம் பெற்றிருந்தோம். இருந்தாலும், தென்மேற்குப் பருவ மழை தாமதித்ததாலும், மின்சார உற்பத்திக்குப் பயன்படும் நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் மிகவும் குறைந்ததாலும், முன்னெச்சரிக்கையாகக் கடந்த சில நாட்களில் மின்வெட்டினை நாம் கொண்டுவர நேர்ந்துள்ளது.

சாலைப் போக்குவரத்திலும் குறிப்பிடத்தக்க சாதனையை நாம் அடைந்துள்ளோம். தவறு செய்யும் அரசுத்துறைப் பேருந்துகளின் ஓட்டுநர்களும் நடத்துநர்களும் கைது செய்யப்பட்டு, வழக்குத் தொடரப்படுவதிலிருந்து அவர்களுக்கு இதுகாறும்





அளிக்கப்பட்டு வந்த பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது; இதுதவிர, விதிகள் கண்டிப்பாகச் செயல்படுத்தப்பட்டதனால், பேருந்து விபத்துக்களின் எண்ணிக்கை சுமார் *33* சதவீத அளவு குறைந்துவிட்டது. நெரிசல் நேரங்களில், பேருந்துகளில் பயணிகளின் நெரிசலைக் குறைக்கும் வகையில், சென்னை மாநகரில் பள்ளிகள், கல்லூரிகள், அரசு அலுவலகங்கள் ஆகியவற்றின் பணி நேரங்கள் மாற்றியமைக்கப்பட்டன. இந்தப் புதியமுறை மிகச் செவ்வனே செயல்பட்டு வருகின்றது.

## விலைவாசிக் குறைப்பில் மகத்தான சாதனை

விலைவாசியைப் பொறுத்தவரையில் நாம் மகத்தானதொரு சாதனையை அடைந்துள்ளோம். வணிகர்கள், விலைப்பட்டியலைப் பொதுமக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும் என்ற ஆணை, முன்பெல்லாம் சரிவரச் செயல்படுத்தப்படவில்லை. இப்போது அதனைக் கண்டிப்புடன் செயல்படுத்தியதோடு, திறம்படக் கண்காணித்ததன் விளைவாகவும், உணவுத் தானியங்கள் ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதைக் கண்டிப்பாகத் தடை செய்ததினாலும், விலைவாசிகள் சுமார் *30* சதவிகிதம் முதல் *40* சதவிகிதம் வரை குறைந்து

விட்டன. 8.5 லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இது மகத்தான சாதனையாகும். எனவே, உணவு நிலையும் பெரிதும் மன நிறைவளிப்பதாக உள்ளது. சமீபகாலத்தில் தாவர எண்ணெய்கள், உளுந்து போன்ற சில பொருட்களின் இருப்புகளைப் பதுக்கி வைக்கும் போக்குத் தொடர்பாக தீவிரமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதனால், அவற்றின் விலைகளும், அவை கிடைக்கும் நிலைமையும் ஒரு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. கோதுமை, கோதுமைப் பண்டங்களின் விலைவாசிகள் கணிசமான அளவிற்குக் குறைக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தில், 5,000-க்கு மேற்பட்ட உணவகங்களில், ஒரு ரூபாய் விலையில் ஜனதா சாப்பாடு மிகவும் பிரபலமாகியுள்ள காரணத்தால் நாட்டின் ஏனைய பல பகுதிகளிலும் இம்முறை இப்போது கொண்டுவரப்பட்டுள்ளது.

## ஆண்டுத் திட்டச் செலவு உயர்ந்தது

இம்மாநிலம் குடியரசுத் தலைவரின் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டபோது 1976-77-க்கான ஆண்டுத் திட்டம் 170 கோடி ரூபாய் என்ற அளவிற்கு முடிவு செய்யப்பட்டிருந்தது. திட்டத்தில் சாராத செலவினங்களைக் குறைத்து, நிதிவாயில்களைப் பெருக்கி, ஆண்டுத் திட்டச் செலவினை 170 கோடி ரூபாயிலிருந்து 201 கோடி ரூபாயாக உயர்த்தச் சிறப்பாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. திட்டத்தில் முன்னுரிமை பெறவேண்டிய இனங்களும், மறு ஆய்வு செய்து மாற்றியமைக்கப்பட்டு, மின்சக்தி, பாசனம் ஆகிய இரண்டு முக்கியத்துறைகளுக்கு முன்னிலும் கூடுதலாக நிதி ஒதுக்கங்கள் செய்யப்பட்டன. அதாவது கடந்த ஆண்டு 39 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்க, மின்சக்திக்காக இந்த ஆண்டு 70 கோடி ரூபாயாகவும், அதேபோல் சென்ற ஆண்டு பாசனத்திற்காக 19.69 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்க, இந்த ஆண்டு 24 கோடி ரூபாயாகவும் வகை செய்யப்பட்டுள்ளது.

## நிகரான வேலைக்கு நிகரான ஊதியம்

இம் மாநிலத்தில் இதற்கு முன்பு இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம் பற்றி அதிக அக்கறை காட்டப்பெறவில்லை. இப்போது அதற்கு மிக முதன்மையான இடம் அளிக்கப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் நாம் மேற்கொண்டுள்ள இருபது அம்சங்களின் ஒவ்வொரு இனத்தையும் குறித்த சாதனைகளையும் விவரிக்க நான் இப்போது முயலவில்லை. குறிப்பிடத்தக்க சில இனங்கள் பற்றி மட்டும் இப்போது நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். அதிக மின் உற்பத்தி குறித்தும், அதன் விளைவாகத் தொழில் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி குறித்தும், தொழிலதிபர்-தொழிலாளர் உறவுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றியும் பொதுவாக எல்லா நிலைகளிலும், கட்டுப்பாடும் ஒழுங்கு முறையும் செயல் படுத்தப்பட்டிருப்பதையும் நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன். 'நிகரான வேலைக்கு நிகரான ஊதியம்' என்ற அடிப்படையில், வேளாண்மைத் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதியம் அறிவிக்கப்பட்டு, அது செயற்படுத்தப்பட்டு வருகிறது. அரிசனங்களுக்கும் நிலமற்ற தொழிலாளர்களுக்கும் வீட்டு மனைகள் ஒப்படை செய்யும் பணி விரைவுபடுத்தப்பட்டு உள்ளது. இது குறித்து அடுத்த சில மாதங்களில் உயரிய



குறிக்கோள் அளவை எய்திட நாம் முடிவு செய்துள்ளோம். புத்தக வங்கிகளை அமைத்ததன் வாயிலாகவும், நோட்டுப் புத்தகங்களையும், பாடப்புத்தகங்களையும் குறைந்த விலைகளில் வழங்க ஏற்பாடு செய்ததன் வழியாகவும் மாணவர்களுக்கு நாம் பேருதவி புரிந்து வருகிறோம். மாணவர் விடுதிகளில் வழங்கப்படும் உணவிற்கான கட்டணங்கள் 15 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை குறைக்கப்பட்டுள்ளன.

கிராமப் பகுதிகளில் கடன்பட்டுள்ளவர்களின் கடன் சுமையைப் போக்குவதற்குக் கடன் நிவாரணச் சட்டத்தின் மூலம் உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சிறு உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள், கிராமப்புறக் கைவினைஞர்கள் ஆகியோரின் ஆண்டு வருமானம் 2,400 ரூபாய்க்கு மேற்படாமலிருந்தால், அவர்கள் பட்டுள்ள கடன் சுமை முழுவதையும் துடைப்பதற்குப் புதிய சட்டம் இயற்றப்பட்டுள்ளது. லேவாதேவிக்காரரிடம் அல்லது அடகுக் கடைக்காரரிடம் எந்தப் பொருளேனும் அடகாக வைக்கப்பட்டிருந்தால், அப்பொருள் அடகு வைத்த கடனாளியிடம் உடனடியாகத் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமெனவும் இச்சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளது. தற்காலிகக் கடன் வசதியும், தேவைப் பொருளுக்கான கடன் வசதியும் குறைந்த வட்டி வீதத்தில் கிடைக்கச் செய்வதற்காகக் கூட்டுறவுச் சங்கங்களும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும் கிராமப் பகுதிகளில் முனைந்து செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் நகர்ப்புற நிலத்திற்கு உச்சவரம்பு விதிக்கும் சட்டமொன்று விரைவில் இயற்றப்படுமெனவும் எதிர்பார்க்கிறோம். வேளாண்மை நில உச்சவரம்புச் சட்டம், நில உரிமை முறை சீர்திருத்தச் சட்டம் ஆகியவை நாடளாவிய கொள்கைகளுக்கிணங்க மாற்றியமைக்கப்படுகின்றன.



தமிழ் நாட்டில் கொத்தடிமை முறை என்பது இல்லேவேயில்லேயென்று முன்னர் வலியுறுத்திக் கூறப்பட்ட போதிலும், இதுவரை அத்தகைய கொத்தடிமைகள் கிட்டத்தட்ட 2,400 பேர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் விடுவிக்கப் பெற்றுள்ளனர். அவர்களுக்குப் புதுவாழ்வு அளிப்பதற்காகத் திட்டங்கள் நன்கு வகுக்கப்பட்டுள்ளன. இவர்களில் 579 குடும்பத்தினருக்கு நிலமும், உழவு மாடுகள், ஏர்கள், கறவை மாடுகள், ஆடுகள் முதலியவை வாங்க வங்கி வசதியும் அளிக்கப்பட்டுள்ளன. இத்தகைய கொத்தடிமைகள், சிறு உழவர்கள் வட்டாரப் பகுதியிலிருப்பினும் மிகக் குறைந்த நிலமுள்ள உழவர்கள் வட்டாரப் பகுதியிலிருப்பினும் கடன் தொடர்பாகவும் வட்டி வீதம் தொடர்பாகவும் அவர்களுக்கும் அதே அளவில் உதவித் தொகைச்சலுகை அளிப்பதென இம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

## குடும்பநலத் திட்டத்தில் புதிய இலக்கு

குடும்ப நலத் திட்டத்துக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. அறுவைச் சிகிச்சைக்கான இலக்கு 2,11,000 ஆக இருந்தது

ஐந்து இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மரம் வளர்த்தல் என்ற மற்றொரு முக்கிய வேலைத் திட்டத்தையும் நாம் மேற்கொண்டுள்ளோம். இரு மருங்கிலும் மரம் வளர்த்து, நிழற்சாலைகளை உருவாக்குதல், கால்வாய்க் கரைமீதும், ஏரிப் படுகையிலும், ஊராட்சி-அரசு தரிசு நிலங்களிலும் கல்விக் கூடங்களிலும் மரம் வளர்த்தல் ஆகியவை வலியுறுத்தப்படும்.

துரதிர்ஷ்டவசமாக, கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழை பொய்த்ததன் காரணமாக இம்மாநிலம் வறட்சி நிலைக்கு உள்ளாயிற்று. 15 மாவட்டங்களில் 10 மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும், குடி தண்ணீர்ப் பற்றுக்குறையும், அம்மாவட்டங்களில் கடுமையாக உள்ளது. அன்றியும் சில பகுதிகளில் வேலையின்மைச் சிக்கல் பல்வேறு படிகளில் நிலவி வருகிறது. குடி தண்ணீர்த் தட்டுப்பாட்டினைப் போக்குவதற்காக, ஆழமான துளைக் கிணறுகளை அமைக்கும் திட்டம் 1976 பிப்ரவரியில் சிறப்பாகத் தொடங்கப்பட்டது. 1976 மார்ச்சுத் திங்களுக்கும் ஜுலைத் திங்களுக்கும் இடையில் சுமார் 3,000 கிணறுகள் ஏற்கெனவே





அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் பாதிக்கும் மேற்பட்டவை அரிசனங்கள் வசிக்கும் பகுதிகளில் அமைந்துள்ளன. செப்டம்பர் முடிய, 6,700 துளைக் கிணறுகள் அமைப்பதெனவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவைதவிர, 2,000 சாதாரணக் கிணறுகள் ஆழப்படுத்தப்படுகின்றன. பற்பல நகராட்சிகளில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு இருந்து வருகிறது. துளைக் கிணறுகள் அமைக்க அல்லது குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டினை வேறு வகையில் போக்க நகராட்சிகளுக்கு 54 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## வறட்சி நிவாரணப் பணிகளில் தனிக் கவனம்

வறட்சி நிவாரணப் பணிகளைப் பொறுத்தவரை, நிலைத்தபயன் அளிக்கவல்ல பணிகளில் தனிக்கவனம் செலுத்தி வருகிறோம். சிறுபாசன, நடுத்தரப் பாசனத் திட்டங்கள், மண்வளப் பாதுகாப்புப் பணிகள், காடுவளர்ப்பு, கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல் முதலியன இத் திட்டங்களாகும். இப்போதுள்ளபடி, இத்திட்டங்களால் நாள் ஒன்றுக்குச் சற்றேறக்குறைய ஒரு இலட்சத்து இருபதாயிரம் தொழிலாளர்கள் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர்.

இப்போது வகுத்துள்ளபடி இத்திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்ற 20 கோடி ரூபாய் அளவில் நமக்குச் செலவு ஏற்படும். துயர்நிலையைத் துடைப்பதற்குப் பணத்தட்டுப்பாடு காரணமாக இருக்காது என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. தேவையான கூடுதல் பணிகளுக்கு அனுமதி வழங்கப்படும்.

## பொதுநலத்தைப் போற்றுகின்ற எண்ணப்போக்கு

துரதிர்ஷ்டவசமாக 1976-77 ஆம் ஆண்டு வேளாண்மைப் பருவம் நல்லபடியாகத் தொடங்கவில்லை. தென்மேற்குப் பருவமழையும் மிகக் காலந்தாழ்த்திப் பெய்யத் தொடங்கியுள்ளது. இப் பருவமழை மேலும் வலுப்பட்டு நல்ல முறையில் பெய்வதற்கு வேண்டிய காலம் இன்னும் உள்ள தென்றாலும், எந்த நிலையையும் எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கவேண்டும். நாம் இவ்வகையில் எடுத்துள்ள பல நடவடிக்கைகளில், தற்காலிக மின் சார வெட்டும் ஒன்றாகும். பொதுவாக அணைக் கட்டுகளிலிருந்து-சிறப்பாக மேட்டூர் அணைக்கட்டி லிருந்து பாசனத்துக்காகத் தண்ணீர் விடுவதை முறைப்படுத்தி வருகிறோம்.

இப்பிரச்சினைகள் ஒவ்வொன்றுக்கும் தீர்வு காண இம்மாநில அரசு முறையான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்றாலும், இவற்றோடு, மக்களுக் கான மற்றைய திட்டங்களிலும் கூட்டாக முயற்சி எடுக்க வேண்டும் என்ற ஒருமித்த உணர்ச்சி, ஒழுங் கும் கட்டுப்பாடும் இணைந்த உணர்வு, உறுதியான நெஞ்சுரம், தன்னைப்போலவே பொதுநலத்தையும் போற்றுகின்ற-குறிப்பாக ஏழை எளிய மக்களின் நலத்துக்கு உதவி புரிவதில் ஊன்றிய எண்ணப் போக்கு முதலிய இலட்சியங்கள் அனைவரிடமும் அமைய வேண்டுமென ஆர்வத்தோடு எதிர்பார்க் கிறோம்.

[தமிழ்நாடு ஆளுநர் ஆலோசகர் திரு. பி. கே. தவே, ஐ. ஏ. எஸ்., அவர்கள் 1—8—1976-ல் சென்னை வானொலியில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்]

---

தமிழரசு அச்சகம், சென்னை-600 002.

# தமிழரசு

## இலவச இணைப்பு